

KALKI 7.8.94
ரூ. 3.00
கல்கி
சினிமா
சிறப்பிதழ்

வாழ்த்துகிறோம்!



அன்று, திரையுலகில் புகுந்து, புரண்டு, எழுந்து,
விளையாடி, நின்று, நிமிர்ந்து, நீண்டு உயர்ந்து
வெள்ளித்திரை முதல் வண்ணத்திரை வரை
வெற்றிக்கொடி நாட்டி


இன்று, பொன்விழாக் கண்ட கலியுகக் 'கல்கி' யில்
மூடிய மனத்திரை முழுதும் திறந்து
வாழ்க்கை அனுபவங்களை வள்ளலாய்
அளித்திட இருக்கும் "இயக்குநர் சிகரம்"
கே. பாலசந்தர் அவர்களின்
வளர்பிறைத் தொடர்
பூரண நிலவாய் பொலிவுடன் திகழ
வாழ்த்துகிறோம்.

அன்புடன் **எஸ். பாலசுப்ரமணியம்**

Balu Jewellers

DIAMONDS ◆ GOLD ◆ SILVER

72, USMAN ROAD, T. NAGAR, MADRAS 600 017
Phone: 4343030, 4341812, 4341741 Fax: 044-4343377



திறமை
மறுமலர்ச்சி
தன்னம்பிக்கை
புரட்சி
கூர்மை
தெளிவு
துடிப்பு
இனிமை
நினைவலைகள் அடுத்த பக்கம்...

நினைவலைகள்

1

A film should have a beginning, a middle and an end; But not necessarily in that order.
— Jean. Luc Godard

ஃப்ளாஷ்பாக்..

பின்னோக்கிச் சென்று கலைத்துப் பார்க்கும் நினைவுகளுக்கும் திரைப்பட இயக்குநர் 'கோடார்ட்' கூறிய கோட்பாடு பொருந்துகிறது.

"சுற்றும் வரை பூமி;
உழைக்கும்வரை மனிதன்!"

எனது 'வானமே எல்லை' திரைப்படத்தில் வருகின்ற கவியரசு வைரமுத்துவின் வரிகள்.

என்னைப் பொறுத்தமட்டில் சுற்றிக் கொண்டேயிருந்த பூமி சற்று நின்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டது.

1972 ஆம் ஆண்டு.

வெள்ளி விழா படத்தின் ஷூட்டிங் நடந்து கொண்டிருந்த சமயம். வாஹினி ஸ்டுடியோவில் ஆறாவது ஃப்ளோரில் பெரிய பணக்கார வீடு செட் போடப்பட்டிருந்தது. அன்றுதான் அந்த செட்டில் படப்பிடிப்பு ஆரம்பம். நான் போனவுடன், அமைக்கப்பட்டிருந்த செட்டை ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டுச் சில திருத்தங்களைச் சொல்லிவிட்டு ஒளிப்பதிவாளர் பாலகிருஷ்ணனிடம் முதல் ஷாட்டை எப்படி எடுக்கப் போகிறோம் என்பதைச் சொல்லிவிட்டு, அன்றைய தினம் எடுக்கப்பட விருக்கும் காட்சியை எனது உதவியாளர்களிடம் விளக்கிக் கொண் டிருந்தேன். முதுகுப்பக்கம் மேல்புறம் லேசாய்வலி. கையால் சற்று நீவி விட்டுக் கொண்டே சொல்லிக் கொண்டிருந்தேன்.

லைட்டிங் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தது. அப்பொழுதெல் லாம் என்னால் ஓர் இடத்தில் உட்கார முடியாது; குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தேன். முதுகுப் பக்க வலி அதிகமாகிக் கொண்டே வந்தது. கம்பெனி மேக்அப் மேன் சுந்தரமூர்த்தியை அழைத்து, 'எந்த மேக்கப் அறை காலியாக இருக்கிறது?' என்று கேட்டேன்.

'எதற்கு ஸார்?' என்று கேட்டவனைச் சற்றுக் கடிந்து கொண்டு, 'ஒரு மேக்கப் அறைக்கு அழைத்துப் போ' என்று கட்டளையிட்டேன். முதுகுப் புறம் வலிக்கும் இடத்தைக் காட்டி, அழுத்தித் தேய்த்துவிடச் சொன்னேன். வலி லேசாய் இறங்கிய மாதிரி உணர்ந்தேன். அதற்குள் "லைட்டிங் ரெடி." என்று தெரிவித்தார்கள். 'செட்'டுக்குப் போனேன்.

அந்தப் படத்தின் கதாநாயகி வாணிஸ்ரீக்கு அன்றுதான் முதல் நாள் படப்பிடிப்பு... இன்னமும் மேக்கப் நடந்து கொண்டிருப்பதாகச் சொன் னார்கள். மறுபடியும் முதுகுவலி அதிகமாயிற்று. எனது நண்பரும் குடும்ப டாக்டருமான ஜகதீசன் அவர்களுக்கு போன் செய்து வரச் சொல்லிவிட்டு மீண்டும் காலியாக இருந்த மேக்கப் அறைக்குச் சென்றேன். டாக்டர் வந்தார்; ஜகதீசன் ஓர் அற்புதமான நண்பர் மட்டுமல்ல; ஒரு திறமைமிக்க டாக்டர்; ஒரு நல்ல Humorist. எந்த நேரத்திலும் ஹாஸ்யமாகப் பேசுவார். அவர் என்னைப் பரிசோதித்துப் பார்த்துக் கொண்டேயிருக்கும்போது நான் கேட்டேன் : "என்ன டாக்டர், இன்னிக்கு உங்கள் நெற்றியிலிருக்கும் விபூதிப் பொட்டின் சைஸ் பெரிதாக இருக்கிறதே...?"

"அது ஒன்னுமில்லே! நெற்றி கொஞ்சம் அகலமாகிக் கொண்டே வருகிறது. அது தெரியாமலிருக்க விபூதிப் பொட்டைப் பெரிதாக ஆக்கிக் கொண்டே வருகிறேன்" என்று தமாஷாகச் சொன்ன ஜகதீசன், "படப்பிடிப்பைக் கான்சல் பண்ணிக்குங்க, நேராக வீட்டிற்குப் போக லாம்" என்றார்.

எனக்குத் துக்கிவாரிப் போட்டது.

"இன்னிக்கு வாணிஸ்ரீ கால்ஷீட்; அதை நான் 'மிஸ்' பண்ணவே முடி யாது" என்று மன்றாடினேன்.

அவர் சிரித்தபடியே, "இன்னிக்குப் பிரதம மந்திரி கால்ஷீட்டாகவே இருந்தாலும் 'மிஸ்' பண்ணித்தான் ஆகவேண்டும்; வாங்க போகலாம்" என்று சொல்லி என்னை அவர் காருக்குள் உட்கார வைத்தார்.

படப்பிடிப்பு கான்சல் ஆயிற்று.

நான் டாக்டர் ஜகதீசனுடன் காரில் போய்க் கொண்டேயிருக்கிறேன். வழக்கத்திற்கு விரோதமாக ஜகதீசன் மௌனமாகக் காரை ஓட்டிக்

கொண்டு வந்தார்.

அவரது மௌனம் என்னைச் சற்று பயத்திற்குள்ளாக்கியது...

"டாக்டர்! என்னவா இருக்கும்னு நீங்க நினைக்கிறீங்க?"

" 'இருதயம்'னு ஒண்ணு இருக்கு தெரியுமா?" - இது அவர்.

அப்பொழுது மிகவும் பிரபலமான இருதய சிகிச்சை நிபுணரான டாக்டர் ஆர். எஸ். ராஜகோபால் அவர்களுக்கு வாஹினி ஸ்டுடியோவிலிருந்தே, எனக்குத் தெரியாமல் போன் செய்து அவரை என் வீட்டிற்கு உடனே வர ஏற்பாடுகள் செய்திருக்கிற விஷயத்தைக் காரில் வரும்போது சொன்னார்.

VAHINI TO WARREN ROAD —

நீண்ட பயணமாக எனக்குத் தெரிந்தது. வழிநெடுக ஒரே சிந்தனை. 'இதுதான் 'ஹார்ட் அட்டாக்' என்பதா? அப்படியானால் என்னுடைய கடைசி அத்தியாயம் எழுதப்பட்டு விட்டதா?'

நன்னிலம் பள்ளியில் படித்தது; அண்ணாமலை சர்வகலா சாலையில் பட்டப்படிப்பை முடித்தது; ஓராண்டு காலம் முத்துப்பேட்டையில் ஆசிரியராகப் பணி புரிந்தது; அக்கவுண்டண்ட் ஜெனரல் அலுவலகத்தில் 13 ஆண்டுகள் பணிபுரிந்தது; நாடக உலகில் ஒரு சின்ன மறுமலர்ச்சிக்கு வித்திட்டது; மக்கள் திலகம் எம்.ஜி.யார் உபயத்தில் திரையுலகத்தில் நுழைந்தது; அங்கே எனக்கென்று ஒரு தனி இடத்தை ஏற்படுத்திக் கொண்டது; எல்லாம் 'ஃப்ளாஷ்பாக்'கில் மனத்திரையில் 'பாலசந்தரின் முத்திரை'களோடு ஓடி மறைந்தன!

இத்தனை வருடங்கள் வாழ்ந்து பெயரும் புகழும் சம்பாதித்திருந்த போதிலும் இந்தச் சமுதாயத்திற்கு என்னுடைய Contribution என்ன? நான் வாழ்ந்ததற்கு அறிகுறியாக இந்தச் சமுதாயத்திற்கு - இந்த உலகத்திற்கு நான் எதை விட்டுச் செல்கிறேன்; எனது நினைவாக எனது பரிசளிப்பாக?

நாங்கள் வந்து கொண்டிருந்த கார் ஜெமினி ஸ்டுடியோவைக் கடந்து கொண்டிருந்தது. அப்பொழுது அங்கு மேம்பாலம் இல்லை; கார் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தேன்...

'லாங் ஷாட்'டில் ஒரு திரைப்பட பானர் தெரிகிறது... அது என்னுடைய திரைப்படம் 'புன்னகை'... கார் போகப் போக அந்த பானர் எனது பார்வையிலிருந்து மறைகிறது. நான் எண்ணிப் பார்க்கிறேன். எத்தனையோ புதுமை நாடகங்களை நான் தயாரித்து மேடை ஏற்றியிருக்கலாம்; எத்தனையோ வெற்றிப் படங்களைத் தமிழ்த் திரைக்குத் தந்திருக்கலாம்;



• புன்னகை... (படம் உதவி : பிலிம் நியூஸ் ஆனந்தன்)

ஆனாலும் இந்தப் 'புன்னகை' திரைப்படம் எனக்குக் கொடுத்த ஆத்ம திருப்தியை என்னுடைய வேறு எந்தப் படைப்பும் எனக்குக் கொடுத்திருக்கிறதா?

பெரிய சக்தி வாய்ந்த மாஸ் மீடியத்தை எனது உள்ளங்கைக்குள் அடக்கி வைத்திருக்கும் நான், என்னைச் சுற்றியுள்ள இந்தச் சமுதாயத்தின் ஏற்றத்திற்காக, அதை எந்த வகையிலே பயன்படுத்தியிருக்கிறேன்...?

எனது திரையுலக சரித்திரத்திலே எனது சாதனை, எனது Contribution இந்தப் 'புன்னகை' திரைப்படம் மட்டும்தானா?

கார் 'காமாட்சி இல்லத்'தின் காம்பவுண்டிற்குள் வந்து நின்றது. அதே நேரத்தில் இருதய சிகிச்சை நிபுணர் ஆர். எஸ். ராஜகோபால் அவர்களும் E.C.G. கருவியுடன் வந்து சேர்ந்தார்.

E.C.G. எடுக்கப்பட்டது.

தாறுமாறாகப் படம் ஓடியது; "Massive heart attack" உர்ஜிதப்படுத்தப்பட்டது...

Cut to — வெல்லிங்டன் நர்சிங் ஹோம்...

Cut to — இன்டென்சிவ் கேர் யூனிட்....

Cut to — குறுக்கும் நெடுக்குமாக உடலில் செல்லும் wire களுடன் நான்... பக்கத்தில் E.C.G.... பிராணவாயு செலுத்தும் குழாய்! etc. etc.....

ஏகப்பட்ட ஊசிகள் என் உடலில் செலுத்தப்படுகின்றன...

அடுத்த இருபத்தி நான்கு மணி நேரங்களில் என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது.

நான் கண்விழித்தபோது எதிரே ஒரு

கே.பாலசந்தர்

டாக்டர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர்தான் ஆர். எஸ். ராஜகோபால் அவர்களின் உதவி இருதய சிகிச்சை டாக்டர் என்று பின்னால் தெரிய வந்தது. அவர்தான் அன்று இரவு பூராவும் கண் விழித்திருந்து எனது இருதயத்தை மானிடர் பண்ணிக் கொண்டிருந்திருக்கிறார்.

நான் கண் விழித்ததும் என்னைப் பார்த்துச் சிரித்தார்.

"மிஸ்டர் பாலசந்தர்! உங்களை எமனிடமிருந்து மீட்டுக் கொண்டு வந்திருக்கிறோம்" என்றார்.

அருகே நின்று கொண்டிருந்த என் மனைவியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

ஆண்டவனுக்கு நன்றி சொல்வதைப் போல் தனது தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். தமிழ் சினிமாக்களில் இந்தக் காட்சியைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அன்று நேராகப் பார்த்தேன்.

டாக்டர் அப்பு தொடர்ந்தார்: "வேறு எந்தக் கெட்ட பழக்கங்களும் இல்லாத உங்களுக்கு இப்படி ஆபத்தான ஹார்ட் அட்டாக் வந்ததற்குக் காரணம், கட்டுப்பாடே இல்லாமல் நீங்கள் சிகரெட் பிடிப்பதுதான்."

நான் குற்ற உணர்வுடன் அவரைப் பார்த்தேன்.

"பிழைத்திருந்தால் இனி சிகரெட்டைத் தொடவே மாட்டேன்" என்றேன்.

நம்பிக்கையில்லாத ஒரு சிரிப்பு அவர் முகத்தில் தவழ்ந்தது.

"இது சத்தியம்" என்று உரக்கக் கூவினேன்.

மெதுவாகப் பேசச் சொல்லிக் கைகளால் சைகை காட்டிய டாக்டர் அப்பு கேட்டார்:

"உங்களுக்கு என்ன வயது?"

"I am twenty-one"

டாக்டருக்கு அதிர்ச்சி!

"I mean.... twice twenty-one!"

அப்பு சிரித்தார்.

நான் மெல்லிய குரலில் தொடர்ந்தேன்: "ஹாலிவுட் இயக்குநர் 'ஆல்ஃபிரெட் ஹிட்ச்காக்' அவர்களை ஒரு நிருபர் உங்கள் வயதென்ன என்று கேட்டபோது அவர் சொன்னதும் இப்படித்தான்! 'I am twice thirty seven" என்று...!"

டாக்டர் அப்பு இப்பொழுது சிரிக்கவில்லை. எனக்கு உடம்புக்கு ஒன்றுமேயில்லையென்றும், நூறு சதவிகிதம் நார்மலாக இருக்கிறேன் என்றும் டாக்டரிடம் காட்டிக் கொள்ள வேண்டுமென்கிற செயற்கையான ஆர்வத்தில் இப்படி 'ஜோக்' அடித்தேன் என்று இப்பொழுது தோன்றுகிறது.


Probably I had over acted.

டாக்டர் அப்பு திடீரென்று நினைத்துக் கொண்டு சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தைச் சுட்டிக் காட்டினார்.


நர்ஸ் உடையில் ஒரு பெண் தனது ஆள் காட்டி விரலை வாய்க்கு நேராக வைத்து "உஷ்" என்று சைகையில் சொல்வது போல் அந்தப் படம் இருந்தது.

(நினைவுகள் தொடரும்)

வண்ணப்படம் : யோகா



Kalki Shopping Page



STEP IN FOR
Raymond's
DIGJAM
SUITINGS & SHIRTINGS

NEWLOOK TAILORS

WE ACCEPT CREDIT CARDS

Opp. : T. Nagar Bus Terminus
Madras - 17 Phone : 44 34 40
NO BRANCHES
We specialise in Bridegroom's dress to make the bride proud.





ஜெயலலிதாவைப் பற்றி எம். ஜி. ஆர். கூறிய ஆருடம்!

இன்னும் பல சுவையான திரை உலகத் தகவல்களுக்குப் படியுங்கள்

திரைக்குப் பின்னால்....

(பொம்மை) 'மங்கை' துணை ஆசிரியர்
ஏ. சுவாமிநாதன் தொகுத்தது
ரூ. 20.00 மட்டும்.

அல்லயன்ஸ் கம்பெனி

தமிழ்ப் பதிப்பக உலகில் நூற்றாண்டை நெருங்கும் முதல் நிறுவனம்



244, ராமகிருஷ்ண
மடம் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004.
போன் : 4941314


செல்வம்

வாட்டர் பில்டர்

இனிமேல் இதுவரை
நீங்கள் கண்டதில்லை
செயல் திறனிலும்,
அடக்கமான
விலையிலும்.

எமது இதர தயாரிப்புகள்:

இட்லி குக்கர்,
இட்லி பானை, மில்க் பாய்லர்.



தரம்மிக்க ஸ்டெயின்லஸ் ஸ்டீல் தகடுகளினால் தரக்கட்டுப்பாட்டுடன் தயாரிக்கப்பட்டது.



எல்லா முன்னணி
கடைகளிலும்
கிடைக்கும்.

விற்பனையாளர்:

லிங்க பெருமாள்
மெட்டல் ஏஜென்சி,
10, வெங்கு செட்டி லேன்,
சென்னை – 3. போன் : 568998

Kalki Shopping Page

ZOOM

இந்திப் படவுலகில் நேபாளத்தின் ஆட்சி!

மனிஷா கொய்ராலா, அண்மையில் பதவி விலகிய நேபாளப் பிரதமரின் ஒரே மகள். ஸ்கேலை வைத்து கோடிழுத்தது போன்ற கூர்மையான மூக்கும், அழகான இதழ்களும், பட்டாம்பூச்சிக் கண்களும், கொஞ்சமும் நேபாளித்தனத்தைப் பிரதிபலிப்பதாயில்லை. 'குட்டு' படப்பிடிப்பிற்காகத் திறந்தவெளி அரங்கில் மூடிய ஏ.ஸி. வேனுக்குள் அமர்ந்து 'மேக்கப்' செய்து கொண்டிருந்தார். அவரது 'தரிசனத்து'க்காக, மழையையும் பொருட்படுத்தாமல் மணிக் கணக்கில் கால்கடுக்க வெளியே காத்து நின்ற கூட்டத்தைப் பார்த்ததும் தான் மனிஷா கொய்ராலா ஏன் தந்தை வழி அரசியலுக்குப் போகாமல் சினிமாவைத் தேர்ந்தெடுத்தார் என்பது விளங்கியது! அந்தக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு சினிமா சிறப்பிதழுக்காகப் பேட்டி கண்டோம்.

கேள்வி : *அரசியல் பின்னணியில் பிறந்தும் கலைத் துறையில் காலடி வைத்திருக்கிறீர்களே! இதில் காலூன்றி விட்டதாக நினைக்கிறீர்களா அல்லது தடுமாற்றங்கள் உள்ளனவா?*

மனிஷா கொய்ராலா : சினிமாத் துறையில் முழு மனத்துடன்தான் நான் நுழைந்தேன். என் தாயே கலைத்துறையைச் சேர்ந்தவர் தான்! (கலாக்ஷேத்ராவில் ஏழு வருடம் பரதம் பயின்றதாக, அருகிருந்த 'அம்மா' பெருமிதப் பட்டார்). அதனால் என் பெற்றோரும் பூரண சம்மதம் வழங்கினர். நல்லவேளை சினிமாவைத் தேர்ந்தெடுத்தேனே என்று நான் அடிக்கடி சந்தோஷப்படுகிறேன். பலர் நினைத்துக் கொண்டிருப்பது போல் இது 'அகௌரவமான' துறையில்லை. இங்கேயும் பண்பாளர்கள், உயர்ந்தவர்கள், அறிவாளிகள் இருக்கிறார்கள். நடிப்பும் இன்ஜீனியரிங், மருத்துவம் போல் ஒரு 'ப்ரொஃபெஷன்'தான்! அதற்கும் திறமை வேண்டும். எல்லோராலும் நடித்து விட முடியாது. அந்த அடிப்படையில், நான் இத் துறையில் காலூன்றி, ஓரளவு சாதித்திருக்கிறேன் என்ற மனநிறைவு எனக்கிருக்கிறது. இதில் வேரூன்றிப் படர வேண்டும் என்ற குறிக்கோளுமிருக்கிறது.

கே : *சாதனை என்று நீங்கள் குறிப்பிடுபவை எவை? 'சௌதாகரின்' பெரு வெற்றிக்குப் பிறகு கொஞ்ச காலம் நீங்கள் வெளிச்சத்துக்கு வரவில்லையே?*

மனிஷா : உண்மைதான்! முதலில் நடித்த 'சௌதாகர்' ஸூப்பர் ஹிட்டாயிற்று! ஆனால் இத்துறை அப்போதுதான் எனக்கு அறிமுகமாயிருந்தது. 'மெச்சூரிட்டி' இல்லாத காரணத்தால் பின்னர் நடித்த சில படங்கள் எடுபடவில்லை. ஆனால் இப்போது ஓரளவு முதிர்ச்சி ஏற்பட்டிருப்பதால், நல்ல பாத்திரங்களையே ஏற்பது என்ற முடிவுக்கு வந்து அப்படியே செயல்படுகிறேன். '1942 லவ் ஸ்டோரி' பாத்திரம், மக்கள் மனத்தில் ஒரு தனியிடத்தைப் பிடித்திருக்கிறது. பார்த்தவர்கள் அனைவரும் அதன் கலைநயத்தை ஒருமுகமாகப் பாராட்டுகிறார்கள். அதே போல் மணிரத்தினம் அவர்கள் 'பம்பாய்' என்னும் தமிழ்ப் படத்தில் வழங்கியிருக்கும் ரோலும் பேசப்படக்கூடியதாக இருக்கும்!

கே : *தமிழ்ப்பட அனுபவம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

மனிஷா : ஷூட்டிங்கை பொருத்தவரை வடக்குக்கும் தெற்குக்கும் அதிக வித்தியாசமில்லை. தெற்கில் கொஞ்சம் 'டிஸிப்ளின்' அதிகம். மணிரத்தினம் அவர்கள் யூனிட்டில், கண்டிப்பும் கறாரும் ஜாஸ்தி! தெரியாத ஒரு மொழியில் நடிப்பதென்பது எனக்குப் பெரிய சவாலாகப் பட்டது. அதுவே ஆர்வத்தையும் அதிகரித்திருக்கிறது. 'பம்பாய்' படத்தைப் பற்றி நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை! மணிரத்னம் அதைப் பற்றி அதிகம் பேச வேண்டாமென்று சொல்லியிருக்கிறார். ஆனால் ஒன்று மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். மணிரத்னம் ஒரு ஜீனியஸ்! அவரைப் போல் புத்திசாலித்தனமாக - அர்த்தமுள்ள படங்களை எடுப்பவர்கள் இன்று மிகவும்

குறைவு!

கே : இன்றைய முன்னணி நடிகைகள், வெற்றிப் படிகளைக் கடக்க நடிப்புத் திறனைக் குறைவாக வும், உடல் கவர்ச்சியையே அதிக மாகவும் உபயோகிப்பதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளதே, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

மனிஷா : அழகான உடல் என்பது, போற்றப்பட வேண்டிய விஷயமே. அதைக் கவர்ச்சியாகக் காட்டுவது தவறில்லை. கலைநயத் துடன் அமைந்திருக்கும் போது காண் பவர்கள் மனத்தில் ரம்மியமான உணர்ச்சி ஏற்பட வேண்டும்; விரசம் ஏற்படக் கூடாது. அதே போல், வெறும் உடலழகை மட்டுமே காட்டு வதால் ஒரு நடிகை பிரபலமாக முடியுமேயன்றி நிலைத்து நிற்க முடியாது. அழகுடன் திறமையும் சேரும் போதுதான் ஸ்திரத்தன்மை ஏற்படுகிறது.





கே : இப்போதெல்லாம் நடிகைகள் 'நான் கவர்ச்சியாக நடித்திருக்கலாம்; ஆனால் ஆபாசமாக இல்லை' என்று சொல்வது சகஜ மாகி விட்டது. கவர்ச்சிக்கும் ஆபாசத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?

மனிஷா : ஒரு பெண்ணுக்கு இயற் கையாகவே தெரியும், கவர்ச்சி எங்கே முடிந்து ஆபாசம் எங்கே ஆரம்பிக்கிறதென்று! நான் அந்தக் கட்டத்தில் நிச்சயம் நிறுத்திக் கொண்டு விடுவேன். கவர்ச்சி என்பது இயல்பாக ஏற்படும் ஒன்று; அது அழகு! அது இயற்கை! விரசமென் பது வேண்டு மென்றே திணிக்கப்படுமொன்று! அது அழுக்கு; அது அசிங்கம்!

கே : வெற்றிக்குக் கவர்ச்சி என்பது அவ் வளவு இன்றியமையாததாகவா இருக்கிறது?

மனிஷா : என்ன செய்வது? மக்கள் விரும்பிப் பார்ப்பது அதைத்தானே! 'சோலி கே பீச்சே'க்காக 'கல்நாயக்' அடைந்த வெற்றியை மறுக்க முடியுமா? ரசிகர்கள் கேட்பதைத் தயாரிப்பாளர்கள் வழங்குகிறார் கள். டைரக்டர் சொல்வதை ஆர்டிஸ்டுகள் கேட்கிறார்கள். ஆனால், இவற்றை மீறி நல்லனவற்றை மக்களுக்கு வழங்கி, அவர் களது ரசிப்புத்தன்மையை உயர்த்தவும் சினி மாவால் முடியும்! இது ஒரே நாளில் ஏற்படக் கூடிய மாற்றமில்லை; சில டைரக்டர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பது வரவேற்கத்

• போடோ

தோடாவும் போடோவும்

பயங்கரவாதிகள், காஷ்மீர் பள்ளத்தாக்கிலிருந்து இப்போது ஜம்மு பகுதியிலும் நுழையத் தொடங்கி விட்டார்கள். தோடா மாவட்டம், ஜம்மு பகுதியின் நுழைவாயில் போல. ஏழு தாலுக்காக்கள் கொண்ட சிறு மாவட்டம். மொத்த ஜனத்தொகையில் சுமார் 55% முஸ்லிம்கள்; மீதி இந்துக்கள். இந்த தோடா மாவட்டத்தில் காஷ்மீர் பயங்கரவாதிகளின் வெறியாட்டம் சமீப காலமாய் அதிகரித்து வருகிறது.

தோடாவில் தோன்றியுள்ள இந்தப் பிரச்னையை முளையிலேயே கிள்ளி எறியக் கோரி, பாரதீய ஜனதா கட்சி தோடா மாவட்டத்தில் சிறை நிரப்பும் போராட்டம் நடத்தியது. அத்வானி, வாஜ்பாயி போன்ற பல பா.ஜ.க. தலைவர்கள் இந்த சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு, கைதானார்கள்.

அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கைதான தமிழக பா.ஜ.க. தலைவர்களுள் ஒருவரான எல். கணேசன் கூறுகிறார் : "தமிழகம் மற்றும் கேரளாவிலிருந்து பா.ஜ.க. தொண்டர்கள் நூற்றுக் கணக்கில் தோடா சென்று, தமிழிலும், மலையாளத்திலும் 'காப்போம்! காப்போம்! காஷ்மீரைக் காப்போம்!' என்று கோஷம் போட்டோம். இதன் மூலம் இந்தியாவின் வடகோடியில் இருந்தாலும், காஷ்மீரைக் காப்பாற்றத் தென்கோடி இந்தியனும் குரல் கொடுப்பான்; உயிரையும் கொடுப்பான் என்பதை அனைவருக்கும் புரிய வைத்திருக்கிறோம்."



பங்களாதேஷில் இருந்து வந்து அஸ்ஸாமின் ஒரு பகுதியில் குடியேறி, நிரந்தரமாகத் தங்கி விட்ட ஆயிரக்கணக்கானவர்கள் காரணமாக எழுந்ததுதான் போடோ பிரச்னை. மிகக் குறைந்த கூலிக்கு வேலை செய்பவர்கள் இவர்கள்; வோட்டு வங்கிக்கும் கணிசமாக உதவுகிறார்கள் என்பதால், இவர்களை வெளியேற்றாமல் இருப்பதற்கு மனிதாபிமானத்தை விட சுயநல அரசியல் தான் காரணம்.

சென்ற ஆண்டு கடைசியில் அமலுக்கு வந்த போடோலாண்ட் சுயாட்சி கவுன்சிலின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதியான பார்பேட்டா மாவட்டத்தில் இந்த அகதிகள் முகாம்கள் இருக்கின்றன. தவிர, பார்பேட்டா கிராமங்களிலும் இவர்கள் பரவலாக வசித்து வருகிறார்கள். 'போடோ பாதுகாப்புப் படை'யைச் சேர்ந்த தீவிரவாதிகள் இந்தக் கிராமங்களுக்குத் தீ வைத்தும், சுட்டுக் கொன்றும் அச்சுறுத்தி வருகிறார்கள்.

போடோ தீவிரவாதக் குழுக்களிலேயே பல பிரிவுகள் இருக்கின்றன. இவர்களில் ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு நிலை எடுக்க, முதல்வர் ஹிதேஷ்வர் சைக்கியா ஒரு தீர்மானமான முடிவு எடுக்க முடியாது திணறுகிறார். போதாக்குறைக்கு, மத்திய உள்துறை அமைச்சர் ராஜேஷ் பைலட்டுக்கும் சைக்கியாவுக்கும் ஆகவே ஆகாது.

போடோ அல்லாதவரின் நிலை பற்றி, போடோலாண்ட் ஒப்பந்தம் கையெழுத்தானபோதே கவலை தெரிவிக்கப்பட்டது. ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் அலட்சியமாய் இருந்து விட்டார்கள். போடோ அல்லாதவர்கள் தங்கள் பாதுகாப்புக்கு இப்போது ஆயுதம் கேட்கிறார்கள்.

முதல்வர் சைக்கியா முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் அரசியல் நோக்கர்களின் கருத்து.

— எஸ். சந்திரமௌலி; எஸ்.வி.என்.

தக்கது. அதுபோன்ற படங்களில் நான் நடிக்க முடிவெடுத்திருப்பதையும் நீங்கள் வரவேற்பீர்கள் என நினைக்கிறேன்.

கே : உங்கள் கணிப்பில் ஒரு நல்ல கதாநாயகி என்பவர் எப்படி இருக்க வேண்டும்?

மனிஷா : நடிப்பதற்கு நல்ல, வித்தியாசமான பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து நடிக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும். செய்வது எதுவாக இருந்தாலும், அது மக்கள் மனத்தில் 'பளிச்'சென்று பதியும்படி இருக்க வேண்டும்.

கே : உங்கள் பெயர் அடிக்கடி உங்களுடன் நடிக்கும் ஹீரோக்களுடனும், சில பிஸினஸ் மாக்னேட்டுகளுடனும் இணைக்கப்பட்டு காதல் கதைகள் உலா வருகின்றனவே! இவை வெறும் கதைகளா? அல்லது...?

மனிஷா : நான் மிகவும் வெளிப்படையானவள். எனக்கு நிறைய நண்பர்கள் உண்டு; நண்பிகளும் உண்டு; நேரம் கிடைத்தால் அவர்களுடன் வெளியே சுற்றவும், பொழுது போக்கவும் எனக்குப் பிடிக்கும். இன்று யாருடன் என்னைப் பார்க்கிறார்களோ அவர்களுடன் எனக்குக் காதல் பிறந்து விட்டதாகப் பத்திரிகையாளர்கள் எழுதி விடுவார்கள். மறுநாள் இன்னொருவருடன் பார்த்தால், முந்தைய நபருடன் கசமுசா என்றும், இப்போது இவரைப் பிடித்துக் கொண்டிருப்பதாகவும் திரிப்பார்கள். இது எதிலுமே உண்மையில்லை. இவை என்னை பாதிப்பதுமில்லை!

பேட்டியை முடித்துக் கொண்டு நாம் வெளிவரவும், 'மனிஷாவின் தரிசனம்' கிடைத்த நம் 'தரிசனமே' பெரிய விஷயம் போல், "அவர் எப்படி இருந்தார்? என்ன சொன்னார்?" என்றெல்லாம் துளைத்தெடுத்து மோதிய ரசிகர்களைக் கண்டதும், நேபாளத்தில் எப்படியோ, இந்தப் படவுலகில் கொய்ராலா ராஜ்ஜியம்தான் என நினைக்கத் தோன்றியது!

பேட்டி : **ஜெயஸ்ரீராஜ்**

அட்டையில் : **மனிஷா கொய்ராலா**

Kalki Shopping Page

உங்கள் மழலைச் செல்வம் அவனது மென்மையான மிருதுவான உலகம்.





பேக்கின் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளை கவனமாய் பின்பற்றுங்கள்.

அவனுக்கு நீங்கள் கொடுக்கும் முதல் திட உணவும் அவனைப் போலவே மிருதுவாக இருக்கட்டும்.

உங்கள் குழந்தைக்கு இப்பொழுது 4 மாதங்களாகிறது. இச்சமயம் அவனுக்கு தாய்ப்பால் மட்டுமல்லாமல் வேறு வகை உணவும் தேவை. ஏதாவது ஒரு திட உணவு. அதே சமயம் நீங்கள் அவனுக்கு தரும் திட உணவு மிருதுவானதாகவும் போஷாக்கு நிறைந்ததாகவும் இருந்திடல் அவசியம்.

ஆம், நெஸ்டம் தரும் போஷாக்கு போல - இது எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம். அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் நெஸ்டம், உங்கள் மழலைச் செல்வத்தின் மிகச் சரியான முதல் திட உணவாக அமைகிறது.

பாலுடன் நெஸ்டம் சேர்த்து உங்கள் குழந்தைக்கு ஸ்பூனால் ஊட்டுங்கள். இந்த ஆகாரத்தின் மூலம் அவன் வேகமாய் வளர்வதற்கு வேண்டிய எல்லா போஷாக்கு சக்திகளும் கிடைக்கின்றன.

உங்கள் செல்ல மகன் வளர வளர, நீங்கள் அவனுக்கு படிப்படியாய் புதிய ருசியுள்ள உணவு வகைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வகை ருசியை நீங்கள் எளிதில் மிருதுவாய் ஆரம்பிக்க நெஸ்டம் உங்களுக்கு உதவுகிறது. நெஸ்டம், பால் சேர்க்காத ஒரே குழந்தை ஆகாரமாய் இருப்பதால், இதை மிகச் சுலபமாய் மற்ற உணவு வகைகளுடன் கலந்திட முடியும். உதாரணமாய், குழைய வைத்த வாழைப்பழம் காய்கறிகள் மற்றும் தயிருடன் உங்கள் குழந்தைக்கு நெஸ்டம் கொடுங்கள். நெஸ்டம் தரும் எல்லா வித மிருதுவான தனிச் சிறப்பான போஷாக்குகளுடன் அவன் வளருவதைப் பாருங்கள்.

இலவசம்
நெஸ்டம் செய்முறை
புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25.
புதுதில்லி-110016

நெஸ்டம்

எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம்.

TS McCann/NESTUM/1492 TM

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனபின் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்கள்.

வெடிப்பதெல்லாம் குண்டல்ல; வீசுவதெல்லாம் புயலல்ல!



டுமீல்... துப்பாக்கி வெடித்துக் குண்டு பட்டு, ரத்தம் கொட்டி... இந்த குண்டு வெடிப்பும், அதே கணத்தில் ரத்தம் கொட்டுதலும் எப்படி நிகழ்கின்றன? 'இதைத்தான் சினிமா உலகில் ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ்' என்கிறோம்" என்று கூறுகிறார் ஏக்நாத்பாபு. இவர்தான் தென்னிந்தியாவின் நெம்பர் ஒன் ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் ஆசாமி.

"மிக மெல்லிய ரப்பரால் ஆன பை. அதிலே ரத்தம் போன்ற சிவப்பு திரவம். குறிப்பிட்ட காட்சியில் தோள் பட்டை, வயிறு, மார்பு, முதுகு இப்படி எங்கெல்லாம் குண்டடி பட வேண்டும் என்று டைரக்டரும், ஸ்டண்ட் மாஸ்டரும் சொல்கிறார்களோ அங்கெல்லாம் முதலில் மார்க் பண்ணிக் கொள்ளுவோம். பின் அந்த இடங்களில், உடையின் உட்புறத்தில் பைகளை பிளாஸ்திரி கொண்டு பொறுத்தி விட வேண்டும். பின்



• பாபு

அதில் ஒரு சிறு பட்டாஸை வைத்து, மெல்லிய ப்யூஸ் ஒயர் மூலம் பாட்டரியுடன் இணைக்கப்படும். டைரக்டர் ஸ்டார்ட் சொல்லி, காட்சி தொடங்கியவுடன், 'டுமீல்...' பாட்டரியுடன் இணைந்த பட்டனை அழுத்த, பட்டாஸ் வெடித்து, டூப்ளிகேட் ரத்தம் அடங்கிய ரப்பர் பைகள் உடைந்து, 'ரத்தம்'! ரீ-ரிகார்டிங்களில் வெடிக்கிற எஃபெக்டுக்கு சவுண்டு சேர்த்துக் கொள்ளுவார்கள்.

"வெடிகுண்டு வெடிக்கிற விஷயமும் சற்றேறக்குறைய இதே போலத்தான். நிஜ வெடி குண்டைப் பயன்படுத்த முடியாது என்பதால், இங்கேயும் சின்ன பட்டாஸ்தான் ஆதாரம். கலர் பொடிகளைப் பயன்படுத்தினால், குண்டு வெடித்து, புகை எழும்பித் தூள் கிளப்பி விடும். அவசியமானால் தெர்மோகோல் கொண்டு செயற்கையாய்க் கற்கள் தயாரித்துப் பறக்கச் செய்வோம்!"

புயல் காற்று என்றால் ஆறு அடி நீள பிளேடு கொண்ட ராட்சச ஃபேன் காற்றில், காய்ந்த இலைகள் பறக்கும்; மின்னலுக்கு இவர்கள் நாடுவது பவர்ஃபுல் ஆர்க் லாம்ப்.


"ஸ்பெஷல் எஃபெக்டில் வெடிக்கும் எஃபெக்ட், மெக்கானிகல் எஃபெக்ட், எலக்டிரிகல் எஃபெக்ட், நெருப்பு எஃபெக்ட், ஸ்டண்ட் எஃபெக்ட் என்று ஏகப்பட்ட பிரிவுகள் உண்டு. ஹாலிவுட்டில், ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு நிபுணர் இருப்பார். ஆனால் நம் நாட்டில் அனைத்து ஸ்பெஷல் எஃபெக்ட் விஷயங்களையும் நாமே கவனிக்க வேண்டியுள்ளது" என்கிறார் பாபு.

ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் உத்திகள், இன்று பாடல் காட்சிகளிலும் கையாளப்படுகின்றன. வீரா, டூயட், திருடா திருடா போன்ற படங்கள் உதாரணம்.

இத்தகைய உத்திகள், காட்சிகளுக்கு விறுவிறுப்புக் கூட்டி, மக்களால் வரவேற்கப்படுகின்றன என்றாலும், அரசு தரப்பிலிருந்து விருது வழங்கும் கௌரவம் இன்னும் தரப்படவில்லை! மேக்-அப் துறை போல இதுவும் ஓரம் கட்டப்படுகிறது.

- எஸ். சந்திரமௌலி





பாங்கு பத்திர ஊழலாவது... நாடாளு மன்ற கூட்டுக் குழு அறிக்கையாவது...! வெறும் குப்பை...!
நாளைக்கு நமக்கும் இந்த கதிதானா?
அம்மா தாயே... 69 கொடுத்த கருணைக் கடலே... சூடம் காட்டுறோம்... ஏத்துக் கிட்டு அருள் புரிவாய்..!
மாணவர் அணிச் செயலாளர்
மாணவர்கள்
என்னம்மா கண்ணு வத்தியவா சுட்டுறே? நம்ம மேலே கையை வெச்சேன்னு தெரிஞ்சா அம்மா உன்னை குண்டர் சட்டத்தில உள்ளே போட்டுடுவாங்க! பேப்பர் பாக்கலே? ஜாக்கிரதை...



ஸ்ரீ
கல்கி



1994
ஆகஸ்ட் 7
பவ
ஆடி 22
மலர் : 53
இதழ் : 1

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

காவல் துறையின் மானம் கப்பலேறுகிறது!

கலெக்டர்களையும் உயர் போலீஸ் அதிகாரிகளையும் அழைத்துப் பேசிய முதல்வர், முக்கியமாக மூன்று அம்சங்களைக் குறிப்பிட்டிருக்கிறார் : 1. போலீஸார் காவல் கைதிகளை மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டும்; 2. துப்பறியும் பிரிவு சுறுசுறுப்பு அடைதல் வேண்டும்; 3. வழிப்பறி மற்றும் கொள்ளைகளைத் தடுக்கத் தனி பிரிவு உருவாகும்.

இவற்றுள் முதலாவதும் மூன்றாவதும் இன்று எரியும் பிரச்னைகள். இவற்றின் தகிப்பைத் தணிக்கக் கூறப்பட்ட யோசனைதான் இரண்டாவது.

அடிக்கடி நிகழும் காவல் நிலையக் கற்பழிப்புகளும் காவல் நிலைய மரணங்களும் மக்களின் எரிச்சலையும் எதிர்ப்பையும் பெற்றுள்ளன. இவை தொடருமானால் இவற்றை அனுமதிக்கும் ஆட்சி மீது வெறுப்பு உருவாவது உறுதி. காவல் நிலைய அதிக்கிரமங்கள் நடக்கக் காரணங்கள், போலீஸாரிடம் உள்ள ஓர் உயர்வு மனப்பான்மையும் அதிகார மமதையுமே. போலீஸ் பயிற்சியின்போதே இதைச் சீராக்கி விட முடியும். 'போலீஸாரின் பணி, மக்களை கட்டுக்குள் அடக்கி வைப்பது மட்டுமல்ல; மக்களுக்குச் சேவகம் செய்வதும்தான்' என்பது ஒவ்வொரு போலீஸ்காரரின் உள்ளத்திலும் வேரூன்றச் செய்ய வேண்டும்.

குற்றவாளி என்று கருதப்படுகிற ஒருவன் காவல் நிலையத்துக்கு கொண்டு வரப்படும் போது, அவனைக் கேள்வி கேட்டு மடக்குகிற விதத்திலேயே போலீஸார் புத்திசாலித்தனம் காண்பித்தால், உண்மைகளை வெளிக்கொணர்ந்து விடலாம். அடித்து உதைத்துத்தான் கக்கச் செய்ய வேண்டும் என்பதில்லை. இந்த சாமர்த்தியம் இல்லாததால் தான் போலீஸார் தண்டப் பிரயோகத்தை நாடுகிறார்கள். எனவேதான் தகவல் பெறுதல் அல்லது துப்பறிதல் என்பதற்கு மறுபெயராக விளங்கும் 'இன்டெலிஜன்ஸ்' முக்கியத்துவம் பெறுகிறது. அறிவுபூர்வமாகவும் தர்க்கரீதியாகவும் சிந்தித்துச் செயல்படும் 'இன்டலிஜென்ஸ் துறை' முன்னேற்றமடைய வேண்டும் என்பதுதான் முதல்வரின் கோரிக்கையும் கூட.

இந்த 'இன்டலிஜென்ஸ்' செயல்பட்டிருந்தால் வி.வி. தாக்கப்பட்ட உடனே வழக்கறிஞர் விஜயன் அடுத்த இலக்காக இருக்கலாம் என்று ஊகித்துணர்ந்து செயல்பட்டிருக்க முடியும். விஜயனும் குண்டர்களின் தாக்குதலிலிருந்து தப்பியிருப்பார். முதல்வர் வருத்தம் தெரிவித்து அறிக்கை விட நேர்ந்திராது.

ஆக, 'இன்டெலிஜென்ஸ்' என்பதைக் குற்றம் நடந்த பிறகு குற்றவாளியைக் கண்டுபிடிக்க மட்டுமல்ல, குற்றங்களைத் தவிர்க்கவும் பயன்படுத்த இயலும். அவ்வாறு செயல்படும் போதுதான் கொள்ளை, வழிப்பறி முதலியன நடக்காமல் தடுக்க முடியும்.

ஏராளச் செலவில் போலீஸ் துறை நவீனப்படுத்தப்பட்டிருப்பதை நினைவூட்டினார் முதல்வர். அவ்வளவு செலவுகளை விழுங்கியுள்ள போலீஸ் துறை அதற்கேற்ற நற்பலனையும் மக்களுக்கு அளிக்க வேண்டுமல்லவா? சென்னையிலே மூலைக்கு மூலை புதிதாகப் பெறப்பட்ட வெள்ளை மாருதி ஜீப்கள் நிற்கின்றன. ஆனால் ஒரு கொள்ளை முயற்சி நடக்கிறதென்றால் அந்த வட்டாரத்தில் உள்ள போலீஸ் ஜீப் எத்தனை நிமிஷங்களில் தலத்துக்கு விரைய முடியும்? அதற்கான ஏற்பாடுகள் என்ன?

போலீஸாரின் நேரத்தை வீணடிப்பதில்லை என்று அரசியல்வாதிகள் உறுதிபூண்டாலே போலீஸாருக்குக் குற்றங்களைத் தடுக்க அதிக அவகாசம் கிடைக்கும். ஆனால் அரசியல் சாசனத்துக்கு எதிராக, மக்களின் வேலை பார்க்கும் உரிமைக்குக் குந்தகம் ஏற்படுத்தி, அரசே அர்த்தால் நடத்தும் போது, அதனுடன் போட்டியிட்டு அனைத்து எதிர்க்கட்சிகளும் ஆர்ப்பாட்டம், ஊர்வலம், போராட்டம் என்று இறங்கும் போது, போலீஸ் துறைக்கு இத்தகைய தலைவலிகளைச் சமாளிக்கவே நேரம் காணாது போகிறது.

போலீஸ் துறையை மேலும் சிறப்பாக இயங்கச் செய்ய, ஏற்கெனவே சில தனி நபர் கமிஷன்கள் அரும்பாடுபட்டு அறிக்கை தயாரித்துள்ளன. கோட்டையில் உறங்கும் அவற்றை தூசி தட்டி, தும்மல் அடங்கியதும் படித்துப் பார்த்துச் செயல்படுத்தினாலே தமிழகம் எவ்வளவோ பயன்பெறும். மேலும் ஒரு கமிஷன் அமைக்காமல் விட்டாரே, அதற்காகவே முதல்வருக்கு நன்றி கூறலாம்!

இரட்டை மன ரசிகர்கள்!

வங்காளத் திரையுலகம் என்றவுடன் அனைவரது நினைவுக்கும் வருகிறவர் சத்யஜித்ராய்தான். அவரது மறைவுக்குப் பிறகு சிறந்த இயக்குனர்கள் என்கிற வரிசையில் மிருணாள் சென், புத்த தேவ்தாஸ் குப்தா, கௌதம் கோஷ் என்று விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே வருகிறார்கள். இவர்களில் சர்வதேசப் புகழ்பெற்றவர் ராய்க்குப்



பிறகு மிருணாள்சென் ஒருவரே.

புத்ததேவ் தாஸ் குப்தாவின் 'சராசர்' என்னும் படம் அண்மையில் தேசிய விருது பெற்றது. காட்டில் பறவைகளைப் பிடித்து வந்து, அவற்றை வீடுகளில் வளர்ப்பவர்களுக்கு விற்று வாழ்க்கை நடத்துபவனின் கதைதான் சராசர். அவன் விற்கும் பறவைகளை வாங்குபவர்கள், தங்கள் வீடுகளில் வளர்ப்பதில்லை; சமைத்துச் சாப்பிட்டு விடுகிறார்கள் என்பதை அறியும் போது, பறவைநேசனான அவன் அதிர்ச்சியடைந்து, தன் தொழிலைக் கைவிடுகிறான். அதனால் வறுமையில் வாடுகிறான். 'பறவைகளைப் பிடித்து விற்பது உன் தொழில். அவற்றை வாங்குபவர்கள் என்ன செய்கிறார்களென்று கவலைப்படுவது உன் வேலையல்ல!' என்று ஒருவர் அவனுக்கு அறிவுரை கூறுகிறார். ஆயினும் பறவைக் கொலைக்கு உடந்தையாயிருக்க அவன் மனம் ஒப்பாமல், வறுமையிலேயே வாடுகிறான்!

புதிய இயக்குனரின் சிறந்த முதல் படத்துக்கான தங்கத் தாமரை விருது பெற்றுள்ளவர் அசோக் விஸ்வநாதன். படம் : சூன்ய தெக்கே சுரு (சூன்யத்திலிருந்து தொடக்கம்).

ஒரு நக்ஸலைட் பற்றிய கதை இது. பல ஆண்டுகள் சிறையில் கழித்து விட்டு வெளியே வரும் அவனை அவனுடைய கல்லூரி நண்பன் ஒருவன் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். அவனது பெண் இவன் மேல் காதல் கொள்கிறாள். ஆயினும் கதாநாயகனுக்கு இந்த முதலாளித்துவ சமூக அமைப்புடன் சமரசம் செய்து கொண்டு, சராசரியான குடும்ப வாழ்க்கை நடத்த இஷ்டமில்லை. நண்பனின் வீட்டை விட்டு வெளியேறி மீண்டும் தீவிரவாத இயக்கமொன்றில் சேர்ந்து விடுகிறான்...

இப்படிப் பிரச்னைகளின் நுணுக்கங்களை - மனித உணர்வுகளை - மிகவும் நுட்பமாக அலசும் படங்கள் வங்கமொழியில் வந்து கொண்டிருந்தாலும் மறுபுறம் மசாலாப் படங்களும் குறைவில்லாமல்தான் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம், வங்காள ரசிகர்களின் இரட்டை மன ரசனைதான்!

ஒரு சராசரி வங்க ரசிகன் என்ன மனநிலையில் இருக்கிறான்? ஒருபுறம் தான் ஒரு அறிவுஜீவி என்கிற நிலையில் இருந்து கொண்டு, தனது பண்பாட்டு மதிப்பீடுகளைப் போற்றுகிறான். அதனால் தனது மொழிப் படங்களிலும் ஒரு கலையனுபவத்தை, முருகியல் தன்மையை, ஒரு படிப்பினையை எதிர்பார்க்கிறான். ஆனால் மறுபுறம்? தான் ஓர் அறிவு ஜீவி என்கிற நிலையை முற்றிலுமாக மறந்த நிலையில், கொஞ்ச நேரமாவது குஷாலாக இருக்க ஆசைப்படுகிறான். அதன் விளைவாக செக்ஸும் வன்முறையும் மிகுந்த இந்திப் படங்களைப் போய்ப் பார்க்கிறான். இதை கவனத்தில் கொண்டு, இவனது இந்த மனநிலைக்குத் தீனி போடுகிற வகையில், இந்திப் படங்களைக் காப்பியடித்து எடுக்கப் படும் வங்கப் படங்கள் இந்திப் படங்களைப் போல் வெற்றியடைவதில்லை. இதற்கு இந்திப் படத் தயாரிப்பாளர்கள் அளவுக்கு வங்கப் படத் தயாரிப்பாளர்களுக்கு பிரம்மாண்டமாகப் படமெடுக்கும் பொருளாதார வசதி இல்லை என்பதும் இன்னொரு காரணம்.

ஆக, வங்கத் திரைப்படங்களைப் பொறுத்த வரையில் ஒருபுறம் உன்னதமான கலைப் படைப்புகள் என்கிற நிலையில் விருதுகளை வாங்கும் படங்கள். மறுபுறம் இந்திப் படங்களைப் போல் செக்ஸ், வன்முறை கலந்து எடுக்கப்பட்டும் வெற்றி பெற முடியாமல் தோல்வியடையும் மசாலாப் படங்கள்!

இதன் காரணமாக வங்கத் திரையுலகின் பொருளாதாரமும் சொல்லும்படி இல்லை. எவ்வளவு பெரிய நடிக - நடிகையரானாலும் இன்னமும் இங்கே தினசரி கால்ஷீட்டுக்கு இவ்வளவு ரூபாய் என்றுதான் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்களே தவிர, படத்துக்கு இவ்வளவு ரூபாய் என்கிற நிலையைக் கூட அவர்களால் எட்ட முடியவில்லை!

கல்கத்தா விசுவநாதன் கூறக் கேட்டு
எழுதியவர் : சு. கிருஷ்ணமூர்த்தி

சூன்ய தெக்கே சுரு : தங்கத் தாமரை பெற்ற !



சுவையான இல்லறத்திற்கு இவையும் வேண்டும்!

ஆம். இனிமையான இல்லறத்திற்கு அன்பு, அரவணைப்பு, பரஸ்பரம் புரிந்துகொள்ளுதல்-இப்படி உளம்சார்ந்த விஷயங்கள் மட்டும்தானா? உணவுசார்ந்த, அம்சங்களும் உள்ளனவே!

SMB ரவா, மைதா, கோதுமை மாவுகளில் பூரி, கேக், பப்ஸ், உப்புமா, பிரெட், ரவா இட்லி, ரவா லட்டு என்று விதவிதமாகச் சமைத்திடுங்கள். இனிய குடும்பவாழ்வுக்கு சுவையான அடித்தளம் அமைத்திடுங்கள்.

இப்பொழுது பரிசோதிக்கப்பட்டு நிருபணமான கூடுதல் தரத்துடன் கிடைக்கிறது.

SMB மைதா, ரவை, கோதுமை மாவுகள்
1 கிலோ, ½ கிலோ பாலிதீன் பாக்கெட்டுகளில் கிடைக்கிறது.

SMB

சக்தி முருகன் ரோலர் பிளவர் மில்ஸ் (பி) லிட்

தபால் பெட்டி எண். 15, அவினாசி - 638 654,
கோயமுத்தூர் மாவட்டம். போன்: 2991, 2992



தரமென்றால் இதுதான் தரம். சுவையென்றால் இதுதான் சுவை

SASI / 509 / 94



• சாருகேசி, இரா. முருகன், திலகவதி, ஐபிஎஸ்., நிர்வாக ஆசிரியர், சி. வி. கோபாலகிருஷ்ணன் (படம் : யோகா)

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1994 முடிவுகள்

கடந்த ஜூலை 17-ம் தேதியன்று ஹிந்து நாளிதழில் புத்தக விமர்சனம் எழுதி வரும் சி.வி. கோபாலகிருஷ்ணன், திலகவதி ஐ.பி.எஸ்., சாருகேசி, இரா. முருகன் மற்றும் நிர்வாக ஆசிரியர் வி. ராஜேந்திரன் ஆகியோரடங்கிய நடுவர் குழு ஒன்று கூடி, கீழ்க்கண்ட கதைகளை இந்த ஆண்டின் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுத்தது.

முதல் பரிசு ரூ. 1500/-

தலைப்பு : அந்நிய துக்கம்
எழுதியவர் : சத்யராஜ்குமார்
முகவரி : 11/11, ராமசாமி நகர்,
பொள்ளாச்சி - 642 003.

இரண்டாம் பரிசு ரூ. 1000/-

தலைப்பு : புதிய நெருப்பு
எழுதியவர் : வே. குருநாதன்
முகவரி : ஆ. லட்சுமிபுரம்,
TNC ஆலங்குளம் (வழி),
காமராஜர் மாவட்டம் -626 127

மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 500/- வீதம்) ரூ 1000/-

தலைப்பு : தலைக்குமேல் ஒரு கூரை
எழுதியவர் : பானுகுமார்
முகவரி : 407, 'B' Wing,
Krishnakunj No : 1,
Tambe Nagar, Mulund (W),
Bombay - 400 080.

தலைப்பு : தவம்
எழுதியவர் : எஸ். ராஜேந்திரன் (ராஜ்கோகுல்).
முகவரி : B3/4, ஹவுசிங் யூனிட்,
மன்னார்குடி - 614 001.

மற்றும் பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளின் விவரம் அடுத்த இதழில் வெளியாகும்.

பரிசு பெற்ற அனைவருக்கும் வாழ்த்துக்கள். ஆயிரக்கணக்கில் போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்த அத்தனை எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் இதயபூர்வமான நன்றி.

- ஆசிரியர்

ஹம்சகீதே, ஆதிசங்கராச்சார்யா, பகவத்கீதா ஆகிய படங்களின் மூலம் நேஷனல் அவார்டு களையும் திரை யுலகின் தனிமரியா தையையும் பெற்ற ஜி.வி. ஐயர் 'சுவாமி விவேகானந்தா' படத்தின் திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்து வருகிறார். முதல் கட்ட படப்பிடிப்பை முடித்து வந்து அடுத்த கட்ட படப்பிடிப்பிற்காகக் கல் கத்தா கிளம்ப இருந்தவருடன் ஒரு சந்திப்பு....



• விவேகானந்தராக சர்வதமன் பானர்ஜி

வித்தியாசத் துறவி

விவேகானந்தர்!

கேள்வி : விவேகானந்தர் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி வந்தது?

ஜி. வி. ஐயர் : இந்த நூற்றாண்டின் மகத்தான மனிதர் என்று சொல்ல வேண்டு மென்றால் விவேகானந்தரைத்தான் சொல்ல வேண்டும். He was a very practical Man. எல்லா சந்நியாசிகளும் மனிதன் கடவுளைத் தேட வேண்டும் என்று தத்துவ விசாரம் பேசிக் கொண்டிருந்த போது, விவேகானந்தர் மட்டும்தான் முதலில் ஒரு மனிதனின் வயிற்றைப் பார் என்றார். முதலில் ஏழையின் அடிப்படைத் தேவைகளைத் தீர்த்து விட்டாயா.. அப்புறம் அவனுக்கு ஞானத்தின் ஒளியைக் கொடு. கடவுளைக் காட்டு.. என் றார். நம்முடைய சக்தி இளமைதான் என்றார். சகோதரத்துவம் என்பது உலகளாவிய அன்பு என்றார். எவ்வளவு புரட்சியான சிந்தனைகள் அவருக்கு! அதனால் ஒரு திரைப்படக் கலை ஞன் என்ற முறையில் அவர் சொன்னவற்றை மறுபடியும் ஜனங்கள் நினைக்கிற மாதிரி பண்ண வேண்டும் என்று தோன்றிற்று. அதன் விளைவுதான் இது.

• ஜி. வி. ஐயர்



கே : விவேகானந்தரின் வாழ்க்கையைச் சொல்லுவதும் அவரது சிந்தனைகளை வெளிப்படுத்துவதும் மட்டுமே எனில், அது வறட்சியாக... அல்லது ஒரு டாகுமெண்டரி யாகப் போய் விடாதா? ஒரு திரைப்படத்துக் குரிய கதையம்சங்களும் கலை அம்சங்களும் இந்தப் படத்தில் இருக்குமா?

ஐயர் : விவேகானந்தரின் வாழ்க்கை மொத்தமுமே சுவாரஸ்யமான திருப்பங்களும் சுவையான சம்பவங்களும் நிறைந்தவைதாம். ஆரம்பத்திலிருந்தே அவரது குருவான ராம கிருஷ்ண பரமஹம்சருக்கும் விவேகானந் தருக்கும் கருத்து மோதல் உருவாகி விடுகிறது. எப்போது மோதல் வந்ததோ அப்போதே விறுவிறுப்பான காட்சிகளும் கிளைமாக்ஸும் இருக்கும் என்பது நிச்சயம். விவேகானந் தருக்கு உருவ வழிபாட்டில் நம்பிக்கை கிடை யாது. பரமஹம்சருக்கு உருவ வழிபாட்டில் நம்பிக்கை. இருவருக்கும் போரே நடக்கிறது. வேறு எந்த குரு - சிஷ்யர் உறவை எடுத்துக் கொண்டாலும் குரு பேச்சிற்கு மறுவார்த்தை பேச மாட்டார் சிஷ்யர். இங்கே அப்படியே நேரெதிர். குருவுடன் கருத்து மோதலில் ஈடு படுகிறார் சிஷ்யர். கடைசியாக குருவைப் பார்த்துக் கேட்கிறார். "கடவுளுக்கு உருவம் உண்டு என்கிறீர்களே, நீங்கள் பார்த்திருக் கிறீர்களா கடவுளை?" என்று.

''பார்த்திருக்கிறேன்'' என்கிறார் பரமஹம்சர்.

"எந்த உருவத்தில்?"

''இதோ உன்னுடைய உருவத்தில்... அதோ அவனுடைய உருவத்தில்... அந்த ஏழைச் சிறுவனின், சிறுமியின் உருவத்தில்... பிச்சைக்காரனின் உருவத்தில்... எல்லா மனிதர்களின் உருவத்திலும். கடவுளுக்கு உருவம் இருக்கிறதா என்று நீ கேட்கிறாய். எல்லா உருவங்களிலும் கடவுள் இருக்கிறார் என்கிறேன் நான். இதுதான் உன்னுடைய பார்வைக்கும் என்னுடைய பார்வைக்கும் உள்ள வேறுபாடு'' என்கிறார். விவேகானந் தருக்குத் தெளிவு பிறக்கிறது. குருவின் காலில் விழுகிறார். இதுதான் பரமஹம்சரின் தத்துவம்.

கே : ஆதிசங்கராச்சார்யா, பகவத்கீதா, சுவாமி விவேகானந்தா... என்று இம்மாதிரி




• குருவும் - சிஷ்யரும்...



• பரமஹம்சராக மிதுன்...

யான படங்களையே தருகிறீர்களே... இவற்றை நீங்கள் எந்தவகைப் படங்கள் வரிசையில் சேர்க்க விரும்புகிறீர்கள்? புராணமா, இதிகாசமா, சரித்திரமா, அல்லது கலைப் படங்களா?

ஐயர் : உங்கள் கேள்வியின் தொனி எனக்குப் புரிகிறது. சினிமா உலக சரித்திரத்தில் சாம்பிள்களாக சில படங்கள் நிற்க வேண்டும் இல்லையா... அம்மாதிரிப் படங்களைப் பண்ண வேண்டும். வெறும் வெளித் தோற்றங்களை யார் வேண்டுமானாலும் காட்சிகளாகக் காட்டி விடலாம். ஆனால் மனதுக்குள் நடக்கும் போராட்டங்களுக்கு ஓர் உருவம்



சின்ன மின்னல்கள்

- காக்கைகள் எச்சமிட்டன
அட...
மரத்தடி பள்ளிக்கூடம்!

- ரேசன் கடையில்
நெளியும் க்யூ.
அரிசியில் புழுவென...

- முதல்வர் பயணம் ரத்து.
பிழைத்துக் கொண்டன...
பூக்கள்!

- சர்க்கரை ஊழல்.
கைதாயின...
எறும்புகள் மட்டும்!

- சிறுத்துப் போனது
இமயமலையும்.
அருகே - அம்மாவின் கட்அவுட்!

— மு. முருகேஷ்



"நாஸரை வைத்து கமலஹாஸன் படம் எடுத்தா என்ன பேரு வைப்பாரு?"

"மகா சதி!"

— லலிதா பிரபாகர்

கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் என் படங்களை அமைக்கிறேன். சங்கராச்சார்யா, பகவத்கீதா... இந்தப் படங்களையெல்லாம் பார்த்தீர்களானால் இதற்கு விடை கிடைக்கும். பகவத்கீதையில் போர்க்களம் என்றால் கண்ணன் தேரில் வந்து உபதேசிக்கிறாரே அதுதான் போர்க்களம் என்று பல பேர் நினைக்கலாம். போர்க்களம் என்பதே நம் சரீரம்தான். அதைப் படமாக்க யாருக்கும் துணிச்சல் வராது. சங்கராச்சார்யா படத்தில் இரண்டு காரெக்டர்களை உருவாக்கி படத்தில் உலவ விட்டேன். ஒன்று ம்ருத்யு, இன்னொன்று பிராணா. பிறப்பு இறப்பைக் குறிக்கும் தத்துவத்தைக் கற்பனைப் பாத்திரங்களாக உருக்கொடுத்து சங்கருடனேயே இருக்கும் தோழர்களாக உலவச் செய்திருந்தேன்.

கே : விவேகானந்தர் படத்திலும் இம்மாதிரி கற்பனைப் பாத்திரம் எதையாவது உலவ விடுகிறீர்களா?

ஐயர் : இல்லை. எனினும் படத்தில் பரமஹம்சர் காளியைத் தரிசித்த - காளியுடன் பேசிய காட்சிகள் வருகின்றன. அந்தக் காட்சிகளில் வரும் காளி என்னுடைய கற்பனை. எனது கண்ணோட்டத்தில் காளியை எப்படி உருவகப்படுத்தியிருக்கிறேனோ அதைத்தான் காட்டியிருக்கிறேன்.

சுவாமி விவேகானந்தா படத்தின் தயாரிப்பாளர் தெலுங்குப்பட உலகைச் சேர்ந்த டி. சுப்பராமரெட்டி. கன்ஸ்ட்ரக்ஷன் துறையைச் சேர்ந்த இவர், நாகார்ஜுனசாகர் அணையைக் கட்டித் தந்தவரும் கூட. சுவாமி விவேகானந்தாவுக்கான அஸ்திவாரங்களையும் பலமாகவே போட்டிருக்கிறார்.

இந்தியில் தயாரித்து பெங்காளி உட்பட இந்தியாவின் பல மொழிகளிலும் - வெளிநாட்டிற்கு அனுப்ப ஆங்கிலத்திலும் - மொழி மாற்றம் செய்வதாக ஏற்பாடு.

சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த இடங்களான பல பகுதிகளிலும் படப்பிடிப்பு நடைபெறுவதால் முக்கால்வாசி படப்பிடிப்பு கல்கத்தாவில்தான். படத்தின் முக்கிய இரு வேடங்களை ஏற்றுள்ள நடிகர்கள் இருவரும் வங்காளிகளே. மிதுன்சக்ரவர்த்தி ராமகிருஷ்ண பரமஹம்சராகவும், சர்வதமன் பானர்ஜி விவேகானந்தராகவும் நடிக்கிறார்கள். நடிகைகள் என்று எடுத்துக் கொண்டால், ஹேமமாலினி, ஜூஹிசாவ்லா, மீனாட்சி சேஷாத்ரி, ஜெயப்பிரதா, தனுஜா என்று ஒரு கதாநாயகிகளின் பட்டாளமே இருக்கிறது.


சந்திப்பு : **அமுதவன்**

ஸ்ரீகந்தசுவாமி
பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990

பதிவு அலுவலகம் : 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

கிளை அலுவலகம் : 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.



பிக்சட் டெபாசிட்

45 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%★

ரொக்கப் பத்திரங்கள்	தொகை	பத்திரங்கள் மதிப்பு	தொகை	பத்திரங்கள் மதிப்பு
36 மாதங்கள்	Rs. 2,925/- Rs. 5,850/-	Rs. 5,000/- Rs. 10,000/-	Rs. 8,775/- Rs. 11,700/-	Rs. 15,000/- Rs. 20,000/-

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15ஆம் ஆண்டுகள்	5ஆம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ஆம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ஆம் ஆண்டு பெறும் தொகை
Rs. 6,320	Rs. 6,000	Rs. 6,000	Rs. 56,320
Rs. 25,280	Rs. 24,000	Rs. 24,000	Rs. 2,25,280

21% 5 வருடங்கள் ரூ. 50,000/- அதற்கு மேலும்

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs. 7,500	15 Yrs	Rs. 1,25,000
Rs. 9,000		Rs. 1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ. 100/-	25 Yrs	Rs. 3,00,000

பென்ஷனர் நலத் திட்டம்

20%

வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs. 1,000	Rs. 1,184	Rs. 1,430	Rs. 2,000	Rs. 2,535
Rs. 7,500	Rs. 8,880	Rs. 10,725	Rs. 15,000	Rs. 19,010

சேமிப்புத் திட்டம்

வட்டி 10%

காசோலை பெறும் வசதி உண்டு

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

டிபாசிட் ரூ.50ன் பெருக்கம்	மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை			
	12 மாதம்	24 மாதம்	36 மாதம்	48 மாதம்
Rs. 50	Rs. 660	Rs. 1,430	Rs. 2,360	Rs. 3,600
Rs. 100	Rs. 1,320	Rs. 2,860	Rs. 4,720	Rs. 7,200

தங்க நகை கடன்

Rs. 3,000 PER 10 GRAM

கடனுக்கு உச்ச வரம்பு இல்லை

வீடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்

மாத வைப்புக்கான செக்குகள் முன்கூட்டியே வழங்கப்படும். தனயோகம் டிபாசிட் திட்டம் 10% குறைந்த அளவு ரூ. 20,000

★ டிபாசிட் காலம் 5 ஆண்டுகள்

சேர்மன் P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
சீனியர் டிரஸ்டி, ஸ்ரீகந்தகோட்டம்,
சென்னை - 3.




பங்குதாரர்களுக்கு மட்டும்
H.O. : Friday Holiday
B.O. : Tuesday Holiday

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி

பாதுகாப்பு பெட்டகம் குறைந்த வாடகைக்கு கிடைக்கும்

SURESH



வேதபுரத்து

வியாபாரிகள்

ஒவ்வொரு சொல்லுக்கும் எங்கள் தலைவர் தரும் அர்த்தந்தான் அச் சொல்லின் பொருள், அகராதி என்பது மாற்றானின் சதித் திட்டம்!'

- (வேதபுரத் தலைவர் வரலாறு - 108 ஆசிரியர்கள். பக். 63)

இதுவரை...

வெளிநாட்டிலிருந்து வேதபுரம் வந்திருக்கும் அபூர்வா — பூர்வீக வேதபுரவாசி — அந்த நாட்டைப் பற்றி ஒரு நூல் எழுத விரும்புகிறாள். அதற்காகப் பல்வேறு நிலைகளிலும் உள்ள ஆளும் கட்சித் தலைவர்களைச் சந்திக்கிறாள். அப்படி அபூர்வா சந்தித்தவர்களில் ஒருவன்தான் நஞ்சுண்டன். அவனிடம் கட்சியின் பெரிய தலைவரைப் பற்றிய விவரங்களைக் கேட்டபோது, அன்றிரவு தன்னை வந்து சந்திக்கும்படி ஒரு முகவரியைக் கொடுக்கிறான் நஞ்சுண்டன்.

இந்திரா பார்த்தசாரதி

வனிதா, அபூர்வா கொடுத்த அந்தத் துண்டுக் காகிதத்தை வாங்கிப் பார்த்தாள். அவள் நெற்றியில் கோடுகள் விழுந்தன.

''என்ன யோசிக்கறே?'' என்றாள் அபூர்வா.

"இது அவர் வீட்டு முகவரியில்லே... அவர் வேற பெரிய இடத்திலே இருக்கணும், அவர் அந்தஸ்துக்கு. இந்த முகவரி..."

"சொல்லு."

"'பரவச அம்மன்' கோயில் பக்கத்திலேருக்குது."

"பரவச அம்மனா!"

"ஆமாம்.. அந்தக் காலத்திலே எங்க ஜனங்க மனசையெல்லாம் பரவசப்படுத்தினாங்களாம் இவங்க.. அரசியலோ, சினிமாவோ, ஆன்மீகமோ, எதுவோ தெரியலே, மூணுவாகவுமிருக்கலாம், எங்க நாட்டிலே எல்லாம் ஒண்ணுதான் - இவங்களுக்கு ஜனங்க பிரியப்பட்டுக் கோயில் கட்டினாங்க.. சினிமாவாகத்தான் இருக்கணும்னு நெனைக்கிறேன்" என்றாள் வனிதா.

"ஏன் சினிமான்னு நெனைக்கிறே?"

"இப்பொவும், சினிமாவிலே 'சான்ஸ்' கிடைச்சா மேக்-அப் கலையாமே, முதல் ஷூட்டிங் அன்னிக்கே இங்கு வந்து அங்கப் பிரதட்சணம், செய்யறேன்னு வேண்டிப்பாங்க.. செஞ்சுக்கிட்டும் வராங்க..."

"நீ வேண்டிக்கலே போலிருக்கு.." என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் அபூர்வா.

"சரி... அதை விடுங்க. இவரு உங்களை ஏன் இந்த இடத்துக்கு வரச் சொல்லியிருக்காரு? என்ன சொல்ல? நானும் வரட்டுங்களா, துணைக்கு...?"

"இதோ பாரு, எனக்கு என்னைப் பாத்துக்கத் தெரியும். பயப்படாததே..."

அடுத்த நாள் அபூர்வா, நஞ்சுண்டன். குறிப்பிட்டிருந்த இடத்தைச் சென்றடைந்தாள். அவள் அந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்த போது மணி ஏழேமுக்கால்.

பரவச அம்மன் கோயில், தெருக் கோடியிலிருந்தது. அன்று யாரும் நேர்த்திக் கடன் செலுத்தியதாயத் தெரியவில்லை. கூட்டமே யில்லை.

வீடுகள் அதிகமாக இல்லை. நாலைந்து இருக்கலாம்.

நஞ்சுண்டன் குறித்திருந்த வீடு மிகவும் சிறிய வீடு. அந்தகாரத்தில் ஆழ்ந்திருந்தது. நஞ்சுண்டன் வரவில்லையோ?

அவள் வீட்டு வாசலுக்குச் சென்று 'காலிங்-பெல்' இருக்கின்றதா என்று தேடினாள்.

இல்லை.

கதவைத் தட்டித்தான் ஆக வேண்டும்.

'உள்ளே இருட்டாக இருக்கிறதே, யார் இருக்கப்போகிறார்கள்' என்று அவளுக்குத் தோன்றிற்று. உள்ளே போகலாமா வேண்டாமா என்று சில விநாடிகள் சிந்தித்தாள்.

"உள்ளே வாங்க. கதவு தாழ்ப்பா போடலே" என்ற குரல் கேட்டது.

நஞ்சுண்டன் குரல் இல்லை.

"விளக்கைப் போடுங்க, வரேன்."

சிறிது நேரம் மௌனம். விளக்கும் போடப்படவில்லை.

"விளக்கைப் போட்டாத்தான் உள்ளே வருவேன்" என்றாள் அபூர்வா ஒரு கண்டிப்பான குரலில்.

"அப்புறம் உங்க இஷ்டம். நம்பிக்கை இருந்தா, வாங்க.. நான் வற்புறுத்த மாட்டேன்."

"நஞ்சுண்டன் எங்கே?"

பதிலில்லை.

"நான் நஞ்சுண்டனைத்தான் பார்க்க வந்திருக்கேன்."

"தெரியும்."

அபூர்வாவுக்கு வனிதாவை அழைத்துக் கொண்டு வந்திருக்கலாமென்று தோன்றிற்று.

"எனக்கு ஏதாவது இங்கு ஏற்பட்டா, நான் எங்கே வந்தேன்னு என் சிநேகிதிகிட்டே சொல்லிட்டுத்தான் வந்திருக்கேன்."

பதிலில்லை.

"சரி... நான் போறேன்."

"உங்க இஷ்டம்."

உள்ளே போய்ப் பார்த்தால்தான் என்ன? நஞ்சுண்டன் இந்த முகவரியைக் கொடுக்க என்ன காரணம்?

அவள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள்.

"கதவைத் தாழ்ப்பா போடுங்க."

உத்தரவு.

"வேண்டாம்... 'சுவிச்ட்' எங்கே...?"

அவள் சுவரைத் தடவிக் கொண்டே சென்றாள், 'சுவிட்ச்' இருப்பதாகத் தெரிய வில்லை.

கதவு வெளியே தாழிடப்படும் சப்தம் கேட்டது. அவள் வேகமாகக் கதவருகே ஓடி னாள். அவள் கதவை ஓங்கித் தட்டினாள். பயனில்லை.

என்ன முட்டாள்தனம், இங்கு வந்து மாட்டிக் கொண்டு விட்டோம்?

வெளிநாட்டுக்காரர்களை ஒன்றும் செய்ய மாட்டார்களென்கிறார்கள். அதை நம்பித்தான் இருக்க வேண்டும்.

'பரவச அம்மனே... எனக்கு சினிமா 'சான்ஸ்' வேணாம், என்னை இங்கேயிருந்து காப்பாத்து, போதும். நேர்த்திக் கடனா, உனக்கு எத்தனை 'மேக்-அப்' சாமான் வேணுமோ, அத்தனையும் என் நாட்டிலேந்து அனுப்பறேன். நீ தெய்வமாச்சே, உனக்கு வேணாம்னா, 108 சினிமா புதுமுகங்களுக்கு, என் நாட்டிலேந்து 'மேக்-அப்' சாமான் வாங்கி அனுப்பறேன். என்னைக் காப்பாத்து... தயவு செய்து காப்பாத்து..." என்று கோயில் திசை நோக்கிக் கும்பிட்டு அவள் வேண்டிக் கொண்டாள்.

சிறிது நேரம் கழித்துக் கதவுத் தாழ்ப்பாள் திறக்கும் சப்தம் கேட்டது.

அவள் சுவரோரமாகப் பதுங்கி நின்றாள். அறையில் வெளிச்சம் பரவியது.

நஞ்சுண்டன்!

"எப்படி நீங்க உள்ளே வந்தீங்க? வெளி யிலே கதவு தாப்பா போட்டிருக்குது?" என் றான் நஞ்சுண்டன்.

"நீங்கதான் பதில் சொல்லணும்" என் றாள் அபூர்வா.

"புரியலே..."

"முன்னாலே இங்கே இருந்த பெண் யாரு? என்னை உள்ளே வச்சு தாப்பா போட்டுவிட்டு அவ ஏன் போகணும்?"

"என்ன சொல்றீங்க?"

"நெஜமாகவே உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாதுங்க..."

"என்னைச் சந்திக்கப் போறதைப் பத்தி நீங்க வேற யார்கிட்டேயும் சொன்னீங்களா! உங்க மனைவிகிட்டே...."

"இல்லே, எனக்குக் கல்யாணமாகலே, சேர்த்தியும் கிடையாது..."

அபூர்வா அவனிடம் நடந்ததைச் சொன் னாள். அவன் சிந்தனையிலாழ்ந்தான்.

"ஆமாம்... இது யார் வீடு?" என்றாள் அபூர்வா.

"என் வீடுதான்."

"இவ்வளவு சின்ன வீட்டிலா இருக்கீங்க? உங்க தகுதிக்கு இன்னும் பெரிய வீட்டி லேருப்பீங்கன்னு சொன்னாங்க..."

"யார் சொன்னாங்க?"

"அதுவா பிரச்னை? இப்போ இந்த வீட்டிலேந்து வெளியே போன பெண் யாரு? அவ எப்படி நான் இங்கே வந்த போது, உள்ளே இருந்தா? என்னை எதுக்காக இந்த வீட்லே சந்திக்கச் சொன்னீங்க?"

நஞ்சுண்டன் அவ்வறையிலிருந்த நாற் காலியில் உட்கார்ந்தான்.

அபூர்வா அப்பொழுதுதான் அந்த அறை யைக் கவனித்தாள்.

சின்ன 'ஹால்', அழகுணர்ச்சியுடன் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சோபா கிடையாது. கூடை நாற்காலிகள்.

சுவரில் ஓர் அழகான ஓவியம். வேறு படங்களே இல்லை, தலைவரின் படம் கூட.

அபூர்வா வேதபுரத்தில் பல வீடுகளுக்குச் சென்றிருக்கிறாள். தலைவர் படம் தொங்காத சுவரே கிடையாது.

நஞ்சுண்டன் அலுவலக அறையிலும், தலைவர், பின்னால் தலையைச் சாய்த்துச் சிரிப்பது போல் ஒரு பெரிய படம் இருந்தது.

"இது உங்க வீடுதானா?" என்றாள் அபூர்வா மறுபடியும்.

"என் வீடு இல்லே... உங்களை வச்சு தாப்பா போட்டுகிட்டுப் போனாங்களே அவங்க வீடு..."


"யார் அவங்க? எதுக்காக...."

"உங்களுக்குத் தைரியமிருக்கான்னு பார்த்திருக்கலாம். நீங்க தைரியசாலிதான்."

"அவங்க யாரு?"

"அதைப் பத்தி சமயம் வர்ற போது சொல்றேன், நீங்க எதுக்காக உங்க நாட்டி லேந்து இங்கே வந்திருக்கீங்க? உங்க பூர்வீகம் இந்த நாடா இருக்கலாம். ஆனா வேற ஏதோ ஒரு வலுவான காரணமிருக்கிறதா எனக்குப் படறது."

"ஒரு காரணமுமில்லே. இந்த நாட்டைப் பத்தி எழுத. இதை நிலைக் களனா வச்சு ஒரு நாவல் எழுத முடியுமான்னு பாக்க... உங்க தலைவரை நான் சந்திச்சாகணும். தலைவரை யாருமே பார்த்ததில்லேங்கிறாங்க. நீங்க பார்த் திருக்கீங்களா?"


Hexagon
Boutique
காற்றின் தேவை எங்கேயோ, கேதான் நிச்சயம் அங்கே!
Mini Pedestal
Mini Super
Tycoon Rainbow
Sona Pedestal
Freshair Deluxe
கேதான்
பெயர் ஒன்றே போதுமானது

"என்னைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்?"

"நீங்க ஒரு எழுத்தாளர்னு, ஒரு ஆராய்ச்சியாளர்னு. இப்போ..."

"இப்போ...?"

"எனக்குத் தெரியலே... அவ்வளவு பெரிய அலுவலகத்திலே உக்காந்துக்கிட்டு என்ன செய்யறீங்க?"

"என்ன செய்யறேன்னு நினைக்கிறீங்க?"

"தெரியலே. அங்கே பார்க்கிறப்போ ஒரு ரோபோ மாதிரி இருந்தீங்க, இப்போ மனுஷனா தெரியுது..."

"நான் என்ன செய்யறேன்னு இன்னுமா தெரியலே...?"

"தெரியலே...."

"வேதபுர வரலாறு, புராணம், எல்லாத்துக்கும் தலைமைக் காரியாலயம் எங்க அலுவலகம். எல்லாத்தையும் உற்பத்தி செய்யறதே நான்தான்."

"வரலாற்றை உற்பத்தி செய்ய முடியுமா?"

"ஏன் முடியாது? வேதபுரத்து பழைய வரலாற்றைப் பற்றி யாருக்குத் தெரியப் போறது? பிரசாரங்கிற ரப்பராலே, எல்லாத்தியும் அழிச்சாச்சு... இன்றைய வரலாறுதான், நான் எழுதற, எழுதப் போகிற வரலாறுதான் நாளைய வரலாறா இருக்கப் போறது.. உங்க நாட்டிலே ஒத்தன் சொல்லியிருக்கானே, 'சரித்திரம் ஒரு குப்பைத் தொட்டி'ன்னு, வாஸ்தவமான வார்த்தை! நாங்க எங்க பழைய வரலாற்றைக் குப்பைத் தொட்டியலே போட்டாச்சு."

"இன்றைய வரலாற்றை நாளைக்கு வரப்போறவங்க குப்பைத் தொட்டியிலே போட மாட்டாங்கங்கிறது என்ன நிச்சயம்?"

"போடட்டும். நாம இருக்க மாட்டோம்..."

"இப்போ உங்க நாட்டிலேருக்கிறவங்களுக்கும் உங்க நாட்டோட பழைய வரலாற்றைப் பற்றி ஒன்றுமே தெரியாதா?"

"நாங்க அவங்களை எதை நம்பச் சொல்றோமோ அதைத்தான் நம்புவாங்க. எங்க நாட்டை நீங்க புரிஞ்சுக்கணும்னா, தேவைப்படற அளவுகோலே வேற..."

"என்ன அளவுகோல்?"

"பகுத்தறிவுக்கு 'டாட்டா' சொல்லணும். ஆனா நாங்க கொடுக்கிற பட்டங்கள்ளாம் 'பகுத்தறிவுச் செம்மல்', 'பகுத்தறிவு மறவன்', அது இதுன்னுதான்... சுயமரியாதைன்னு சொல்லுவோம், கால்லே விழுந்து காரியத்தைச் சாதிச்சுப்போம். இதைத்தான் எங்க தலைவர் ஓரிடத்திலே அழகாகச் சொல்றாரு—'பகுத்தறிவு என்றால் பரம்பரை பரம்பரையாகப் பகைவன் பகரும் பொருளையா ஏற்றுக் கொள்ள வேண்டும்? தலைவர் பகுத்



பட்டதால், முடங்கப்பட்டிருக்கும் சினிமா தயாரிப்பாளர்களின் பணம் 50 கோடி ரூபாய் இருக்கும் என்று ஒரு கணக்கு சொல்லுகிறது.

தறிந்து பாமரனுக்கு எது நல்லது என்று சொல்வதே பகுத்தறிவு....' தலைவர் ஆட்டுவித்தால் ஆட வேண்டும், ஓட்டுவித்தால் ஓட வேண்டும்!"

"இதை சொல்லத்தான் என்னை இங்கே வரச் சொன்னீங்களா?"

"அலுவலகத்திலே என்ன செய்யறீங்கன்னு கேட்டீங்க, சொன்னேன்."

"நஞ்கண்டங்கிற எழுத்தாளர் என்ன செய்றாரு?" என்றாள் அபூர்வா.

"இன்னொரு வகையான படைப்பு இலக்கியம், எங்கள் தலைவர் வரலாறு, வேதபுரத்து வரலாறு... இதோட நூறு புத்தகம் எழுதிட்டேன், ஒவ்வொண்ணும் வெவ்வேற மாதிரி..."

"முரண்பாடா இருக்காது?"

"மறுபடியும் மறுபடியும் சொல்லிச் சொல்லி எனக்கு அலுத்துப் போச்சு... எங்களைப் புரிஞ்சுக்கணும்னா...."

"புரிஞ்சுது," என்றாள் அபூர்வா. நஞ்கண்டன் எழுந்தான்.

"என்ன புறப்பட்டுட்டீங்களா?" என்றாள் அபூர்வா.

"நான் அப்போ ஒண்ணு சொன்னேன், அதைப்பத்தி நீங்க ஆச்சர்யப்படவேயில்லே, அதுதான், எனக்கு ஆச்சர்யமா இருக்குது," என்றான் நஞ்சுண்டன்.

"என்ன?"

"உங்களுக்குத் தைரியமிருக்குதான்னு பரிசோதிக்கத்தான் அந்த அம்மா அப்படிச் செஞ்சிருப்பாங்கன்னு. நீங்க எதற்காக தைரியம்னு கேக்கவேயில்லே..."

"இப்போ கேக்கறேன்."

அவன் சிறிது நேரம் பேசாமலிருந்தான்.

"சொல்லுங்க, இப்போ கேக்கறேன்."

"எங்க நாட்டைப் பத்தி உங்களோட அபிப்பிராயங்களைத் துணிவா எங்க மொழியிலேயே எழுதி, உங்களாலே இந்த நாட்டிலேயே பிரசுரிக்க முடியுமா!"

"செய்யறேன். யார் பிரசுரத்துக்கு ஏற்பாடு செய்வாங்க?"

"நான் செய்யறேன். ஆனா நிறைய அநுபவம் உங்களுக்கு ஏற்படணும். அதுக்கும் ஏற்பாடு செய்யறேன். இது நம் இரகசிய ஒப்பந்தம்," என்றான் நஞ்சுண்டன்.

(தொடரும்)



எட்டாவது தடவையாக போன் மணி அடிக்கிறது. முகத்தைச் சுளித்து வெறுப்புடன் போனைப் பார்த்தான் முன்னணி நடிகன் யோகேஷ்குமார்.

மணி அடிக்கும் ஒவ்வொரு தடவையும் பற்றிக் கொண்டு வருகிறது. ஐஸ்கூட போடாமல் ராவாக விஸ்கியை படக்கென்று நெஞ்செரிய விழுங்கி, கோபத்துடன் போனை எடுத்தான்.

அதே போன்தான். அவனுக்காகப் படப் பிடிப்பில் நிறைய பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். தாமதிக்கும் ஒவ்வொரு மணி நேரமும் பல லட்சம் நஷ்டம் தயாரிப்பாளருக்கு. சாகட்டும். போனை தொப்பென்று வைத்தான்.

அங்கு போவதற்குக் கொஞ்சம் கூட பிடிக்க வில்லை. போகாததற்கு வருத்தமும் இல்லை. அங்கு போய் புதிதாக ஒன்றும் செய்யப் போவதில்லை. அரிதாரம் பூசிக் கொண்டு அரைத்த மாவை அரைக்க வேண்டும்.

பெரிய பில்டிங்கிலிருந்து ரௌடித்தனமாகக் கத்திக் கொண்டு துண்டுப் பீடியுடன் கார் பானெட்டின் மேல் குதிக்க வேண்டும். (டூப் குதிப்பதைப் பார்க்க வேண்டும்) க்ளோசப்பில் வில்லன் காலர் அழுக்கைக் கண்டு விரலால் தட்டி, அலட்சியமாகச் சவால் விட வேண்டும். கேலியாகச் சிரித்துக் கொண்டே இடது கையாலும் வலது கையாலும் அடியாட்களை துவம்சம் செய்ய வேண்டும். வில்லன்கள் ஆளுக்கொரு திசையில் நொண்டிக் கொண்டு ஓடியதும் பேட்டைவாசிகள் நன்றிப் பெருக்கில் தோளில் தூக்கி வைத்து ஆரத்தி எடுப்பார்கள். கதாநாயகன் பதில் நன்றிப் பெருக்கில் 'உங்கள மாதிரி ஏழைகள் கிட்டதான் இதயமிருக்கு' என்று கண்கள் பனிக்கப் பேச, ஷூட்டிங் முடியும்.

அடுத்தது, குடலைப் புரட்டும் புளித்த மாவு. இந்த புளித்த மாவில் பண முதலையின் பெண்ணை கார் மெக்கானிக் கதாநாயகன் கிண்டல் செய்து ஒரு பாட்டு. காரில் (தெனாவட்டாக) வருவாள். இக்னிஷின் கீயை சடாரென்று உருவி 'மச்சி எல்லாம் நம்ம கைலதான்' என்று ஜெமினி ப்ளை ஓவரில் ஒரு குரூப் சாங். கண்டிப்பாக இரட்டை அர்த்தத்தில்தான் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரே ஒரு அர்த்தத்தில் எழுதிய பாட்டு. ராகம்: கல்யாண வசந்தம். (ஐம்பது டியூன் போட்டு இதுதான் கடைசியில் ஓகேயானது) கதாநாயகன் மனத்தை புரிந்துக் கொண்டு, கடைசியில் 'மச்சான் நான் உங்க கைலதான்' என்று கதாநாயகி பாட, பாடல் முடியும். ஏழைக்கும் பணக்காரிக்கும் காதல் வந்துவிடும்.

எவ்வளவு நாள் இதைப் பண்ணிக் கொண்டிருப்பது. வகையாக மாட்டிக் கொண்டு விட்டான். கூடை கூடையாக கரன்சியைக் கொட்டி கூத்தாடச் சொல்லி, அவனைச் சுற்றி வட்டம் போட்டு விட்டார்கள். வட்டத்திற்கு வெளியே வர முடியவில்லை. வட்டம் வேலியாகி விட்டது.

அவனுக்காக ஜிகினாவில் ஒரே மாதிரியாக அளவாக வெட்டித் தைக்கப்பட்ட 'டெயிலர்-மேட் ரோல்'கள் வார்ட் ரோப்பில் எப்போதும்



ரெடியாக உள்ளன. கதையும் அவனைச் சுற்றியே பின்னப்படுகிறது. (அரைக்கப்படுகிறது?) பாடல்களும் வசனங்களும் சேஷேக்களில் அடைக்கப்பட்டு ரெடிமேட் ஸ்டிரிப்புகளாக வசனகர்த்தா தோள்களில் தொங்குகின்றன. இல்லாவிட்டாலும் கூட பரவாயில்லை. பழக்க தோஷத்தில் அவனே சில சமயம் பேசி விடுவான்.

அந்த ஜிகினா டிரஸ்களைப் போட்டு பேசி, பாடிக் குதித்து, புகழ் ஏணியின் உச்சிக்கு வந்தாயிற்று. கைத்தட்டி விசில் பறந்து நூறு நாள் ஓடி வசூல் சிங்கம் ஆகி விட்டான். வசூலை வாரிக் குவித்து ஒரு வட்டப் பாதையில் சுற்றிச் சுற்றி வந்து உறுமிக் கொண்டிருக்கும் கூண்டுச் சிங்கம்.

இன்று அலுத்துச் சலித்து, நொந்து போய்விட்ட சிங்கம். பரிதாபமாக நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு படுத்து, வித்தியாசமான ரோலுக்கு ஏங்கும் சிங்கம். இன்று அந்த ஏக்கம் சற்று ஜாஸ்தியாகிப் போய் விட்டது. காரணம் அந்த பத்திரிகை விமர்சனம் 'தன்மானச் சிங்கம்' படம் பார்ப்பதை விட வீட்டில் உட்கார்ந்து ஒரு குயர் நோட் புக்கில் ஸ்ரீராம ஜெயம் எழுதலாம்! புண்ணியமுண்டு!

மறுபடியும் ராவாக ஒரு பெக் விஸ்கியை காட்டமாக விழுங்கினான். பத்திரிகையை விசிறியடித்தான். அந்த சக நடிகன் ராம் மோகன் புத்திசாலி. நடுவில் விழித்துக் கொண்டு விட்டான். ஒவ்வொரு அடியும் கவனமாக வைக்கிறான். வட்டத்திற்குள் சிக்காமல் வெளியே ஓடி விட்டான். வெளி வந்து பல விருதுகள் வாங்கி விட்டான். ஜிகினா உடைகள் போட்டு வித்தியாசமாகக் குதித்து விட்டு, வட்டத்திற்குள் சிக்காமல் ஓடி விடுகிறான். சாதித்து விட்டான்.

சிகரெட்டை விரக்தியுடன் புஸ்புஸ் சென்று ஊதிக் கொண்டே படுத்தான். பத்தாவது முறையாக டெலிபோன் மணி அடிக்க ஆரம்பித்தது.

படப்பிடிப்பை கான்சல் செய்து விட்டு தயாரிப்பாளர் அருள் ராமச்சந்திரன் யோகேஷ்குமார்

வெள்ளிச்சிறை

வீட்டிற்கு வியர்க்க விறு விறுக்க ஓடி வந்தார்.

"என்ன தம்பி இப்படிப் பண்ணிப்புட்டீங்க? ரொம்ப டென்சன் ஆயிப் போச்சி... எட்டு லட்சம் நஷ்டம்..."

"ஆமா... ஜுராய்சிக் பார்க்கா எடுக்கறீங்க. ஏன் கஷ்டப் படுறீங்க. போன படத்தோட ரீல் எடுத்து ஜாயின் பண்ணி ஒட்ட வேண்டியது தானே..."

அருள் ராமச்சந்திரன் அதிர்ந்து போனார். இது மாதிரி பேசிப் பார்த்ததில்ல. "என்னாச்சு தம்பி. நாலு பெக்கு ஜாஸ்தியா போட்டுட்டீங்களா? ஒரு மாதிரியா பேசறீங்க..."

"வெறுத்துப் போச்சய்யா...! ஏதாவது வித்தியாசமான கதை சொல்லுங்க... வித்தியாசமா எடுங்க..."

"இந்த கின்னஸ்லதான் வித்தியாசமா ஓடுவாங்க. கை தட்டுவாங்க. குதிப்பாங்க. சினிமா பொழுது போக்கு மீடியம் தம்பி. ஒப்புக்கிட்ட படத்த முடிச்சுக் குடுங்க தம்பி. இதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம்..."

"எனக்கு இது அலுத்துப் போச்சு. ஒரு பவர்புல் ரோல்ல நடிச்சு அவார்டு வாங்கணும். படத்துக்குப் படம் என்னை மசாலால ஊற வச்சு நாற அடிச்சிட்டீங்க. நடு நடுவுல ரெண்டு படம் வித்தியாசம் பண்ணணும்."

"வசூல் சிங்கம் இப்படி பேசலாமா? நீங்க கலெக்சன் ஹீரோ. உங்கள நம்பி எவ்வளவு பேர் பொழைக்கிறோம். தியேட்டர்ல போய்ப் பாருங்க. ஜனங்க கைத் தட்டி சந்தோசமா ரசிக்குது. பணத்தக் கொட்டுது. ஜனங்க சந்தோசம் தான் உங்க சந்தோசம். இத விட என்ன தம்பி..."

"பணத்துக்காக காம்பரமைஸ் பண்ணி பண்ணி போரடிச்சுப் போச்சு. என் ஆத்ம திருப்திக்காக ஏதாவது பண்ணணும்னு மனசு

கே. ரவிசங்கர்

ஏங்க ஆரம்பிச்சுடிச்சு... இப்படியே பண்ணிக் கிட்டிருந்தா டவுன்ஃபால் ஆரம்பிச்சுடும். ஜனங் களும் அலுத்துப் போய் ஓரங்கட்ட ஆரம்பிச் சுடுவாங்க. நீங்களும் நழுவ ஆரம்பிச்சுடுவீங்க."

இந்த பேச்சு ராமச்சந்திரனுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. யோகேஷ் குமாரை வைத்து இன்னும் பல படங்கள் தயாரித்துப் பணம் பண்ண எண்ணியிருந்தார்.

செயற்கையாகச் சிரித்துக் கொண்டே– "தம்பி, உங்க ஏக்கம் புரியுது...! மக்கள் திலகம் கூட கேரக்டர்ரோல் பண்ணாரு. ஜனங்க ஒத்துக் கல. வாத்தியார் ஏமாத்திட்டார்ன்னு சொன் னாங்க. இண்டஸ்ட்ரில எவ்வளவு பெரிய ஆளு! அவரே காம்பரமைஸ்..." என்று சொல்லி அவனைப் பார்த்தார்.

"புரியுது. அதான் சினி ஃபீல்டுலேர்ந்து ஒதுங் கிடலாம்னு பாக்கறேன். கிரிக்கெட் மாதிரி பேமஸா இருக்கும்போது ரிடையர் ஆயிடணும் அப்பத்தான் மதிப்பு..."

"தம்பி...தம்பி...அப்படி செஞ்சுடாதீங்க. எங்க பொழப்பில மண்ணைப் போட்றாதீங்க. நானே உங்கள வச்சு வித்தியாசமா எடுத்திட்டுப் போறேன். இதுக்குப் போய் இப்படி வருத்தப் படுவாங்களா? இந்த படம் முடியட்டும் உங்க ப்ராஜக்டை ஆரம்பிச்சுடலாம்."

"நானே ஸ்கிரிப்ட் தரேன். ரெண்டு வரு ஷமா மனசுக்குள்ளேயே டெவலப் பண்ணி ஒரு ஷேப்புக்குக் கொண்டு வந்துட்டேன். வித் தியாசமா பண்ணலாம்..."

"பண்ணிடலாம். இன்னிக்கு ஒரு மூடுல இருக்கீங்க. அதான் டல்லா திங்க் பண்றீங்க. உங்க ஸ்கிரிப்ட யார்கிட்டயும் கொடுத்துடா தீங்க...அப்புறம் உங்கள வச்சு ரெண்டு ஆக்சன் படம் பண்ணணும்...அதுக்கு நாப்பது லட்சம் அட்வான்ஸ்..."

ஒரு மாதிரி சிரித்துக் கொண்டே செக் புக்கை எடுத்தார். கையெழுத்துப் போட ஆரம் பித்தார். அது கையெழுத்தில்லை. அவனின் பழைய வட்டத்தைச் சுற்றி இன்னொரு பெரிய வட்டம் போட்டு அமுக்குகிறார். வேண்டாம் என்று மறுத்தான். ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டே விடை பெற்றார்.

ராமச்சந்திரன் விருப்பப்படி அரைத்த மாவை அரைத்துக் கொடுத்து, படம் நூறு நாள் ஓடியது. அவனுடைய ப்ராஜக்ட்டை பற்றி மூச்சு விடாதது அவனுக்கு வருத்தத்தை அளித் தது. நேரில் பார்க்கும் போது, பேச்சை மாற்றி னார். பேச்சை மாற்ற முடியாத சமயத்தில் இரண்டு ஆக்ஷன் படம் எடுத்து விட்டு பூஜை போட்டு விடலாம் என்று நழுவினார். யோகேஷ் குமார் மனம் மாறிவிடுவானென்று அருள் ராமச்சந்திரன் நாள் கடத்தினார். தானே எடுத் தால் என்ன? திடீரென்று அந்த எண்ணம் உதித்தது.

டைரக்ஷன்? அந்த இளம் டைரக்டர் சாரதி கண்ணன் ஞாபகம் வந்தது. சாரதிகண் ணன் நேரில் வந்து அவனைப் பார்த்தான்.

"நான் ஒரு வித்தியாசமான சப்ஜெக்ட் தரேன். டைரக்ட் பண்ணணும்..."

"டெபனெட்டா பண்றேன். ஸ்கிரிப்ட் ரெடியா?"

"என்னோட ஒன் ஸ்கிரிப்ட்தான்."


ஸ்கிரிப்டை சாரதி கண்ணன் படித்தான். அவனுக்குப் பிடித்துப் போய் விட்டதென்று முகத்தில் தெரிந்தது.

"நல்லாயிருக்கு சார்..." வித்தியாசமாவும் இருக்கு. லோ பட்ஜெட்ல எடுத்திடலாம். ஹீரோவா யாரப் போடலாம்..."

"நான்தான் ஹீரோ."

"சார்...நீங்களா?"

"ஆமாம் ஹெவி சப்ஜெக்ட். பவர்புல் ரோல் இருக்கு. ஐ ஆம் கோயிங் டு லிவ் தி



பஞ்சாபில் தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டி 'இரும்பு மனிதர்' என்ற பெயரைப் பெற்ற போலீஸ் ஐ.ஜி. 'கே.பி.எஸ்.கில்' 'பஞ்சாபி' திரைப்படம் ஒன்றில் நடிக்கிறார்! சினிமா ஆசை யாரை விட்டது? ஆனால் அரசு இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது!

- சம்பத்குமாரி

ரோல். ஓடலைன்னா கூட பரவாயில்ல...ஆத்ம திருப்திக்காக ஒரு படம்..."

"சார்..." தயங்கினான்.

"கோ அகெட்..."

"உங்களுக்கு சூட் ஆகுமா? டுயட் கெடை யாது. நீங்க லவ் பண்ற பொண்ணு வேற ஒருத் தனோட....அப்புறம் நீங்க கடைசில இறந்துடற மாதிரி...ஜனங்க ஒத்துக்க மாட்டாங்க. தியேட் டர்ல கலாட்டா பண்ணுவாங்க... விஷப் பரீட்சை வேணாம்..."

"எதுக்கு உன்னக் கூப்பிட்டேன். இன்ஸ்டி டியூட் ஸ்டூடண்ட்டுன்னுதானே, மசாலா இல்லாம எடுக்கணும்னுதானே..."

"சாரி சார்...நா இப்பத்தான் ஃபீல்டுல நுழைஞ்சு முன்னுக்கு வந்துட்டிருக்கேன். உங்கள நடிக்க வச்சு ஓடலேன்னா ராசியில்லாத டைரக் டர்ன்னு பேர் சூட்டிடுவாங்க. மோசமான ஃபீல்டு சார். இந்த சப்ஜெக்ட் எடுக்கணும்னு ரொம்ப ஆசையாத்தான் இருக்கு. ஆனா உங்கள வச்சு எடுக்க ரொம்ப பயமாயிருக்கு. வேணும்னா உங்கள வச்சு ஆக்ஷன் படம் ஒண்ணு பண்றேன்..."

"கெட் லாஸ்ட்..." கோபமாகக் கத்தினான்.

அன்றிரவு யோகேஷ்குமார் போதை ஏறி உறங்கியபோது... "ஆடறா ராமா...!" குரலுக்கு அவன் ஆட, வட்டமாக மக்கள் நின்று கைதட்டி விசிலடிக்க, அலுமினியப் பாத்திரம் நிரம்பியது.

'சக்தி' இழக்கும் சினிமா!

படத்தின் பெயர்தான் "அலி பாபாவும் நாற்பது திருடர்களும்". ஆனால் படத்தில் இடம் பெற்ற பாடல் காட்சிகள், சவால்களைச் சந்திக்கும் துணிவு, புத்திசாலித்தனம் - இப்படி எந்தக் கோணத்தில் பார்த்தாலும் முன்னின்றது கதாநாயகி மார்ஜீயானாதான்.

என்னதான் சிவாஜி கணேசன் அரசவையில் வீராவேசத்துடன் பொங்கும் காட்சி "மனோகரா"வின் ஹைலைட் என்றாலும், கண்ணாம்பா, டி.ஆர். ராஜகுமாரி ஆகியோரைச் சுற்றித்தான் கதையும் பெரும்பாலான காட்சிகளும் நெய்யப்பட்டிருந்தன.

பாசமலர், பாலும் பழமும், பார்த்தால் பசிதீரும் என்று பல 'பா' படங்களை வெற்றிகரமாக எடுத்துத் தள்ளிய பீம்சிங், பெண்மைக்குச் சரிசமமான இடம் அளித்திருந்தார்.

ஆனால் இன்று? "தளபதி படத்தில் எனக்கு முக்கிய ரோல் கொடுக்கப்பட்டிருந்தது. டைரக்டரும் என்னிடம் சொன்னபடியே என் சம்பந்தப்பட்ட எல்லாக் காட்சிகளையும் எடுத்தார். ஆனால், நடித்திருந்த நிறையக் காட்சிகளைக் கட் செய்து விட்டார்கள். நொந்து போய் விட்டேன். இத்தனைக்கும் இருபது நாட்களுக்கு மேல் அந்தப் படப் படப்பிடிப்பில் கலந்துக்கிட்டிருந்தேன்" என்கிறார் பானுப்ரியா.

பெண்களின் பொறுப்புக்களும் அவர்கள் காலப் போக்கில் அடைந்து வரும் மாறுதலான மேம்பட்ட நிலைகளும் அவர்கள்

• பானுப்ரியா, ரேவதி



சந்திக்கும் நடைமுறைப் பிரச்னைகளும் ஏன் திரைப்படங்களில் பெரும்பாலும் சித்திரிக்கப்படுவதில்லை? அப்படிச் சித்திரிக்கப்படும் படங்களிலும் நாணயமான அணுகுமுறை மிகச் சில படங்களில்தானே இருக்கிறது? உதாரணமாக வேலைக்குப் போகும் பெண்களின் சங்கடங்களைப் பற்றிய கதை என்று "மகளிர் மட்டும்" திரைப்படத்தை எதிர்பார்க்க வைத்தார்கள். ஆனால் ஆங்கிலப் படத்தில் காட்டப்பட்ட பாலியல் ரீதியான துன்புறுத்தல் மட்டுமே அப்படத்தில் சித்திரிக்கப்படுகிறது. அதுவும் காமெடிக்கு உதவும் வகையில்.


• சிவகுமார்

கதாநாயகிகள் என்றால் கையில் லத்தி அல்லது துப்பாக்கியுடன் விஜயசாந்தி டைப்பில் வருவது அல்லது வெறும் அலங்காரப் பதுமைகளாக வந்து கவர்ச்சி காட்டி விட்டுப் போவது ஆகியவை மட்டும்தான் என்ற நிலை ஏன் உருவானது?

"ஒரு நடிகை என்பவள் தான் ஏற்கும் கதாபாத்திரம் முதல் மேக்கப் வரை எதிலும் காம்ப்ரமைஸ் செய்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். போஸ்டர்களில் கூட கதாநாயகன் படம்தான் பெரிதாக அச்சடிக்கப்படுகிறது. சமயங்களில் கதாநாயகியின் தலையே போஸ்டரில் இருக்காது" என்கிறார் ஹீரா.

அப்படியானால் கதாநாயக நடிகர்களின் ஆதிக்கம்தான் இதற்கு முக்கியக் காரணமோ?

"இன்று நவரசத்தில் வீரத்திற்குத்தான் முதலிடம். காதல் கூடப் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. சொல்லப் போனால் உலகெங்கும் சினிமாவில் இதே நிலைதான். ஜேம்ஸ் பாண்ட் படங்களில் கதாநாயகிகளுக்கு எந்தவித முக்கியத்துவமும் இருக்காது. அதுபோன்ற நிலைதான் இங்கும். இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. சமீப காலமாக தமிழ்த் திரையுலகில் இடம் பிடித்திருக்கும் இளைஞர்கள் நல்ல கட்டுடல் காரர்கள். அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்த அந்தக் கட்டுடலை சினிமாவில் பயன்படுத்துகின்றனர். ஆக கதாநாயகியின் பங்கு சுருங்கி விடுகிறது" என்கிறார் நடிகர் சிவகுமார்.

'முக்தா' சீனிவாசனோ "வன்முறை அடிப்படையில் அமைந்த, பழி வாங்கும் போக்கில் உண்டான கதைகள் மட்டுமே தேர்வு பெறுகின்றன. இது போன்ற கதைகளில் பெண்களுக்கு என்ன பங்கு இருக்க முடியும்?" என்று கேட்கிறார். "அதனால்தான் கதாநாயகிகளின் முக்கியத்துவம் குறைந்தது" என்கிறார்.

சௌகார் ஜானகியின் எண்ணம் மாறுபடுகிறது. "சமீப காலங்களில் பெண்களின் புது மாறுதல்களை உணர்த்தும்படியான படம் வரவில்லையென்றும் ஒரேயடியாகச் சொல்லி விட முடியாது. புதுமைப் பெண், சிறை ஆகியவை பெண்ணை மையப்படுத்தி எடுக்கப்பட்ட அற்புதமான படங்கள்தானே.



''அந்த ஆசாமி ரொம்ப நொறுங்கிப் போய்ட்டார்.''

''எதனாலே?''

''படம் எடுத்து பப்படமானதாலே!''

— லலிதா பிரபாகர்

பாலசந்தரின் ஒவ்வொரு படத்திலுமே பெண் பாத்திரங்கள் வலுவானவர்களாயிருப்பார்கள். 'ஒரு வீடு இரு வாசல்' நல்ல உதாரணம். மணிரத்னம் கூட பெண்களின் மாறி வரும் இமேஜை அவ்வப்போது அழுத்தமாக உணர்த்தி வருகிறார். மௌன ராகம், ரோஜா போன்ற படங்களில் சிந்திக்கும், செயல்படும் பெண்களைப் பார்க்கிறோம். அது போன்ற வேடம் எனக்குக் கிடைத்தது என் நாற்பதாவது வயதில்தான். - இரு கோடுகள், காவியத் தலைவி ஆகிய படங்களைக் குறிப்பிடுகிறேன். அதுவரை சோகம் சுமக்கும் அம்மா, அண்ணி,



• சௌகார் ஜானகி

அக்கா வேடங்கள்தான் வந்தன" என்கிறார்.

"ஆனால் இளமைத் தோற்றத்துக்கும் கவர்ச்சிக்கும் முன்னெப்போதையும் விட அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது என்பதையும் மறுப்பதற்கில்லை. அதனால் காலப் போக்கில் மெருகேற்றிக் கொண்டு முதிர்ச்சியான பாத்திரத்தில் தோன்றும் வாய்ப்புகள் இன்றைய கதாநாயகிகளுக்கு ரொம்பக் குறைவு."

இக்கால நடிகைகளுக்குத் திறமை குறைவு. அதனால்தான் முந்தைய கதாநாயகிகளுக்கு அளிக்கப்பட்டது போன்ற வலுவான பாத்திரங்கள் இவர்களுக்குத் தரப்படுவதில்லை என்கிற கருத்தை மறுக்கிறார் இன்றைய முன்னணிக் கதாநாயகிகளில் ஒருவரான சுகன்யா. "என்னைப் பொறுத்தவரை எந்தவொரு படத்தை ஒப்புக் கொள்வதற்கு முன்னாலும் என் ரோல் எனக்குத் திருப்தி அளிக்கிறதா என்பதை உறுதி செய்து கொண்டுதான் ஒப்புக் கொள்கிறேன். தவிர அக்கால கதாநாயகிகளைப் போல நாங்கள் உணர்ச்சிகளை மெலோட்ராமாவாகக் காட்ட விரும்பப்படுவதில்லை. இயல்பாக நடிப்பதை மட்டுமே இக்கால ரசிகர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். இது ஓர் ஆரோக்கியமான போக்குத்தானே!" என்பது அவரது வாதம்.

இக்காலத்திலும் முழுப் படத்தையுமே தங்கள் தோள்களில் தாங்கக் கூடிய திறமைசாலி நடிகைகள் இல்லாமலில்லை. ஆனால் அவர்களுக்கு முட்டுக்கட்டைகள் பல. உதாரணமாய் ரேவதியை எடுத்துக் கொள்வோம்.

"பழுதுள்ள கதாபாத்திரம் என்பதற்



• முக்தா சீனிவாசன்

காகப் பல ரோல்களை நான் மறுத்திருக்கிறேன். சில சமயம் இயக்குனரோடு வாதாடி, பெண் பாத்திரங்கள் அடிமைகள் போல் சித்திரிக்கப்படுவதை மாற்றியிருக்கிறேன். பெண்கள் தன்னம்பிக்கையோடு சிறுமை கண்டு பொங்குபவளாகப் படைக்கப்பட வேண்டும் என்பது என் தனிப்பட்ட கருத்தும் கூட" என்கிறார் ரேவதி. என்றாலும் சிறந்த நடிகையான அவர் கூட ஆபாசமாக உள்ளது என்று கூறி தான் வாயசைக்க மறுத்த பாடல் வரிகளுக்குப் பின்பு வாயசைக்க வேண்டிய நிலைக்கு உள்ளானார்.

மற்றொரு சிறந்த நடிகையான ராதிகாவும் தாம் சந்தித்த ஒரு சங்கடமான நிகழ்ச்சியை முன்பு குறிப்பிட்டிருந்தார். கமலஹாசனோடு இணைந்து நடிக்க வேண்டிய ஒரு காட்சியில் மிக விரசமான அசைவுகளைக் கொடுக்கும்படி அவர் நிர்ப்பந்திக்கப்பட்டாராம். பிறகு அந்தப் பெரிய நிறுவனம் தயாரிக்கும் படங்களில் நடிக்கப் போவதில்லையென்றும்

அவர் முடிவெடுத்ததாகக் கூறியிருந்தார்.

“**நா**ம் விரும்பும்படி தரமான, பெண்மையின் பிரச்னைகளைக் கையாளும் படங்களை எடுக்கணும்னா 75 லட்ச ரூபாய் ரிஸ்க் எடுக்கத் தயாராக இருக்கணும். காரணம் ரசிகர்கள் நொறுக்குத் தீனிக்குப் பழக்கப் பட்டுப் போயிருக்காங்க. இரண்டு அர்த்த வசனங்கள், 'நெஞ்சோடு நெஞ்சம்' (விட்டரவாகவே) இணையும் காதல் காட்சிகள், “நீ ஆம்பிளையா இருந்தா என்னைக் காதலி” என்று சவால் விடும் நாயகி, இவையெல்லாம் இன்று சினிமாவில் சகஜமாகி விட்டன” என்கிறார் சிவகுமார்.

ஆனால் குடும்பப் படங்களையும், பெண்களை மையப்படுத்தும் படங்களையும் பார்க்கவென்று குறைந்த பட்சம் ரசிகையர் கூட்டம் உண்டே. 'தாய்மார்களின் பேராதரவுடன்' அந்தப் படங்கள் ஓடாதா? என்றால், “சந்தேகம்தான்” என்கிறார் முக்தா சீனிவாசன்.



• கௌதமி

“இப்போது வன்முறைக் கதைகளைத்தான் பெண்களும் பெரிதாக ரசிக்கிறார்கள். இதனால்தான் விசு போன்ற குடும்பக் கதை நிபுணர்கள் கூடத் தங்கள் கதைமுறையைக் காப்பாற்றிக் கொள்ளப் பெரும் போராட்டம் நடத்த வேண்டியிருக்கிறது” என்கிறார் அவர்.

ஆனாலும் நமக்கொரு சந்தேகம். ஆக்ஷன் ஹீரோக்களாகக் கருதப்படும் விஜயகாந்த், சரத்குமார் நடித்த பல படங்கள் தோல்வியடைந்து வருகின்றன. மிதமிஞ்சிய வன்முறையைக் காட்டிய அமரன் போன்ற படங்களும் விரைவில் 'டப்பா'வை அடைகின்றன. ஆக ஆக்ஷன் படங்களைத்தான் மக்கள் ரசிக்கிறார்கள் என்பதை எந்த அளவு ஏற்றுக் கொள்வது?

பாக்யராஜ் (தற்காலப் பெண்களின் பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாரோ இல்லையோ) தம் படங்களில் கதாநாயகிக்கு சமபங்கு கொடுக்கிறாரென்றே சொல்ல வேண்டும். பாலசந்தர் எப்போதுமே தம் படங்களில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர். அவள் ஒரு தொடர் கதை, ஒரு வீடு இரு வாசல், கல்யாண அகதிகள், போன்ற படங் களில் மாறி வரும் சமூகச் சூழலில் பெண் ணின் பிரச்னைகளைப் பற்றி ஆழமாகவே கையாண்டிருக்கிறார்.

பாரதிராஜாவின் 'புதுமைப் பெண்' ஒரு சமகாலப் பிரச்னையைக் கையாண்டது. ஆனால் அதைவிட தீவிரமான முடிவை அவர் புதியவார்ப்புகளிலேயே கொடுத்து விட்டதாலோ என்னவோ இது எடுபடவில்லை.

ஆக இத்தனை காரணங்களையும் அடுக்கிய பிறகு பெண்களின் சவால்களையும், அவற்றைச் சந்திப்பதையும் பற்றிப் படங்கள் எடுக்கப்படாதது நியாயம்தான் என்று படுகிறதா?

“நிறைய சமூகப் பிரச்னைகள் உள்ளன. அவற்றையெல்லாம் தாராளமாகத் திரைப் படமாக எடுக்கலாம். பெண்களின் பல நவீன காலப் பிரச்னைகளையும் திரையில்



• சுகன்யா

கொண்டு வரலாம். சில சமயம் சீரியஸ் பிரச்னைகளையும் லைட்டாகத் தந்தால் ரசிகர்கள் மனத்தில் அது பதியும் என்பது என் கருத்து. இந்த விஷயத்தில் சிங்கீதம் ஸ்ரீனிவாசராவும், பாக்யராஜும் என்னைக் கவர்ந்தவர்கள்" என்கிறார் சௌகார் ஜானகி.

"எனது இயக்கத்தில் வெளிவந்த 'நானும் ஒரு பெண்' படத்தில் கறுப்பு நிறமும், ஏழ்மைச் சூழலும் இணைந்த ஒரு பெண்ணின் பிரச்னைகளை விளக்கியிருந்தேன்!" என்கிறார் ஏ.வி. திருலோகசந்தர்.

"இன்று பெண்களுக்கு நிறைய பிரச்னைகள். முக்கியமாக வேலைக்குச் செல்லும் பெண்கள் சந்திக்கும் பிரச்னைகள் ஏராளம். கணவனை விட அதிகம் சம்பளம் பெற்றால், அவனுக்கு முன்னதாக அவள் பதவி உயர்வு பெற்றால், முக்கியமாக வேறு இடத்துக்கு அவளுக்கு வேலைமாற்றல் உண்டானால் உண்டாகும் விளைவுகள் என்று பல புதுக் குழப்பங்களுக்கு அவள் விடை காண வேண்டியிருக்கிறது. அதேபோல் மூத்த மகளாகப் பிறந்ததால் தன் குடும்பத்தைத் தாங்க வேண்டியிருக்கும் நிலையும் உருவாகி உள்ளது. புதிய பொறுப்புகளைப் பெண்கள் ஏற்றுள்ளதால் சமுதாயமே கொஞ்சம் தடுமாறிக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் வெவ்வேறு கோணங்களில் அலசலாமே. படம் முழுவதும் பிரசார நெடி அடிக்க வேண்டுமென்பது இல்லை. நல்ல கருத்துக்களைச் சில காட்சிகளிலாவது சொல்லலாமே. இதனால் மக்கள் ஒன்றும் அந்தப் படத்தை ஒதுக்கி விட மாட்டார்கள்" என்கிறார் இயக்குனர் திருலோகசந்தர்.



• ஹீரா

அத்தகைய ஒரு படம்தான் பாலு மகேந்திராவின் "வீடு". ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த, வேலைக்குப் போகும் பெண், தனக்கென்று சொந்தமாக ஒரு வீடு கட்ட நினைக்கையில் சந்திக்கும் இடர்ப்பாடுகளை யதார்த்தமாக சுட்டிக் காட்டியது அந்தப் படம். ஆனால் அர்ச்சனாவுக்கு அவார்டு வாங்கித் தந்த அந்தப் படம் ஓடவேயில்லையே! மாறாக, அதே இயக்குனரின் 'மறுபடியும்' நன்றாக ஓடியது. அதன் கதாநாயகி நிறைய துன்பங்கள் அனுபவித்தாலும் முடிவில் தன் சொந்தக் காலில் நிற்கத் தீர்மானிப்பதாகக் கதை அமைந்திருந்தது. 'மறுபடியும்' போல் இன்னொரு படம் மறுபடியும் எப்போது வருமோ!

— அருண் சரண்யா

அவுட்டோர் :



அந்தக் காட்சியைக் காசியில் படமாக்கினால் தான் வீர்யமாய் இருக்கும் என்று எல்லோருக்கும் தோன்றியது.

செயலும் பெரிது. செயலின் பரிகாரமும் பெரிதாய் இருப்பதே சிறப்பு.

மைலாப்பூர் குளம், திருவான்மியூர் கடற்கரை என்று செய்யலாம். யாரும் ஏன் என்று கேட்கப் போவதில்லை. ஆயினும் இந்தக் காட்சி கதையில் ஒரு திருப்பம். ஒரு செயல் விளக்கம். சிறப்பாய் அமைதலே உத்தமம்.

செயல் செய்தவர் கிரிஷ்கர்னாட். பிரபல கன்னட நடிகர். ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்பவர் ராஜ்ப்ரீத். பாப்புலர் காமிரா மேன். சில படங்களில் நடிக்கவும் செய்திருக்கிறார்.

இவை தீர்மானமாக, கே. டி. குஞ்சுமோனின் 'காதலன்' குழு காசிக்குப் பயணமாகியது. டைரக்ஷன் சங்கர்.

டைரக்டர் சங்கர் முன்னமே ஒருமுறை பயணப்பட்டு எது லொகேஷன் என்று தேர்ந்தெடுத்து விட்டதால் படப்பிடிப்பு இறங்கிய காலையிலேயே லொகேஷனுக்குப் போய் விட்டது.

மார்க்கெட் போல இடம். காய்கறிக் குவியல் ஜிலேபி, சமோசா அடுக்கப்பட்ட டீக்கடைகள். பித்தளை பாத்திரக் கடைகள், தாண்ட, எதிரே கங்கையின் அகலம். மூன்று அம்மாமண்டபக் காவிரி அகலம். நதிப் படுகை தான் அகலம். நதி குறுகல். கங்கை பிருது வாய்த்தான் ஓடுவானாம். நூறு கை வீச்சில் எதிர்க்கரை மணல் தொடலாம். நதி பச்சையாய் இருந்தது. வெற்றிலைப் பச்சையில்லை. கொஞ்சம் அழுக்குப் பச்சை. 'கும்மோண' வெற்றிலையை விட கனமான நிறம்.

கரை உச்சிக்கும் நீருக்கும் இடையே நூறு படிகள். இடது பக்கம் நூறு கஜம், வலது பக்கம் நூறு கஜம் என்று அகன்ற படித்துறை. நாங்கள் இறங்கியது தச அஸ்வமேத படித்துறை. பத்து அஸ்வ மேத யாகம் நடத்திய படித்துறை. யார் நடத்தியது? தெரியவில்லை.

படிகளை மறைத்து நாற்பது ஐம்பது நாணல் குடைகள். குடைகளின் கீழே மரப் பலகை. மரப்பலகையில் பண்டா. சிரார்த்தம் செய்யும் பிராமணர். மழித்த தாடையும், செதுக்கின மீசையும், கண்டு விரல் நீளக் குடுமியும் மஞ்சள் துண்டும், பஞ்சக் கச்சமும்.

புண்ய நதியல்லவா... கங்கையில் நீராடு முன், நீராடிய பின் பண்டாவின் உதவியில் மந்திரம் சொல்லி வணங்கி நிறைவாய் நிறைய பேர் கரையேறுகிறார்கள். காலைப் பொழுதிலேயே வேர்க்க ஆரம்பித்து விட்டது. பகல் நேரம் பயங்கரமாய்த் தாக்கும் என்று புரிந்து விட்டது. வடக்கே ஜூன் வெப்ப நேரம். கடும் வேனிற்காலம். மேகமே இல்லாத வானம்.

காமிரா இறங்கியவுடன் கூட்டம் சூழ்ந்து கொண்டது.

கிரிஷ்கர்னாட் ஹிந்தியில் பிரபலம். இக்காலத்தில் நடிகருக்கே சென்ற இடமெல்லாம் சிறப்பு. சுற்றி நின்று கொண்டார்கள்.

"என்ன படம்... என்ன மொழி? யார் ஹீரோ... யார் ஹீரோயின்?" மக்கள் ஹிந்தியில் கேட்பது புரிந்தது. பதில் சொல்லத் தெரியவில்லை.



கங்கைக்கரையில் 'காதலன்' குழு!

பாலகுமாரன்

போலீஸ் மாதிரி நடிக்க நாற்பது பேர் உள்ளூர் ஆட்களே தயாரானார்கள். உடுப்பு மாற்ற அவர்களுக்கு ஒரே சிரிப்பு. இதுவரை நடித்ததும் இல்லை. இனி நடிக்கப் போவதுமில்லை. ஆளுயரக் கண்ணாடி இருந்தால் போலீஸ் உடுப்பில் எப்படி என்று பார்த்துக் கொள்ளலாம். பரஸ்பரம் பார்த்து அச்சா அச்சா என்று சொல்லிக் கொண்டார்கள்.

ஒரு போலீஸ் நடிகர் கையகலக் கண்ணாடியில் மேலும் கீழுமாய் நகர்த்தி நகர்த்திப் பார்த்துக் கொண்டிருந்தார். கொஞ்ச நேரம் வேஷம் போட எல்லோருக்கும் பிடிக்கும்!

படகோட்டி, பாத்திரக் கடைக்காரர், பழம் விற்பவர், எல்லோரும் போலீஸ். இடதை வலதில் போட்டு வலதை இடதில் போட்டு இந்த ஷூ சரியில்லை என்று சொன்னவர் அநேகம். டம்மி LMGயைக் கையில் கொடுக்க, 'டடடட' என்று வாயால் சொல்லி, கரையில் உள்ளவர் அனைவரையும் சிலர் 'சுட்டு'த் தள்ளினார்கள். பிடுங்கிப் பிடுங்கிச் சுட்டார்கள்.

மொழி, தேசம் கடந்து எல்லார் மனசிலும் வன்முறை உண்டு.

"யோவ் வாங்கய்யா... இவனுங்களோட கழுத்தறுப்பா போச்சு." உதவி டைரக்டர் கன்னிய ராஜு தமக்கு மட்டுமே தமிழ் தெரியும் என்று பேச, "வாங்க... வாங்க" என்று சிலர் பதில் சொல்ல, கன்னியராஜ் பயந்து பிறகு தமிழில் கடின வார்த்தை பேசவில்லை. காசியில் பல வட இந்தியருக்குத் தமிழ் தெரிகிறது. குறிப்பாய் புடவை வியாபாரிகள், பண்டாக்கள் கொச்சையாய்ப் பேசுகிறார்கள். தமிழ் இங்கு வியாபார மொழி.

எங்கள் அதிர்ஷ்டம் எங்கள் கண்ணில் தமிழ்க் குடும்பம் எதுவும் தென்படவில்லை. பார்த்த ஒரு குடும்பமும் சினிமாக்காரா என்று முகம் திருப்பிக் கொண்டது.

கிரிஷ்கர்னாட், பண்டா எதிரே வைத்துப் பிண்டம் உருட்டிப் போட, ஏன் இது என்று ராஜ்ப்ரீத் விசாரிக்க, ஸீன் மடமடவென்று தொடர்ந்தது. கிரிஷ்கர்னாட் கன்னடர். நடிகர் மட்டுமல்ல. மிக உன்னதமான படங்களை இயக்கியவர். 'காடு' அவரின் தேசிய அவார்ட் பெற்ற படம். மொழியை, பாவத்தை உள் வாங்கி உள்வாங்கி சந்தேகம் கேட்டுத் தெரிந்து நடித்தார்.

வெய்யில் ஏற ஏற ஸீன் நகர்ந்தது. படகிலிருந்து ஒரு ஷாட், கரையிலிருந்து ஒரு ஷாட், மேடையிலிருந்து ஒரு ஷாட், படகையே ட்ராலியாக்கி ஒரு ஷாட், லஞ்ச் இடைவேளை விடவேயில்லை. வெளியூர் ஷூட்டிங்கில் வேகம் முக்கியம். சாப்பாடு அப்புறம்.

கூட்டத்தை அப்புறப்படுத்த மிகுந்த பிரயாசை எடுக்க வேண்டியிருந்தது. அசோசியேட் டைரக்டர் காந்தியும், மாதேஷும் அலைந்து அலைந்து சோர்ந்தார்கள்.

சினிமா குழுவுக்குப் பசி தாகமில்லை. பரவசத்தில் நடிக்க வந்த உள்ளூர் ஆட்களுக்கு முடியுமா?

அட போங்கடா என்று நடிகர்கள் உடுப்பு கழற்ற, கெஞ்சி, கொஞ்சி, அதட்டி, மிரட்டி... இதற்கும் மொழி தடையில்லை. மாதேஷ் தமிழில் கொஞ்ச, அவன் ஹிந்தியில் அலுப்பு சொல்ல, எல்லா மொழியிலும் பாவம் உண்டு. பாதி விஷயத்தை பாவம் சொல்லி விடுகிறது. கூட பத்து ரூபாய் என்று சொல்ல, நடிகர்கள் வெய்யிலில் நின்றனர்.

தண்ணீர் குடித்துக் குடித்துத் திகைத்த வயிறு, கண்களை மிறுக்கும் வெய்யில், காந்



தும் பாறைப் படிகள், மாலை ஆறு மணிக்கும் சிலீர் வெளிச்சம்.

ஆனால் சங்கர் காட்சி எடுத்து முடித்து விட்டார். காசியைக் காட்டும் கோணங்கள் பாக்கி. இறங்கி வெம்மை தீர முழுக்குப் போட்டோம். அலுப்பு. சீக்கிரம் கரையேறி னோம்.

மறுநாள் இன்னும் விடியலில் போக, ஐந்து மணிக்குப் பளீரென்ற வெளிச்சம். பகல் நேரம் அதிகம். படகில் ஏறி, அரிச்சந் திரா படித்துறையில் எரியும் சடலங்கள், சிவந்த கோபுரங்கள், நீராடும் மக்கள் என்று காமிரா விழுங்கியது. 'அப்படி போலாம்... இப்படி போலாம்...' - இதமான வெளிச்சம் கண்ட காமிராமேன் ஜீவாவுக்குப் பார்வைப் பசி. நேற்று படியில் நின்று காசியை கங்கை யை உணர்ந்ததை விட இப் படகுச் சவாரியில் ஒரு முழுமையை மனசு உணர்ந்தது.

படப்பிடிப்புக் குழு என்னைப் பண்டா வாக்கியது. என்ன சொல்லி முழுக வேண்டும், யாருக்கு முழுக வேண்டும்? தெரிந்தது சொன் னேன்.

மகாகவி பாரதி இங்கே எங்கேயோ தங்கியிருந்திருக்கிறான். விவேகானந்தர் ஏதோ ஒரு தெருவில் நடந்து போக குரைக்கும் நாய் களை எதிர்த்து நின்றார். சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு அரிச்சந்திரா கடுகாடு காத்தான். பல யோகியரும், முனிவரும் நடந்து நின்று அமர்ந்து கடவுளை உணர்ந்திருக்கிறார்கள். இந்தியாவின் மிகப் பெரிய நதி இது. இங்கே இறப்பது முக்தி என்று பலர் நம்பும் பூமி இது. கோவிலை விட, கோவில் மூர்த்திகளை விட நதியிலிருந்து காசியின் கரை பார்க்க வியப்பு முட்டுகிறது. இந்தியாவில் பழைமை யான நகரத்தில் இதுவும் ஒன்று. புராண, சரித் திரம் கண்ட இடம் இது. தொன்மை... தொன்மை... மிகத் தொன்மை. காலம் விழுங்கி நிற்கும் தொன்மை.

மோட்டார் படகிலிருந்து காசியை வணங்கினேன்.

கங்கையின் வேகம் கொண்டு
காசியின் வேதம் கண்டு
சிங்கமென எங்க பக்கம் வந்த துரையே
யோகி ராமா சூரத்குமாரா
பொங்கு தமிழ்நாட்டில் உத்தன்
அன்பு மழையே...

படகிலிருந்தே உரக்கப் பாடினேன். படப் பிடிப்புக் குழு என்னைக் கொஞ்சம் பித்து என்று நினைத்திருக்கும். மனிதரின் தொன் மையை உணர உணர, காலம் விரிய விரிய, மனம் பேதலித்துத்தான் போகிறது.

வடகரை எஸ்.எம். பெனிபிட் பண்ட் லிமிடெட்,

''வி.எஸ்.எம். பில்டிங்ஸ்''
113 ஆதம் சாகிப் தெரு, ராயபுரம், சென்னை - 600 013.
தொலைபேசி எண் : 5229210/5229935
பதிவு எண் : 18-25969 துவக்கம் : 1903

- சேமிப்பு கணக்கு
- வைப்பு நிதி
- கூட்டு வைப்பு நிதி
- திரும்ப வைப்பு நிதி
- பொற்குவியல் திட்டம்
- முதியோர் நலத் திட்டம்
- மாத, தினசரி சேமிப்பு திட்டம்
- மற்றும் பல திட்டங்கள் உள்ளன

கடன்

தங்க நகைகளின் பேரில் கடன் வழங்கப்படும்

✱ பாதுகாப்பு பெட்டக வசதி உள்ளது ✱
ரூ. 5/- செலுத்தி மெம்பர்களாகி பயன் பெறுவீர்

நூறுக்கு 1.85 வட்டி





MJF.L.N.S. கிர்திவாசன் உபதலைவர்

MJF.LN.Dr. R. பழனியப்பன் தலைவர்

MJF.LN.Dr. R. பழனியப்பன் B.A., B.L., D.S.S.	தலைவர்	வழக்கறிஞர், அரிமா ஆளுநர் 1993-94 தலைவர், புரசைவாக்கம் தனவர்தன சாஸ்வத நிதி லிமிடெட், சென்னை - 10.
MJF.L.N.S. கிர்திவாசன்	உபதலைவர்	உரிமையாளர், மீனாட்ஷி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சென்னை - 17.
திரு N. சிவசுப்ரமணியன்	நிர்வாக இயக்கனர்	இயக்குனர், வி.எஸ்.எம். பைனான்ஸ் (பி) லிட்., சென்னை - 13.
LN. S. ஸ்டானிஸ் வாஸ் B.Sc.	இணை நிர்வாக இயக்குனர்	பங்குதாரர், சிங்காரம் & சன்ஸ், சென்னை, தூத்துக்குடி.
திரு. M. சங்கர சுப்ரமணியன்	இயக்குனர்	தொழில்
திரு V. பாஸ்கரன், B.Com., FCS., AICWAI	இயக்குனர்	கம்பெனி செகரட்டரி
LN. K. ராஜா, D.A.E.	இயக்குனர்	உரிமையாளர், விநாயகா ஷட்டர்ஸ், சென்னை - 81.
LN. K. கோபாலகிருஷ்ணன்	இயக்குனர்	உரிமையாளர், மீனாட்ஷி ரோலிங் மில்ஸ், மீனாட்ஷி டிரேடர்ஸ், சென்னை.
LN. M. அப்துல் ரஹ்மான்	இயக்குனர்	உரிமையாளர், கமாலுதீன் கன்டெய்னர் சர்வீசஸ், சென்னை - 13.
LN. M. வேல்முருகன், D.E.E.E.	இயக்குனர்	இயக்குனர், வி.எஸ்.எம். பைனான்ஸ் (பி) லிட்., சென்னை - 13.
LN. M. பாலசுப்ரமணியம் B.A.	இயக்குனர்	இயக்குனர், வி.எஸ்.எம். பைனான்ஸ் (பி) லிட்., சென்னை - 13.
திரு B. ராஜகோபால்	இயக்குனர்	உரிமையாளர், திருச்சி ஸ்டீல்ஸ், சென்னை.

வாரவிடுமுறை : ஞாயிற்றுக் கிழமை

★ எங்களிடம் சேமித்து எங்களோடு வளருங்கள் ★ ★ விபரங்களுக்கு நேரில் அணுகவும் ★

கமர்ஷியல்
சப்ஜெக்ட்:

(தயாரிப்பாளர் திரைத்துறை நண்பர்களுடன் சோகமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்.)

தயாரிப்பாளர் : சே! நம்ம நிலைமை எப்படி ஆயிடிச்சு பார்த்தீங்களா? வன்முறையும் ஆபாசமும் சினிமாவிலே கண்டிப்பா இருக்கவே கூடாதுன்னு பிடிவாதம் பிடிக்கறாங்களே. மொத்தம் இருக்கிற பதினைஞ்சு ரீல்லே வன்முறையையும் ஆபாசத்தையும் எடுத்துட்டா பதினாலு ரீல் போயிடும். மிச்சம் இருக்கிற ஒரு ரீல்லே என்னத்தைப் படம் எடுக்கிறது?

(கதையரசர் கருப்பண்ணன் சினிமா சான்ஸ் கேட்டு உள்ளே வருகிறார்)

கருப்பண்ணன் : ஸார் என் பேரு கதையரசர் கருப்பண்ணன். எனக்கு ஒரு சான்ஸ் கொடுத்தீங்கன்னா, வெள்ளி விழா கொண்டாடற மாதிரி ஒரு கதை சொல்லுவேன்.

டைரக்டர் : கதையரசர் கருப்பண்ணனா? உங்க அப்பா அம்மா வெச்ச பேரே அதுதானா?

கருப்பண்ணன் : இல்லைங்க. பட்டத்தை நானே வெச்சுகிட்டேன். கதை சொல்லட்டுங்களா?

தயாரிப்பாளர் : கதை யாருக்குய்யா வேணும்? இவ்வளவு நாள் கதையை வெச்சா படம் எடுத்தோம்?

கருப்பண்ணன் : ஸார் கதைன்னா நீங்க நிஜமாவே கதைன்னு நினைச்சுட்டீங்களா? கதையே கிடையாது. அதான் கதை!

டைரக்டர் (தயாரிப்பாளரிடம்) : ஸார் நமக்கும் இப்ப வேலை வெட்டியில்லைன்னு ஆயிப் போச்சு. பொழுதுபோக வேண்டாமா? அவர்தான் கதையைச் சொல்லட்டுமே. எதுக்கும் கேட்டு வெப்போம்.

கருப்பண்ணன் : ஸார் உங்க பிரச்னை எனக்குப் புரியுது. சென்ஸார்லே வன்முறையும் ஆபாசமும்தான் கூடாதுன்னு சொல்றாங்க. ஆனா, கதை எவ்வளவு பேத்தலா இருந்தாலும் அதுலே அவங்க கையை வெக்க முடியாது. எல்லா தமிழ்ப்பட டைரக்டர்களும் சேர்ந்து ஒரே படத்தை டைரக்ட் பண்ணா எப்படி இருக்கும்? அப்படி ஒரு கதை நம்மகிட்டே இருக்கு.

தயாரிப்பாளர் : கதை கிராமத்துலே நடக்கிற மாதிரியா?

கருப்பண்ணன் : சேச்சே! கிராமத்துக் கதைன்னா படத்துலே கெட்ட வார்த்தைகள் வரணுமே. சென்ஸார்லே தகராறு பண்ணுவாங்க. கெட்ட வார்த்தை இல்லைன்னா கிராமத்து மண்ணோட மணம் வீசாது. அதனாலே நகரத்திலே நடக்கிற மாதிரி வெச்சுக்கலாம்.

டைரக்டர் : சரி, அப்படியே வெச்சுக்குங்க. கதையைச் சொல்லுங்க.

கருப்பண்ணன் : ஹீரோ பரம ஏழை. படிக்காதவன். தெருத் தெருவா போய் பேப்பர் பொறுக்கறதுதான் அவன் வேலை.

டைரக்டர் : வெரிகுட். ஹீரோ இந்த மாதிரி ரோல்லே இது வரைக்கும் எந்தப் படத்திலேயும் வந்ததில்லை. புதுமையா இருக்கு.

கருப்பண்ணன் : ஹீரோயின் ஒரு கலெக்டர். ஒரு நாள் மந்திரி, கலெக்டர் ஆபீஸுக்கு வந்து ஒரு ஃபைல்லே கையெழுத்துப் போடுன்னு மிரட்டறார். கலெக்டர் முடியாதுங்கறா. இரண்டு பேருக்கும் தகராறு. இந்தச் சத்தம் தெருவிலே குப்பை வாரிகிட்டிருக்கிற ஹீரோ காதுலே விழுந்ததும் அப்படியே கோணிப் பையோட ஆறாவது மாடிக்கு ஜம்ப் பண்ணிப் போறான்.

தயாரிப்பாளர் : கலெக்டரைக் காப்பாத்தறதுக்குப் போறானா?

கருப்பண்ணன் : கரெக்ட். ஹீரோவும் ஹீரோயினும் மீட் பண்ற ஸீன். ரெண்டு பேரோட கண், மூக்கு, காது எல்லாத்தையும் தனித்தனியா காட்டறோம். இதைப் பார்த்து பயந்து மந்திரி ஓடிப் போயிடறாரு.

டைரக்டர் : இந்த இடத்திலே

சத்யா



ஒரு பாட்டு வெச்சுக்கலாம்.

கருப்பண்ணன் : ஆமா. காதல் வேகத்திலே ஹீரோ கோணிப்பையை வீசி எறியறான். அந்தக் குப்பையும் கலெக்டர் ஆபீஸ் குப்பையும் கலந்து போகுது. ரெண்டு பேர் மனசும் ஒன்றிப் போகுதுன்னு சிம்பாலிக்கா காட்டறோம். கலர் கலரா காகிதங்கள் ஆகாயத்திலே பறக்குது. நடுவிலே ஹீரோவும் ஹீரோயினும் டூயட் பாடறாங்க. எப்படி?

தயாரிப்பாளர் : அதிருக்கட்டும். தெருவிலே பேப்பர் வார்றவனை கலெக்டர் ஹீரோயின் எப்படி லவ் பண்ணுவா? லாஜிக் உதைக்குதே.

கருப்பண்ணன் : அதுக்கும் ஒரு ஐடியா வெச்சிருக்கேன். பாட்டு முடிஞ்சதும், 'ஊரிலே ஒரு குப்பை கூட இருக்கக் கூடாதுங்கறதுதான் என் லட்சியம். அதுக்கப்புறம்தான் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியும்'னு ஹீரோ சொல்றான். 'மந்திரி தொல்லை தாங்க முடியலை. நானும் கலெக்டர் வேலையை ராஜினாமா பண்ணி உங்க கூட சேர்ந்து உங்க லட்சியத்தை நிறைவேத்தறேன்'னு ஹீரோயின் சபதம் போடறா. கலெக்டர் ஆபீஸ்லே ஒரு பொம்மை கை தட்டுது. ஒரு பொம்மை தலையாட்டுது. ஒரு காலண்டர் காத்துலே திரும்பிக்குது.

டைரக்டர் : சூப்பர்! அப்புறம்?

கருப்பண்ணன் : ஹீரோயின் ஹீரோவுக்கு அ. ஆ. இ. ஈ சொல்லித் தரா. பழைய காகிதங்களைப் படிச்சு உலக விஷயங்களைத் தெரிஞ்சுக்கிட்டு ஆறே மாசத்திலே ஹீரோ அகில இந்தியாவிலேயும் ஃபர்ஸ்ட் ரேங்க்லே ஐ.ஏ.எஸ். பாஸ் பண்ணி கலெக்டர் ஆயிடறான்.

தயாரிப்பாளர் : வெரிகுட். கொஞ்சம் கூட நம்பற மாதிரியில்லை. அப்படித்தான் இருக்கணும்.

கருப்பண்ணன் : ஒருநாள் ஹீரோயின் வீட்டுக்கு ஹீரோ போறான். அங்கே அவ டான்ஸ் ஆடிக்கிட்டே பாடறா. அந்தப் பாட்டைக் கேட்டதும் ஹீரோவுக்கு அதிர்ச்சி.

டைரக்டர் : அதிர்ச்சியா?

கருப்பண்ணன் : ஆமா. இந்தப் பாட்டை எங்கேயோ கேட்ட ஞாபகம். அப்போ ஒரு ஃப்ளாஷ்பேக். ஹீரோவோட அம்மா கர்ப்பமா இருக்கும் போது இதே பாட்டைத் தான் பாடறாங்க. அப்போ வில்லன் - அதான் ஹீரோயினோட அப்பா அவளைச் சுட்டுடறான். இது வயித்துக்குள்ளே இருந்த குழந்தையோட மனசிலே பதிஞ்சிடுது. அந்தக் குழந்தைதான் ஹீரோ.

டைரக்டர் : பிரமாதம். சென்டிமென்டல் டச் கிடைக்குது.

கருப்பண்ணன் : தன் தாயோட மரணத்திலே ஹீரோயினோட அப்பாவுக்குத் தொடர்பு இருக்கும்னு சந்தேகப்படறான். இந்த மர்மத்தைக் கண்டுபிடிச்ச பிறகுதான் நம்ம வாழ்க்கை தொடரும்னு சொல்லிட்டு ஹீரோ ரெண்டு கட்டிலையும் பிரிச்சு வெச்சுடறான்.

டைரக்டர் : இந்த இடத்திலே இடைவேளை வெச்சுக்கலாம்.

கருப்பண்ணன் : ஹீரோவை மயக்கறதுக்காக ஹீரோயின் பல திட்டங்கள்

We accept Fixed Deposits at the rate of 24% with incentives.

வாடகை தொல்லையிலிருந்து விடுபட!

நீங்களும் சொந்த வீடு வாங்கலாம் காசி பில்டர்ஸ் நிறுவனம் ஒரு பொன்னான திட்டம் வழங்குகிறது

காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீமின் வெற்றிகரமான 14-வது குலுக்கல் 30.10.94 அன்று காசி திரையரங்கு வளாகத்தில் பிரபல திரைப்பட நட்சத்திரங்களின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இத் திட்டத்தில் புதிதாக வழங்கப்பட்ட GIFT CARD குலுக்கல் மூலம் உறுப்பினர் களை தேர்ந்தெடுத்து கவர்ச்சிகரமான சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இத் திட்டத்தில் ரூ. 1,250/- முதல் ரூ. 5,000/- வரை மாதத் தவணைகளாகச் செலுத்தி குலுக்கல் மூலம் 277 முதல் 1111 சதுர அடிகள் வரை உள்ள வீடுகளைத் தேர்ந்தெடுத்து சொந்த வீடாக்கிக் கொள்ளலாம். மீதித் தொகையை சொந்த வீட்டிலிருந்து கொண்டே வாடகை போல செலுத்தலாம். இத் திட்டத்தில் சேருபவர்கள் அனைவருக்கும் ரூ. 300/- முதல் ரூ. 1,000/- வரை ஒவ்வொரு கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.

சுபமங்களா திட்டம் :

இத் திட்டத்தில் உடன் குடிபுகத் தயாரான நிலையில் உள்ள வீடுகளின் மொத்த விலையில் ரூ. 10,000/- மட்டுமே செலுத்தி உடனே சொந்த வீட்டில் குடியேறலாம். மீதித் தொகைக்கு நாங்கள் கடன் உதவி ஏற்பாடு செய்து தருகிறோம். இத் திட்டத்தில் வீடு பதிவு செய்பவர்கள் அனைவருக்கும் ரூ. 1,000/- மதிப்புள்ள கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.

வீடு கிடைக்கும் இடங்கள் :

சென்னை கே. கே. நகர் மேற்கு, விருகம்பாக்கம், வளசரவாக்கம், சாலிகிராமம், வடபழனி, குமரன் காலனி, கில் நகர் போன்ற இடங்களில் வீடுகள் கட்டித் தருகிறோம்.

ஒரு சதுர அடியின் விலை ரூ. 450/- மட்டுமே!

FIXED DEPOSITS :

நீங்கள் முதலீடு செய்யும் வைப்பு நிதித் தொகைக்கு 24% வட்டியுடன் ஊக்கப் பரிசுகளும் வழங்கப்படுகிறது. மேலும் கூட்டு வட்டி வைப்பு நிதியில் நீங்கள் முதலீடு செய்யும் தொகை 3½ ஆண்டுகளில் இரட்டிப்பாகிறது.

மேலும் விவரங்களுக்கு :

காசி ஹவுசிங் & டெவலப்மெண்ட் லிமிடெட்

மற்றும்

காசி பில்டர்ஸ்

காசி தியேட்டர் காம்ப்ளக்ஸ்,

91, 92 ஜவாஹர்லால் நேரு சாலை, அசோக் நகர், சென்னை - 600 095.

போன் : 4821969, 4822206 ஞாயிறு முழு நேரம் அலுவலகம் உண்டு.

FAX : 044-4821897

போடறா. ஒருநாள் ரெண்டு கழுதைகள் ரொம்ப நெருக்கமா இருக்கிறதைப் பார்க்கறா. அப்போ ஒரு கிழவர் இன்னொருத்தர்கிட்டே ஒரு விஷயத்தைச் சொல்றார்.

தயாரிப்பாளர் : என்ன சொல்றார்?

கருப்பண்ணன் : காயிதம் தின்னா எந்தக் கழுதைக்கும் மூடு வரத்தான் செய்யும். இனிமே கழுதைக்கு ரொம்ப காகிதம் சாப்பிடக் குடுக்காதேன்னு சொல்றார்.

டைரக்டர் : காகிதத்தைச் சாப்பிட்டா அப்படி ஆயிடுமா?

கருப்பண்ணன் : சேச்சே! அதை நம்பி நீங்க காகிதங்களையெல்லாம், சாப்பிட்டு வெக்கப் போறீங்க. சும்மா கதைக்காக அப்படி வெச்சுக்கறோம். இதைக் கேட்டதும் ஹீரோயின் ரீம்ரீமா பேப்பர் வாங்கிக் கூழாக்கி அதை ஹீரோ சாப்பிடும் போது கலந்துடறா.

தயாரிப்பாளர் : இந்த ஸீனுக்காகவே படம் பிச்சுகிட்டுப் போகும்னு நினைக்கிறேன்.

கருப்பண்ணன் : இந்தச் சம்பவத்துக்குப் பிறகு ஹீரோ, ஹீரோயினை மன்னிச்சுடறான். ரெண்டு பேரும் ஹீரோவின் தாயைக் கொலை செஞ்சவங்க கூட்டத்தைப் பழி வாங்கப் புறப்படறாங்க. அப்போ அவங்களுக்கு ஒரு பல்லியும் காக்காவும் உதவி செய்யுது.

டைரக்டர் : பல்லியும் காக்காவுமா?

கருப்பண்ணன் : ஆமா, எத்தனை நாளைக்குத்தான் பாம்பு, நாய், குதிரைன்னே காட்டிக்கிட்டிருப்பீங்க? வித்தியாசமா இருக்கட்டுமே.

தயாரிப்பாளர் : சரி இருக்கட்டும்.

கருப்பண்ணன் : ஒரு நாள் ஹீரோவை வில்லன் ஆளுங்க சங்கிலியாலே கட்டிப் போட்டுடறாங்க. 'உண்மையைச் சொல். நீதானே உங்கம்மாவோட பையன்?'னு கேட்டு மிரட்டறாங்க. 'எத்தனை அடி அடிச்சாலும் இந்தக் கேள்விக்கு மட்டும் நான் பதில் சொல்லவே மாட்டேன்'னு ஹீரோ சொல்றான். மந்திரி, ஹீரோயினைக் கடத் தயாரா இருக்கார்.

தயாரிப்பாளர் : அவங்க எப்படித் தப்பிக்கிறாங்க?

கருப்பண்ணன் : அவசரப்படாதீங்க. காக்கா மேலே பல்லி உட்கார்ந்து வழி சொல்லுது. காக்கா க்ளைமாக்ஸ் நடக்கிற இடத்துக்குப் பறந்து வந்து மந்திரி கையிலே இருக்கிற துப்பாக்கியைப் பறிச்சு ஹீரோ கிட்டே கொடுக்குது. பல்லி சங்கிலியை அவுத்து விட்டுடுது.

டைரக்டர் : த்ரில்லிங்கா வருது.

கருப்பண்ணன் : ஹீரோ எல்லாரையும் அரெஸ்ட் பண்ணி, 'நான் வாரினது பேப்பர். அதுதான் என்னைக்கும் சூப்பர். இனிமே நீ பாப்பர்'னு வில்லனைப் பார்த்துச் சொல்றான்.

தயாரிப்பாளர் : ஹீரோ கலெக்டராச்சே! அவன் எப்படி அரெஸ்ட் பண்ண முடியும்?

கருப்பண்ணன் : அவனே சொல்றான் 'நான் உண்மையில் ஐ.ஜி.ஆஃப் போலீஸ்தான். உங்களைப் பிடிக்கறதுக்காகத்தான் இத்தனை நாள் கலெக்டரா நடிச்சேன்'னு.

டைரக்டர் : படம் சூப்பர் ஹிட்டாயிடும்னு தோணுது. படத்துக்கு என்ன பேர் வெக்கறது?

கருப்பண்ணன் : பேருக்கா பஞ்சம்? 'மடிப்பாக்கம் மாமி', 'போடா சோமாறி', 'ஆத்தா பெத்த பொண்ணு', 'எவன்டா அவன் மந்திரி?' - இப்படி எதையாவது வெச்சுக்க வேண்டியதுதான்.

டைரக்டர் : எல்லாம் சரிதான். வில்லனை மந்திரின்னு சொன்னா சென்ஸார்லே சம்மதிக்க மாட்டாங்களே.


கருப்பண்ணன் : 'எதிர்க்கட்சித் தலைவர்'னு மாத்திக்குவோம். கவர்ன்மெண்ட்லே அவார்டு கிடைச்சாலும் கிடைக்கும்!

''வயிறு வலிக்கச் சிரிக்க வைக்கும் வாசகங்களோட ஒரு போஸ்டரா, என்னங்க எழுதியிருக்கு?''

''வால் நட்சத்திரத்தை வியாழன் கிரகத்திலேயே விழச் செய்து தமிழகத்தைக் காப்பாற்றிய புரட்சித் தாய்க்கு நன்றி! நன்றி!! நன்றி!!!''



- வீ. மனோஹரன்


வந்திருக்கிற
இருக்கா....



பார்க்க
ணு ஸ்மார்ட்டா
பில அனுப்பிடு.
பார்த்தா
வாங்க....
லைட்ஸ், காமெரா சிரிப்பு!
காமெடி
டிராக்!
DIRECTOR
செல்வம்

மணிக்கொடி

இதுவரை...

கிட்டுவின் பெரியப்பா சுதந்திரப் போராட்ட தியாகி. அவர் இறக்கும் நிலையில் தமது - சுதந்திரப் போராட்ட கால - டைரிகளைக் கிட்டுவிடம் கொடுத்து, அதைப் படித்துப் பார்த்து, சுதந்திரப் போராட்ட காலத்தை மையமாக வைத்து ஒரு நாவல் எழுதச் சொல்கிறார். அவன் டைரிகளைப் படிக்க ஆரம்பிக்கிறான்.

சுதந்திர தாகம் கொண்ட ராமசாமி, மணவாள நாயுடு மற்றும் ராஜாராமன் அவர் மகள் அஞ்சனாதேவி. அவர்களும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள்தான்.

ஒரு நாள் ராஜாராமன் வீட்டுக்கு வந்த இளைஞன் நரேந்திரநாத் பானர்ஜி, அவரது மகன் அருணாசலம் தனது தீவிரவாத நடவடிக்கை காரணமாக லண்டனிலிருந்து பிரான்ஸ் நாட்டுக்குத் தப்பிச் சென்றது பற்றிக் கூறுகிறான். அப்போது ராமசாமி தமது மனைவியிடம் இந்தச் செய்தியைச் சொல்ல வேண்டாமென்று எச்சரிக்கை செய்கிறார்...

"பாமா, பாமா..." என்று கூவியழைத்த ராஜாராமன், அவள் வந்ததும், "இந்தப் பையன் ஒரு பெங்காலி. நரேந்திரநாத் பானர்ஜின்னு பேரு. இவனோட அண்ணா நம்ம அருணாசலத்தோட லண்டன்ல படிச்சிண்டிருக்கானாம். ரெண்டு பேரும் ரொம்ப சிநேகிதமாம். 'மெட்ராஸ் போனா எங்க வீட்டுக்குப் போய் நான் சௌக்கியமா இருக்கேன்னு எங்க அப்பா, அம்மாகிட்ட சொல்லு'ன்னு சொல்லி அனுப்பி வெச்சிருக்கான் அருணாசலம்."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்ப்பா. நம்மாத்துல நீ சாப்பிட்டுட்டுத்தான் போகணும்... மெட்ராஸ்ல யாரு இருக்கா உனக்கு? எங்கே தங்கி இருக்கே? இங்கேயே தங்கலாமே?"

"தாங்க்யூ, மா" என்று சொன்ன நரேந்திரநாத் பானர்ஜி, சில நொடிகள் கழித்து, ஆங்கிலத்தில், "நான் இங்கே எழும்பூரில் உள்ள ஒரு விடுதியில் தங்கி இருக்கிறேன். நாங்கள் நான்கைந்து நண்பர்கள் கல்கத்தாவிலிருந்து வந்திருக்கிறோம். அதனால் இங்கு வந்து தங்க இயலாதம்மா. மன்னிக்க வேண்டும். இங்கே எனக்குச் சொந்தக்காரர்கள் யாரும் இல்லை... அடுத்த தடவை வரும் போது பார்க்கலாம்" என்றான்.

"தமிழ் புரியும் போலிருக்கே?"

"கொஞ்சம் கொஞ்சம் புரியும். அர்த்தம் புரியும். சொல்ல வராதும்மா."

பெங்காலிகளுக்கு இனிப்பு ரொம்பவும் பிடிக்கும் என்று தெரியும். அதனால் ஒரே ஓர் இனிப்பு மட்டும் அதிகப்படியாய்ப் பண்ணுவாள் என் மனைவி. அதை நீ சகித்துக் கொள்ள வேண்டும்."

"நன்னாச் சாப்பிடுவார். வேணும்னே மட்டந் தட்டுவார்... ஏன்னா? பாயசம் பண்ணிடட்டுமா?"

"என்ன? பாய்சன்?" என்று நரேந்திரநாத் கண் விரித்து வினவ, பாமா சிரித்தாள்.

"பாத்தியாடி? உன்னோட பாயசம் பாய்சன் மாதிரி இருக்கும்னு எப்படியோ ஊகிச்சுட்டான் பாரு... பாயசம், நரேந்திரநாத். ஆங்கிலத்தில் இனிப்புக் கஞ்சி என்பார்களே அது."


பாமா உள்ளே செல்ல, "உங்களுக்கு எத்தனை பிள்ளைகள், அய்யா?" என்று கேட்டான் நரேந்திரநாத்.

"ஒரே ஒரு மகன்தான், இரண்டு பெண்கள். மூத்தவள் ஒரு காங்கிரஸ்காரர் வீட்டுக்குப் போயிருக்கிறாள். அவளும் அருணாசலமும் இரட்டைக் குழந்தைகள். அவன் முதலில் பிறந்ததால் அவளுக்கு அண்ணா ஆகிறான். மூன்றாவது, பெண். அவள் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறாள். இன்றைக்கு விடுமுறை. தன் சிநேகிதி ஒருத்தியின் வீட்டுக்குப் போயிருக்கிறாள். இருவரும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவார்கள். எல்லோரும் சேர்ந்து சாப்பிடலாம்."

"அவசரமில்லை" என்றான் நரேந்திரன்.

"உன் அப்பா அம்மாவைப் பற்றிச் சொல், நரேந்திரநாத். அப்பா கல்கத்தாவில் என்ன செய்கிறார்? தேச சேவையில் ஈடுபட அவர் உங்களை அனுமதித்திருக்கிறாரா, அல்லது வீட்டுக்குத் தெரியாமல் செய்து கொண்டிருக்கிறீர்களா?"

"எனக்கு அம்மா இல்லை. அப்பா மட்டும் இருக்கிறார். அதிகம் படிக்காத போதிலும், மிகச் சிறந்த தேச பக்தர். கல்கத்தாவில் நாங்கள் ஜவுளிக் கடை வைத்திருக்கிறோம். லண்டனிலிருந்து துணிகளை இறக்குமதி செய்கிறோம். இங்கிலாந்தில் உள்ள எங்கள் தோழர்களின் உதவி



யால் அவ்வப்போது துணிப் பெட்டிகளுடன் வெடிகுண்டுகள் அடங்கிய பெட்டிகளும் கப்பலில் வந்து இறங்குவதுண்டு. அவற்றை அப்பா உடனே அபிநவ பாரத், அனுசீலன் சமிதி, ராஜாபஜார் கழகம் போன்ற புரட்சி இயக்க அமைப்புகளுக்கு விநியோகம் செய்து விடுவார். 1908 - 9இல் இந்த அமைப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தடைசெய்யப்பட்டு விட்டபோதிலும், இப்போது அவை மறுபடியும் புத்துயிர் பெற்று இயங்கத் தொடங்கி விட்டன. அவற்றின் பழைய விலாசங்களில் இயங்காமல் புது இடங்களில் செயல்படுகின்றன."

ராஜாராமன் பெருமிதப் புன்னகை புரிந்தார். "கேட்கக் கேட்க ஆர்வம் அதிகரித்தது. இன்னும் என்னென்ன செய்தார்கள்? சொல்லு, நரேந்திரநாத்!"

"ஆயுதக் கலைகளிலும், வெடிகுண்டுகள் தயாரிப்பிலும் பயிற்சி அடைவதற்காக விநாயக் தாமோதர் சாவர்க்கர் தம் தோழர்களுள் சிலரைப் பாரிசுக்கு அனுப்பி வைத்தார். அவர்களில் முக்கியமானவர் பாண்டுரங்க மகாதேவ் பாபட். அவர் ஏற்கெனவே பாரிசில் ரஷ்யப் புரட்சியாளர்களுடன் இணைந்து வெடிகுண்டு தயாரிப்புக் கலையில் ஈடுபட்டிருந்த சாவர்க்கரின் மற்றும் இரு நண்பர்களான ஹேம்சந்திரதாஸ், மீர்ஸா அப்பாஸ் ஆகியோருடன் சேர்ந்து கொண்டு செயல்படத் தொடங்கினார். ரஷ்யர்களிடமிருந்து வெடிகுண்டு தயாரிப்புப் பற்றிய புத்தகம் ஒன்றை அவர்கள் பெற்றனர். அன்னாக்னாஸ் எனும் ரஷ்யப் பெண்மணி அவர்களின் வசதிக்காக அந்தப் புத்தகத்தை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து கொடுத்தாராம்!"

"அட, பரவாயில்லையே. புரட்சிக்காரர்களுக்குத்தானே இன்னொரு புரட்சிக் கும்பல் மீது அனுதாபமும் அக்கறையும் இருக்கும்."

"கல்கத்தாவுக்குப் பக்கத்தில் அரவிந்த கோஷ் அவர்களின் சகோதரர் பரீந்திரகுமார் கோஷ் ஒரு வெடிகுண்டு தயாரிக்கும் தொழிற்சாலையையே ஏற்படுத்தியது உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாதே!"

"அனுசீலன் சமிதி அவர் ஏற்படுத்தியது தான் என்பது தெரியுமல்லவா?"

"அது தெரியும்."

"1905-இல் பரீந்திரகுமார் கோஷ் பவானி மந்திர் எனும் நூலை வெளியிட்டார். இந்தியாவில் பல பாகங்களிலும், ஊர்களுக்கு ஒதுக்குப்புறமான பகுதிகளில் பவானிகோவில் எனும் மத அடிப்படையிலான இடங்களைத் தோற்றுவித்து அங்கு புரட்சியாளர்கள் தங்கள் இரகசியக் கூட்டங்களைக் கூட்டவும் இடங்களை [illegible] அது

ஜோதிர்லதா கிரிஜா

வழிகாட்டியது. இதற்கு இரண்டு ஆண்டுகள் கழித்துத் தற்காலப் போராட்ட வழிமுறைகள் என்ற தலைப்பில் - வர்த்தமான் ரணநீதி என்று ஒரு நூலை வெளியிட்டவர்களும் அனுசீலன் சமிதிக்காரர்களே. இதில் கொரில்லா போர் முறை விளக்கப்பட்டிருந்தது. யுகாந்தர் – புதிய யுகம் – என்ற தலைப்பில் அவர்கள் ஒரு பத்திரிகையையும் வெளியிட்டு வந்தார்கள். இவை எல்லாமே மக்களிடையே புரட்சிகரமான சிந்தனைகளை விளைவித்தன. ஆனால் இது 1908-இல் ஆங்கில அரசால் தடைசெய்யப்பட்டு விட்டது."

"இன்னொன்று உன்னிடம் கேட்க வேண்டுமே. மிஸஸ் கென்னடி என்ற வெள்ளைக்காரப் பெண்மணியையும் அவள் மகளையும் சுட்டுக் கொன்ற குதிராம் போஸ் தூக்கில் இடப்பட்ட போது நீ கல்கத்தாவிலா இருந்தாய்?"

"ஆமாம். கல்கத்தா நகரம் முழுவதும் அமளி துமளிப்பட்டது. எங்கு பார்த்தாலும் குதிராம் போஸ் பற்றியே மக்கள் பேசினார்கள். கண் கலங்கினார்கள். மனம் கொதித்து வெள்ளைக்காரன் மீது வெறுப்பை உமிழ்ந்தார்கள்."

"இங்கே மெட்ராசிலிருந்து வெளியாகும் நாளிதழ்களில் முழு விவரங்கள் வெளிவரவில்லை. என்னதான் நடந்தது? முழுவதும் சொல்."

"மிஸஸ் கென்னடியும் அவள் மகளும் கொல்லப்பட்டதற்கான அடிப்படை என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது. சொல்லு."

"வெள்ளைக்கார மாஜிஸ்திரேட்கள் இந்தியக் குற்றவாளிகளின் விஷயத்தில் ஓரவஞ்சனையுடன் நடந்து கொள்ளுகிறார்கள். குற்றம் ஒரே மாதிரியானதானாலும், வெள்ளைக் குற்றவாளியெனில் குறைந்த தண்டனையும், இந்தியனெனில் அதிகக் கடுமையான தண்டனையும் அளிக்கிறார்கள். இது பற்றி நீங்கள் அறிந்திருக்கக்கூடும்."

"ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதியிலும் தலையங்கங்களிலும் இந்தப் புகார் அடிக்கடி இடம்பெற்று வருகிறது. நான் கவனித்து வருகிறேன்."


"இந்தப் பாரபட்சமான நீதிவழங்கலால் மனக்கசப்புற்றவர்களில் பரீந்திரகுமார் கோஷின் அனுசீலன் சமிதிக்காரர்கள் சிலர், இவ்வாறு பாரபட்சமாக நீதி வழங்கிய ஒரு மாஜிஸ்திரேட்டைக் கொலை செய்து விடவேண்டும் என்று முடிவெடுத்தனர். அதன்படி, பிரபுல்லா சக்கி, குதிராம்போஸ் எனும் இரண்டு இளைஞர்கள் அந்த மாஜிஸ்திரேட்டின் ஊரான முசபர்பூருக்குப் போனார்கள். கென்னடி எனும் வெள்ளைக்காரர் தம் மனைவி, மகள் ஆகியோருடன் பயணம் செய்து கொண்டிருந்த கோச்சு வண்டியை அந்த மாஜிஸ்திரேட்டினுடையது என்று தவறாக எண்ணி விட்ட இருவரும், அதன் மீது ஒரு குண்டை வீச, அதன் விளைவாக அந்த வெள்ளையரின் மனைவியும் மகளும் மாண்டு போனார்கள். இரண்டு புரட்சிக்காரர்களும் உடனே அங்கேயே கைது செய்யப்பட்டார்கள். பிரபுல்லா சக்கி தன்னைத் தானே சுட்டுக் கொண்டு இறந்து போனான். குதிராம் போஸ் தூக்கில் இடப்பட்டான். அவர்களது இரகசிய அலுவலகம் கண்டுபிடிக்கப்பட்டது. நிறைய புரட்சிக்காரர்கள் பிடிபட்டனர். பரீந்திரகுமார் கோஷ், அவர் அண்ணன் அரவிந்தகோஷ் ஆகிய இருவரும் கூடப் பிடிபட்டனர். குதிராம்போஸைப் பிடித்துக் கைது செய்த நந்தலால் எனும் இந்திய சப்-இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்பட்டான். குதிராம்போஸைத் தூக்கில் போட்ட பிறகு, அவனது நினைவாகப் பள்ளிகள் இரண்டு நாள் விடுமுறையை அனுஷ்டித்தன. எங்கு பார்த்தாலும் அவனது புகைப்படம் கடைகளில் விற்பனைக்காக வைக்கப்



Kachchi Moodoor Archakas Welfare Trust (Regd.)

Regd. Office : No. 1, Salai Street, Kancheepuram - 631 502
Admn. Office : P.B. No. 5332 No. 10, II Main Road, Kotturpuram, Madras - 600 085.
Phone : 411936





APPEAL

POOJYA Sri Chandrasekharendra Saraswathi Swamigal, invoking the blessings of Goddess Kanchi Kamakshi, created this Trust in 1986, to implement a scheme for the welfare of Archakas, serving mainly in ancient village temples. Accordingly, deserving and indigent archakas, — Bhattacharyas, Hereditary Poojaries and Sivacharyas — are selected each year, to be honoured monetarily on a continuable basis, so as to help in preserving the spiritual and cultural heritage enshrined in and pervading around such temples.

The groundwork for indentifying deserving Archakas starts in August/September of every year and culminates in conducting oral examinations at various centres in February/March of the succeeding year. Visits to the temples of the Archakas successful in the examination made during April/May, lead to the final selection of beneficiaries.

This scheme became operative from June 1987, with five Archakas being aided, each with Rs. 100/- per mensem. The Grace and Guidance of the Jagadguru has made this Trust progress steadily and transparently. Today on His 101st Jayanthi Day, it is poised to honour about 210 Archakas each with an enhanced aid of Rs. 225/- per mensem. Also, Group Insurance premium for eligible beneficiaries is borne by the Trust.

The entire expenses of the Trust are met from the earnings on the investiments made. In order to serve fresh batches of Archakas and to raise the quantum of aid to them periodically, the corpus fund has to be augmented. Maha Periyava had directed this Trust that the corpus fund must be built up only through the donations from Devotees. Hence this appeal is being made to all the Devotees.

The Great Sage of Kanchi had also given the Guidance that while devotees with a monthly gross income of less than Rs. 4000/- can contribute any amount, the other Devotees are required to donate their one month's gross income at least once in their life-time. To those who cannot make such an offering forthwith the Acharya suggested that the same can be sent in two or three equal instalments. Otherwise they can also earmark small amounts periodically and send the consolidated amount later to this Trust. Exemption under Section 80 G of I.T. act is available. This Trust is also registered under FCRA to receive donations from abroad.

Donations may kindly be sent to the Administrative Office at the address given above, by Money Order, Crossed Cheque/Demand Draft drawn in favour of KACHCHI MOODOOR ARCHAKAS WELFARE TRUST. Instruments like Indira Vikas Pathras and legacies to this Trust are also accepted. Donations to this Trust may be made at Srimatam, Kancheepuram also.

May I, on behalf of the Trust, once again appeal to all Devotees to donate for this noble cause espoused by this Great Avatar of our own times and help to preserve our rich spiritual and cultural heritage.

N. Krishnaswamy Reddy

JUSTICE N. KRISHNASWAMY REDDY (Retd.)
Chairman of the Trust

பட்டு, அவை ஆயிரக்கணக்கில் விற்பனை ஆயின. பரீந்திரகோஷின் கும்பலைச் சேர்ந்த நரேந்திரகோசேங் என்பவன் துரோகியாக மாறிக் காட்டிக் கொடுத்ததால்தான் வெள்ளைக்காரர்களால் அவர்களது இரகசிய அலுவலகம், கடிதப் போக்குவரத்து பற்றிய தகவல்கள், திட்டங்கள் போன்றவற்றை அறிய முடிந்தது. நரேந்திரா எனும் என் பெயரை அவனும் வைத்துக் கொண்டிருந்தது என்னை அவமானத்தில் ஆழ்த்துகிறது."

ராஜாராமன் புன்னகை செய்தார். "நமக்குள்ளேயே இவ்வாறு சில துரோகிகள் மட்டும் இல்லாதிருந்தால் நாம் வெள்ளைக்காரனை விரட்டும் நாள் அதிகத் தொலைவில் இல்லை...".

"என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்? ஆங்.. குதிராம்போஸ், பிரபுல்லா சக்கி ஆகிய இருவரும் கென்னடி குடும்பத்தினரைக் கொலை செய்த வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கும்போதே, கோர்ட்டிலேயே வைத்து பப்ளிக் பிராசிக்யூட்டரும், போலீஸ் டெபுடி சூப்பரின்டெண்டும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்."

"ஆமாம், ஆமாம். படித்தேன்."

"இந்த வழக்கில் தேச பக்தர்களைக் காட்டிக் கொடுத்த நரேந்திரகோசேங்கை கன்னயலால் தத்தா என்பவனும் சத்தியன் போஸ் என்பவனும் சிறைச்சாலைச் சுற்றுச் சுவரினுள்ளேயே சுட்டுக் கொன்று விட்டார்கள். கன்னியலால் கூடத் தூக்கிலிடப்பட்டான். மாவீரனாய்க் கருதப்பட்ட அவனது சவ ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். இதற்கு முன்னால் அத்தகைய பிரும்மாண்டமான மக்கள் நெரிசலை நான் பார்த்ததே இல்லை..."

அப்போது வெளியே தன் தோழி ஒருத்தியின் வீட்டுக்குப் போய்த் திரும்பிய அமராவதி, காலணிகளைக் கழற்றி விட்டு உள்ளே வந்தாள். அப்பாவுடன் அமர்ந்திருந்த நரேந்திரநாத் பானர்ஜியைப் பார்த்தாள். அவனும் பார்த்தான். இருவரின் பார்வைகளும் விரிந்தன.

"அட, நீங்களா?" என்றாள் அமராவதி.

"என்ன ஆச்சரியம்?" என்றான் அவன்.

ராஜாராமன் சற்றே வியப்புற்றவராய் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார். 'தமக்குத் தெரியாமலே தம் இளைய மகளும் இரகசியப் புரட்சிக் கும்பலில் சேர்ந்திருக்கிறாளா என்ன?' என்ற கேள்வி அவருள் எழுந்தது. ஆனால், 'அதை மறைக்க வேண்டிய அவசியமே இல்லையே?' என்ற எதிர்க் கேள்வியும் எழுந்தது. எனவே அவர்களே சொல்லட்டும் என்பது போல் அவர் மௌனமாக இருந்தார்.

(தொடரும்)



"ராமு தலைமுறை இடைவெளிக்கு ஒரு உதாரணம் கொடு!"

"தில்லானா மோகனாம்பாள் சினிமாவில சிவாஜி நாதஸ்வரம்தான் வாசிப்பாரு. டுயட் படத்துல அவர் மகனோ சாக்ஸபோன் வாசிக்கிறாரு, சார்!"

- ஆர்.ரகோத்தமன்.



தயாரிப்பாளர்: அந்த வில்லன் நடிகர் எதுக்காக டைரக்டர்கிட்டே தகராறு பண்றாரு?

உதவி டைரக்டர்: கற்பழிப்பு காட்சிகளை ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ல வெச்சிருக்கக் கூடாதாம்!

தயாரிப்பாளர்: அதனால?

உதவி டைரக்டர்: ஏதாவது ஒரு போலீஸ் ஸ்டேஷன்ல வெச்சிக்கச் சொல்றாரு!



நண்பர்: எது எதுக்குத்தான் போஸ்டர் ஒட்டறதுன்ற வெவஸ்தையே இல்லாம போயிடுச்சின்னு எப்படி சொல்றீங்க?

அடுத்தவர்: அந்த நடிகைக்கு கல்யாணம் ஆகி இன்னையோட நூறு நாள் ஆவுதாம். இன்னும் டைவர்ஸ் ஆகாத கணவர் மகிழ்ச்சியோட விழா எடுக்கப் போறாராம்!

-ஆர். நரேந்திரன்.

மீண்டும் வந்துவிட்டது... உங்களுடைய செல்ல மகளுக்கு.

ராஜ் லக்ஷ்மி

யூனிட் ப்ளான்

அவளுடைய வளமான எதிர்காலத்திற்கு

இத்திட்டம்
ஜூலை 1, 1994
முதல்
அமலில் உள்ளது

சிறப்பம்சங்கள்:

- காலவரையறையற்ற ப்ளான்.
- குறைந்தபட்ச முதலீடு ரூ. 1500 மற்றும் அதற்குமேல் ரூ. 500-ன் மடங்கில். உச்ச வரம்பு கிடையாது.
- தனிநபர், மாநில, மத்திய அரசு, ட்ரஸ்ட், சங்கம், கார்ப்பொரேட் பாடி — 5 வயது வரையுள்ள பெண் குழந்தைக்காக முதலீடு செய்யலாம்.
- குழந்தை பிறந்ததும் செய்யும் ரூ. 1500 முதலீடு 20 ஆண்டுகளில் ரூ. 21,000 ஆகலாம். வளர்ச்சி நிலை ப்ளானில் சேர்ந்திடும் வயதைப் பொறுத்திருக்கும்.
- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப் பட்ட தேதியிலிருந்து முதிர்வுறும் தேதி கணக்கிடப்படும்.
- ஒவ்வொரு காலவரையிலும் அறிவிக்கப்படும் போனஸ் முதிர்வடைந்ததும் வழங்கப்படும்.

எல்லா விதமான ம்யூச்சுவல் ஃபண்டுகள் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யும் முதலீடுகளும் மார்க்கெட் ரிஸ்க்கிற்கு உட்பட்டவையாகும். மற்றும் செக்யூரிட்டிகள் மார்க்கெட்டை பாதிக்கும் அம்சங்கள் மற்றும் ஆட்சித்திறம் பொறுத்து திட்டங்களின் NAV ஏற்றமும் இறக்கமும் செய்யும். ராஜ் லக்ஷ்மி என்பது திட்டத்தின் பெயர் மட்டுமே மற்றும் திட்டத்தின் தரத்தையோ, அதன் எதிர்கால வளர்ச்சியையோ அல்லது வருமானத்தையோ எவ்விதத்திலும் சுட்டிக்காட்டுவது ஆகாது. தயவுசெய்து முதலீடு செய்யும் முன் ஆஃபர் பத்திரத்தைப் படிக்கவும்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101

கிளை அலுவலகங்கள்: • கோயம்புத்தூர். போன்: 214973 • சென்னை. போன்: 517101, 517190 • மதுரை. போன்: 38186 • திருச்சி. போன்: 27060

UTI-59/94 TM B

குளோசப்:

பாட்டுக் கோட்டைப் பக்கம் போகாததேன்?

சிறந்த கவிஞராகப் பரவலாக அறியப்படும் நீங்கள், உங்கள் கணவர் சினிமாக் கவிஞராக இருந்தும் - சினிமாவுக்குப் பாட்டு எழுத வராதது ஏன்?



• பொன்மணி வைரமுத்து

பொன்மணி வைரமுத்து :

விருப்பமில்லை என்பதுதான் என் பதில். என்னால் 'காம்ப்ரமைஸ்' பண்ணிக் கொள்ள முடியாது - எந்த விஷயத்திலும். சினிமாவோ - 'காம்ப்ரமைஸ்' செய்தவண்ணம் ஓடிக் கொண்டிருக்கிறது. ஒரு பெண்ணால் சினிமாக்காரர்கள் கேட்கும் எல்லா சிச்சுவேஷன்களுக்கும் எழுத இயலாது என்பது என் தனிப்பட்ட அபிப்பிராயம். திலகவதி, நிர்மலா சுரேஷ் போன்றவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களும் இதே கருத்தைத்தான் சொல்கிறார்கள். இப்போது கூட 'இந்திரா' படத்திற்கு எழுத ரகுமான் என்னைக் கூப்பிட்டார். முடியாது என்று சொல்லி விட்டேன்.

'கையில காசு; வாயில தோசை' என்ற பாடல் மூலம் சினிமாவுக்குள் நுழைந்த நீங்கள் தொடர்ந்து எழுதாத காரணம் என்ன? வாய்ப்புகள் இல்லையா?

தமிழன்பன் :

அதற்கப்புறம் ஓரிரு பாடல்கள் எழுதினேன். ஆனால் வாய்ப்புக் கேட்டு அலைவதெல்லாம் என்னால் இயலாத காரியம். யாராவது என்னை எழுதச் சொல்லிக் கேட்டால் மறுப்பதில்லை. தவிர, சினிமாவுக்கு எழுத 'கவிஞர்கள்' தேவையில்லை. மெட்டுக்குச் சொல் கட்டுபவர்கள் போதும் என்பதுதான் இன்றைய நிலை. பாப்புலாரிட்டிக்காக அந்தப் பணியை ஏற்க நான் தயாரில்லை. என் முதல் சினிமாப் பாடலுக்குக் காரணமான பாலசந்தரே, கொஞ்ச நாள் முன்பு 'நாம் மறுபடி இணைந்து பணியாற்றுவோம்' என்று ஒரு சந்தர்ப்பத்தில்



• தமிழன்பன்



• இளந்தேவன்

சொன்னார். அப்படி சந்தர்ப்பம் வந்தால் எனக்கொன்றும் மறுப்பு இல்லை.

மேடைக் கவிஞராக இருப்பதாலேயே உங்களால் சினிமாவில் கவனம் செலுத்த இயலாமல் போகிறதா?

இளந்தேவன் :


முதல் விஷயம் நான் ஓர் அரசு ஊழியன். அலுவலகப் பணிகளையும் பார்த்துக் கொண்டு, மேடைகளையும் கவனித்துக் கொண்டு சினிமாவிலும் ஈடுபடுவதென்பது சிரமம். டீ.வி. ஸ்டேஷனில் என் அட்ரஸ் கேட்டு வாங்கி, தமது 'கவிதை பாட நேரமில்லை' படத்துக்குப் பாட்டெழுதக் கூப்பிட்டார் யூகிசேது. நல்ல பாடல்கள் என்ற பெயர் கிடைத்தது. ஆனால் படம் ஓடவில்லை. பிறகு ஆர்.எம்.வீயின் புதிய வானத்தில் ஒரு பாட்டு எழுதக் கூப்பிட்டார்கள். எழுதினேன். இப்படியாக சூழ்நிலை உருவானால் மட்டுமே என்னால் செயல்பட முடிகிறது.

பேட்டி : **கிச்சா**

திரைப்படக் கவிஞருக்கு தாதாசாகேப் விருது!



இந்தி திரைப்படக் கவிஞர் மஜ்ரூஹ் சுல்தான்புரி, இந்த வருடம் தாதா சாகேப் பால்கே பரிசைப் பெற்றார். இவர் எழுதும் பாடல்கள், கவிதையின் தரத்துக்கு உயர்ந்து இருக்கும். ஒரு திரைப்படப் பாடலாசிரியருக்கு தாதா சாகேப் அவார்டு கிடைத்திருக்கிறதே என்று, நம்மூர்க் கவிஞர்கள் ஒரு வரி கூடப் பாராட்டாது இருந்து விட்டதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.



பழைய படங்களைப் பார்க்க ஆசையா?

"வின்டேஜ் ஹெரிடேஜ்" என்று ஓர் அமைப்பு. சென்னையிலிருக்கும் இந்த அமைப்பு, 1950 ஆம் ஆண்டுக்கு முன்பு வெளியான திரைப்படங்களைத் தனது உறுப்பினர்களுக்குத் திரையிட்டுக் காட்டுகிறது. அதுமட்டுமல்ல; அந்தப் படத்தில் நடித்துள்ள நடிக நடிகையர்கள் இப்போது இருப்பார்களானால் அவர்களையும் அழைத்து வந்து, படம் முடிந்ததும் அவர்களது மலரும் நினைவுகளைத் தனது உறுப்பினர்களோடு பகிர்ந்து கொள்ள வைக்கிறது.

KKR Finance & Investments

KKR டெப்பாஸிட் திரட்டும் காலம்

- டெப்பாசிட்டுகளுக்கு **24% + 1% P.A.** வட்டி வழங்கப்படும்.
- டெப்பாசிட்டர்கள் ஆகஸ்ட் 15 அன்று கௌரவிக்கப்படுவார்கள்.
- வட்டிக்கான காசோலைகள் முன்னதாகவே வழங்கப்படும்.
- குறைந்தபட்ச டெப்பாசிட் ரூ. 5,000/- மற்றும் அதன் மடங்குகளில்.

ஆகஸ்ட் 15 வரை மட்டுமே!



3 ஆண்டுகளில் பணம் இரண்டு மடங்காகிறது.

KKR Finance & Investments

No. 121, M.H. Road (North),
Perambur, Madras-600 011.
Phone : 5375456, 5376796, 5377777

EFFICIENT/KKR/101/94

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1994

ரூ. 1500 - முதல் பரிசுக் கதை

அந்நிய துக்கம்

ஈச்சனாரி ரயில்வேகேட் சாத்தியிருந்தால், பஸ்ஸில் வருபவர்கள் சலிப்புத் தட்டுவார்கள். அழகுவின் முகத்தில் சந்தோஷம் வந்து குதிக்கும். கிழிந்த அரை டவுசரை அரைஞாண் கயிற்றால் இறுக்கிக் கொண்டு, வட்டமான தட்டைக் கூடையைத் தோளில் உயர்த்திக் கொள்ளுவான். கேட் சாத்தியதால் தங்கி விட்ட பஸ்ஸில் ஒரு வீரனைப் போலப் பாய்வான்.

"கல்லே... கல்லே... வேர்க்கல்லே..."

"உச்சி வெய்யிலுக்கு எப்படி வேர்த்து வடியுது... வேர்க்கல்லேங்கறியே தம்பி!" என்று சில பேர் ஜோக் மட்டும் அடிப்பார்கள். வேர்க்கடலை வாங்க மாட்டார்கள். பாலிதீன் பைகளில் அடைத்த சின்னச் சின்ன வேர்க் கடலைப் பாக்கெட்டுகள். சிந்தடிக் சர்ட் ஜேபியில் நூறு ரூபாய் நோட்டுக்கள் கண்ணாடி போலத் தெரிகின்றன. ஐம்பது





அவர் அம்மாவிடம் கொஞ்சலாக வும், கெஞ்சலாகவும் பேசுகிற மாதிரி குரல் கேட்கும். கனவு என்று நினைத்து தூக்கத்தில் கரைந்து போவான் அழகு.

அம்மா கறுப்பாயிருந்தாலும் அவனுடைய மிகச் சின்ன வயது களில் விக்கிரகம் மாதிரி அழகாய் இருந்ததாய் ஞாபகம். இப்போது நோஞ்சான் விக்கிரகம். இருமல் சத்தம் அப்பாவிடமிருந்து தொற்றிய குடும்ப சீதம். அடிவயிற்றை எக்கிக் கொண்டு கிளம்பும் அதே பாணி இருமல் குளிர்காற்றடித்தால் அழகுக்கு வரும்.

அம்மாதான் பாதி கிளாஸ் நடக்கையில் ஒருநாள் பள்ளிக் கூடத்திலிருந்து கூட்டிப் போனாள். "இனிமே இஸ்கூல் வேணாம் அளகு."

ஏன், எதற்கு என்று கேட்கவில்லை. அவனுக்கு விடுதலை சந்தோஷம். அண்ணாச்சி கடையில் கொண்டு போய் விட்டாள்.

"அண்ணாச்சி... (இருமல்)... எனக்கும் இப்பல்லாம் ஆவறதில்லை. இவங்கப்பன் வெவகாரந்தான் ஒங்களுக்குத் தெரியுமே! ஒரு செல்லாக்காசு சம்பாதிச்சுப் போடத் துப்பில்லாத ஆளு! இனிமே அளகு கொண்டாந்தாத்தான் அடுப்புல பொங்கிப் போட முடியும்."

அண்ணாச்சி இரண்டு நாள் அவனைக் கடையில் வைத்திருந்தார். அன்பாக, பொறுமையாக, தெளிவாக, நிதானமாக, கடைசியில் பொறுமை இழந்து ஒரு குட்டுக் குட்டி சொல்லிக் கொடுத்தும் அழகுக்குப் பொட்டலம் கட்டிற் கலை கைவசத்தில் கைவரவில்லை

பைசாவுக்கு என்னமாய் யோசிக்கிறார்கள்.

அந்த லெவல் க்ராசிங்கிற்கு அப்பாலிருக்கும் சேரிதான் அழகுவின் சாக்கடைகளும், சகதிகளும் நிரம்பிய அன்னை பூமி. அவன் பெயருக்கும் உருவத்துக்கும் மயிரிழை சம்பந்தமுமில்லை. கருகிய ரொட்டித் துண்டு போலிருப்பான். நாலாங்கிளாஸ் வரை பள்ளிக்கூட வாசனை. ஸ்கூலில் தமிழ் வாத்தியார்தான் அவனை அழுத்தந்திருத்தமாய் உச்சரிப்பார். மற்றவர்கள் எல்லோருமே, "அளகு... அளகு..." சமயத்தில், "அலகு."

போன வாரம் அவன் அப்பா வாயில் நுரை தள்ளி செத்துப் போனார். அழகுக்கு அதில் சொற்பமும் துக்கமில்லை. அவர் என்ன வேலை பார்த்தார் என்று இன்றைய தேதி வரை அவனுக்குத் தெரியாது. அவனைப் பொறுத்தவரை அநேக நேரங்களில் கள்ளச் சாராய போதையுடன் வாய் குழறுபவர். அரசியல் கரை வேட்டி கட்டியிருப்பவர். பல சமயம் மொக்கைக் காயங்களுடனும், சில சமயம் ரத்தக் காயங்களுடனும் வீடு திரும்புபவர். நள்ளிரவில் அம்மாவின் கூந்தலைக் கொத்தாய்ப் பற்றி உலுக்குபவர். அவளை அடித்து, உதைத்து, வயிற்றில் மிதித்து துவம்சம் செய்பவர். பின்னிரவுகளில்





அருள்வாக்கு

பொழுதுபோக்கு, உத்ஸாஹம், Pleasures of the senses என்று இருப்பவை எல்லாமே மநுஷ்யனை ரொம்பவும் இழுத்துக் கொண்டு போகிற சக்தி உள்ளவையாயிருக்கின்றன. 'இழுத்துக் கொண்டு' என்றால் மேலேயா என்றால் அப்படியுமில்லை. பாட்டு, கூத்து, ஸினிமா, ஸ்போர்ட்ஸ், நாவல், பத்திரிகைகள் எல்லாம் சாப்பாடு திகட்டிப் போகாமல் ஊறுகாய் மாதிரி கர்மாநுஷ்டானங்களில் ஸ்ட்ரெயின் ஆகாமல் ரிலாக்ஸ் செய்யவே இருக்க வேண்டும் என்றுதான் சாஸ்திரங்களில் அநுமதித்திருப்பது. கடைசி பக்ஷமாகத்தான் இவற்றுக்கு நம் மனஸையும், பொழுதையும், பொருளையும் கொடுக்க வேண்டும். ஆனாலும் ஈச்வர மாயையில் எப்படியிருக்கிறதென்றால் கொஞ்சம் இதுகளில் இறங்கினாலும் இவை சுழலாக நம்மை ஒரேயடியாக இழுத்துக் கொண்டு போய் இவற்றுக்காகவே நாம் ஸகலத்தையும் அர்ப்பணம் பண்ணுகிற நிலைக்குக் கொண்டு நிறுத்துகின்றன.

இப்படியிருப்பதற்குக் காரணம் தற்போது நமக்குக் கர்மாநுஷ்டானம் ரொம்ப

"சும்மா வெச்சு காசு தர முடியுமா! கூட்டிட்டுப் போயிரம்மா. இங்க இவனுக்கு வேலை இல்லை."

"அண்ணாச்சி... அண்ணாச்சி..." அழுது அரற்றினாள் அம்மா. என்ன இது இழவாகப் போயிற்று என்று யோசித்த அண்ணாச்சிக்கு, நிர்ப்பந்தத்தில் அந்த யோசனை பிறந்தது. தட்டைக் கூடையை எடுத்து அழகுவின் கையில் கொடுத்தார். பாட்டிலின் தகர மூடியை சுழற்றிச் சுழற்றி கடலைப் பாக்கெட்டுகளைத் தட்டைக் கூடையில் கொட்டிப் பரப்பினார்.

"ரயில்வே கேட்டுக்குப் போ. ஒரு பாக்கெட் வித்தின்னா உனக்குப் பத்துக் காசு."

கட்டிப் போட்ட மாதிரி கடைக்குள் கிடப்பதை விட அழகுக்கு இது பிடித்தது. தட்டைக் கூடையைத் தலைக்கு மேல் தூக்கிக் கொண்டு ஈச்சனாரி ரயில்வே கேட்டுக்கு ஓடினான். கோவை - கொச்சின் எக்ஸ்பிரஸ் ரயில்கள், சரக்கு ரயில்கள் குறைந்தது ஒரு மணி நேரத்துக்கொரு தரமாவது அந்த வழியாகச் செல்லும். முணுக்கென்றால் கேட்டை சாத்தி விடுவார்கள். கேட் சாத்தினால் அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் சில லாரிகள், பத்துப் பதினைந்து பஸ்களாவது தேங்கிப் போகும்.

"கல்லே... கல்லே... வேர்க்கல்லே..."

அழகுவின் சத்தம் கேட்டால் சில குழந்தைகள் அடம் பண்ணி வாங்கும். பெரும்பாலான வெள்ளுடுப்பு ஆசாமிகள் இவனைப் பார்ப்பதே பாவம் என்கிற மாதிரி விறைப்பாய் முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள். பஸ்ஸில் வரும் கிராமத்து ஜனங்கள்தான் கல்மிஷமில்லாமல் பேசி அவனிடம் கடலைப் பாக்கெட்டுகள் வாங்குவார்கள்.

சில சிடுமூஞ்சி கண்டக்டர்கள் அவன் படிக்கட்டில் காலை வைத்தாலே நாயை விரட்டுகிற மாதிரி விரட்டித் தள்ளுவார்கள். வேறு சில கண்டக்டர்கள் தயவான்கள் போல் அவனை பஸ்சுக்குள் அனுமதித்து விட்டு இறங்கிப் போகையில் ஒரு வேர்க் கடலைப் பாக்கெட்டை முழுசாய் லவட்டிக் கொள்ளுவார்கள். ஐந்து பாக்கெட் விற்றால் அழகுக்குக் கிடைக்கக்கூடிய ஐம்பது பைசா அநியாயமாய்ப் பறிபோகும்.

"அண்ணே... அண்ணே..." என்று கண்டக்டரிடம் கெஞ்சுவான். குழைவான்.

"பஸ்சுக்குள்ளே எவ்வளவு பாக்கெட் விக்கறே...? ஒண்ணு தந்தாக் கொறைஞ்சா போய்டுவே? அப்புறம் நாளைலேர்ந்து இந்த கேட்டுல ஒரு பஸ்ல நீ காலை வெக்க முடியாது ஜாக்ரதை! அங்க பாரு எஸ்ஸார்ட்டீ பஸ் வந்து நிக்குது. ஓடு."

அந்த நிமிஷம்தான் காத்திருப்பு வரிசையில் கோத்துக் கொண்ட அந்த பஸ்சுக்கு ஓடுவான். தினமும் அடித்துப் பிடித்து எழுபத்தைந்திலிருந்து, நூறு பாக்கெட் வரை விற்று விடுவான். அதற்கப்புறம் பாத்திரம் தேய்க்கவும், துணி துவைக்கவும் வீடுகளுக்குப் போவதை அம்மா நிறுத்தி விட்டாள். அந்த எலும்பை உருக்கும் இருமலால் நிறுத்தப்பட்டு விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். அவளால் உடம்புக்கு முடியவில்லை என்பது ஒருபுறம். எச்சில் தெறிக்க அவள் இருமுவதை மற்றவர்கள் அருசையாய்ப் பார்த்தார்கள் என்பது இன்னொருபுறம்.

அழகுவின் வியாபார நிம்மதி ஒரு மாதம் கூட நீடிக்கவில்லை. அன்றைக்கு கேட் சாத்தி பஸ் ஒன்று வந்து நின்றதும்

"கல்லே... கல்லே... வேர்க்கல்லே..."

பஸ்ஸுக்கு அந்தப் பக்கம் அசரீரி மாதிரி ஒரு புதிய குரல். அழகு திடுக்கிட்டு பஸ்சை சுற்றிக் கொண்டு அந்தப் பக்கம் போய்ப் பார்த்தான். அவனை மாதிரியே இன்னொரு பொடியன். அவனிடம் ஐம்பது காசு கொடுத்து



வும் குறைந்து போயிருப்பதுதான். அநுஷ்டானம் நிறையச் செய்தோமானால் தன்னால் நல்லறிவு, சுத்தமான மனஸ், கட்டுப்பாடு, sense of proportion (எதற்கு என்ன அளவு என்ற நிர்ணயமான உணர்வு) எல்லாம் உண்டாகிவிடும். அதனால் பொழுது போக்கையே வாழ்க்கைப் போக்காக, அதிலும் வழுக்கி விடுகிற போக்காக ஆக்கிக் கொள்ளாமல் எந்த அளவோடு ருசித்து விட்டு நிறுத்திக் கொள்ள வேண்டுமோ அப்படி நிறுத்திக் கொள்வோம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

ஜன்னல் வழியாக ஒருவர் வேர்க்கடலைப் பாக்கெட்டை வாங்கிக் கொண்டிருந்தார்.

அழகுக்குள் ஆத்திரப் புயல். தன்னுடைய காசை இன்னொருத்தன் தட்டிப் பறிக்கிற உணர்வு. அவன் தோளைத் தொட்டுத் திருப்பினான்.

"யார்ரா நீ...?"

"ராக்கப்பன்."

"இங்க எதுக்குக் கடலை விக்கறே?"

"வித்தா உனக்கென்ன?"

"நாந்தான் மொதமொதல்ல இங்க வந்தது. ஒரு மாசமா விக்கறேன் தெரியுமா?"

"செட்டியார் கேட்டாண்ட போய் என்னைக் கடலை விக்கச் சொன்னார். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். கல்லே... கல்லே... வேர்க்கல்லே..."

"டேய்... மரியாதையா வேற எங்காச்சும் போய்டு."

"போவலைன்னா?"

"கை வெச்சா கன்னம் பிஞ்சரும்."

"இந்த மிரட்டலெல்லாம் இளிச்சவாயன் எவன்கிட்டயாச்சும் வெச்சுக்க. என்கிட்ட வாணாம். கல்லே... கல்லே... வேர்க்கல்லே..."

"தம்பி, இங்க ஒரு பாக்கெட் குடு."

ராக்கப்பன் வே. க. பாக்கெட்டை எடுத்துக் கொடுக்க, அழகு உச்சபட்ச கோபத்தைத் தொட்டான். அந்தப் பாக்கெட்டை தட்டி விட்டான். ராக்கப்பன் அழகுவின் கூடையைத் தள்ளினான். பாக்கெட்டுகள் சிதறின. அழகு அவன் சட்டைக் காலரைப் பற்றி உலுப்பி, அவன் இவன் கன்னத்தில் அறைந்து, காலை இடறி, இருவரும் தரையில் புரண்டு, புழுதியில் குளித்து...

ரயில் இரைச்சலுடன் கடந்து கேட் திறந்தது. பஸ்கள் ஒவ்வொன்றாய்க் கரைந்தன. ஒரு பாக்கெட் கூட விற்கவில்லை.

அதற்கப்புறம் ஒரு ஒப்பந்தம் பண்ணிக் கொண்டார்கள். கேட்டுக்கு இந்தப் பக்கம் அழகு விற்பது. அந்தப் பக்கம் ராக்கப்பன். நிலைமை சரியானது. விரோதம் கலைந்து ஸ்நேகம் தழைத்தது. ராக்கப்பனை ராக்கு என்று செல்லமாய்க் கூப்பிட்டான் அழகு. கேட் திறந்திருக்கும் சமயங்களில் மர நிழலில் உட்கார்ந்து இருவரும் ரஜினி படம் பற்றி அரட்டை அடிப்பார்கள்.

அம்மாவின் உடம்பு சற்று மோசமாயிற்று. இருமல் சூரணம் வாங்க ஒன்றோ, இரண்டோ பணம் பத்தலை என்றால் சில சமயம் ராக்கு இரக்கப்பட்டுக் கைமாற்றுத் தருவான்.

இந்தக் கூட்டணி விற்பனைக்கும் விரைவில் இடி விழுந்தது. புற்றீசல் மாதிரி மேலும் சில வேர்க்கடலை விற்கும் பையன்கள் அங்கே தோன்றினார்கள். அங்கு கேட் சாத்தும் போது வியாபாரம் ஆவது புரிந்து சுந்தராபுரத்துக் கடைக்காரர்கள் எல்லாரும் ஆளுக்கொரு அன்றாடங்காய்ச்சிப் பையனை அனுப்பி வைத்தார்கள். இந்த ஜனங்களுக்கு ஒரு பழக்கம். செடி, சத்தையை அகற்றி முள், புதர்களை விலக்கிப் போடும் வரை வேடிக்கை பார்ப்பார்கள். பாதை கிடைத்து விட்டால் மந்தை மந்தையாய்ப் புகுந்து பாதை போட்டவனையே மிதித்துக் கொண்டு முன்னால் போவார்கள்.

அதற்கப்புறம் கேட்டுக்கு இங்குமங்கும் பஸ் வந்து நின்றால்

"கல்லே... கல்லே... வேர்க்கல்லே..."

"கல்லே... கல்லே... வேர்க்கல்லே..."

"கல்லே... கல்லே... வேர்க்கல்லே..."

ஏகப்பட்ட குரல்கள்.

ஒரு பாக்கெட் விற்பது கூட ஜாக்பாட் விழும் மாதிரி, லாட்டரி அதிர்ஷ்டம் மாதிரி ஆகிப் போனது. அதற்கும் எத்தனை சர்க்கஸ்கள்... மாரத்தான்கள்.

அண்ணாச்சி பாக்கெட்டுக்குப் பதினைஞ்சு பைசா என்று கமிஷனை உயர்த்திய பின்னும் அழகு திணறினான். ஒரு நாளைக்கெல்லாம் நாற்பது பாக்கெட் விற்றால் அது பாக்ஸ் ஆபீஸ் ஹிட்! ஒரு பஸ் வந்து

நின்றால் எல்லோரும் பறந்தடித்துக் கொண்டு ஓடினார்கள். கடலை வாங்கும் ஆசாமிக்கு எந்த மூஞ்சி பிடிக்கிறதோ அவனுக்கு ஒரு பாக்கெட் விற்கும். ஐம்பது பைசாவுக்கு என்ன அடிதடி! அஞ்சுக்கும் பத்துக்கும் போராட்ட நாட்கள் நகர்ந்தன.

அன்றைக்கு அழகு ரொம்பப் படபடப்பாயிருந்தான். எந்த வண்டி வந்தாலும் பேய்த்தனமாக ஓடிப் போய், "கல்லே... கல்லே..." என்று வெறி பிடித்த மாதிரி கத்தினான். அவன் சத்தத்தையும், வேகத்தையும் பார்க்க ராக்குவுக்கே பயமாய் இருந்தது.

"அளகு, ஏன் ஒரு மாதிரி இருக்கே? வெறிபிடிச்ச மாதிரி அலையற?"

"இன்னிக்கு ஒண்ணல்ல... ரெண்டல்ல... நாத்தம்பது பாக்கெட்டை நா வித்தாகணும் ராக்கு!"

"விளையாடறியா? அம்பது வித்தா அதிசயம். தட்டைக் கூடையைத் தூக்கிட்டு பத்துப் பேராச்சும் சுத்தறோம். வாங்கறவனை விட விக்கறவன் அதிகமா இருப்பான் போலருக்கு. யாரைக் குத்தஞ் சொல்றது! எல்லாரும் வயத்துப் பசிக்காகப் பறக்கறாங்க."

அழகுவின் கண்களில் கண்ணீர் கரந்து பின்னியது.

"நா இன்னிக்கு வயத்துப் பசிக்காக விக்கலை ராக்கு. அம்மா இருமல் முத்திப் போயி தர்மாஸ்பத்திரில கிடக்கறாங்க. மருந்து வாங்கணும். ஊசி மருந்து இருவத்தஞ்சு ரூபா. ஆஸ்பத்திரில ஸ்டாக்கு இல்லியாம். அதைப் போட்டாத்தான் அம்மா பிழைக்கும்."

கேட் சாத்தினார்கள்.

ஒரு பஸ் கேட் அருகே வந்து ஓய - பாய்ந்தான் அழகு. 'தம்பீ, சாயந்தரத்துக்குள்ள ஊசி மருந்து வாங்கிட்டு வா.'

"கல்லே... கல்லே... வேர்க்கல்லே..."

அந்த பஸ்சில் அவ்வளவாய்க் கூட்டமில்லை. வேகமாய் ஒரு ரவுண்ட் அடித்தான். 'அம்மா, அழாதம்மா. அண்ணாச்சிகிட்டே கூடை நிறைய பாக்கெட் போடச் சொல்லிருக்கேன். அத்தனையும் வித்துப்புட்டு சாயந்தரம் மருந்தோட வர்றேன்.' மன்னார்சாமி குறுக்கே வந்து இரண்டு போணியைக் கெடுத்தான்.

ரயில்வே கேட்டுக்கு அந்தப் பக்கம் ஜன மூட்டையை அடைத்துக் கொண்டு இன்னொரு பஸ் விர்ரென வந்து நின்றது. இன்று ஒரு பஸ்ஸை விடக் கூடாது. பஸ்சுக்கு நாலு பாக்கெட். 'சிஸ்டர், ஏழாம் நெம்பர் பெட் சனியன் எப்ப இருமலை நிறுத்தும்?' சில பையன்கள் அந்த பஸ்சை நோக்கி ஓடினார்கள். முந்து அழகு. விற்பனைக்கு முந்து அழகு. ஊசி மருந்து!

அழகு சுதாரித்து - சுழலும் விக்கட் நுழைவில் ரயில் கேட்டில் புகுந்தான். மனசு ஆஸ்பத்திரியிலும், உடல் பஸ்சை நோக்கியும் நிலைத்தன. வேறு சிந்தனை இன்றி அந்த பஸ்சையே குறிவைத்து தண்டவாளத்துக்குக் குறுக்கே படுவேகமாய் ஓடினான்.

தட்!

ஒரு துரதிர்ஷ்ட விநாடி. அழகுவின் காலை தண்டவாளத்தில் இடறி விட்டது.

"அம்மா... ஆ..."

தண்டவாளத்தின் நடுவே கடலைப் பாக்கெட்டுகள் சிதற குப்புற விழுந்தான் அழகு. ரயில் வருவதைக் கூடக் கவனிக்காமல் குறுக்கே பாய்கிறானே இந்த அழகு! விரைந்து வரும் ரயிலைப் பார்த்து ராக்குவின் கண்கள் பயத்தில் விரிந்தன.

"அளகு... அளகு..." - கத்தினான் ராக்கு.

என்ஜின் டிரைவர் விழுந்து கிடக்கும் அழகுவைப் பார்த்து விட்டார். பிரேக்கைப் பிரயோகித்தார். உடனே நிற்குமா அந்த ராட்சஸ வாகனம். எழ முயலும் அழகுவை ஆவேசமாய்ச் சக்கரங்கள் விழுங்கின. சிவப்பு தெறிக்க அவனை அரைத்து - அரை கிலோ மீட்டர் தூரம் இழுத்துக் கொண்டு போய் நின்றது நீளமான அந்த எக்ஸ்பிரஸ் ரயில்.

ரத்தத் துகள்களாய்க் கிடக்கும் அழகுவைச் சுற்றி, நிமிஷத்தில் கும்பல் கூடியது. ராக்கு சதைத் துணுக்குகளைப் பார்த்துத் தலை தலையாய் அடித்துக் கொண்டு அழுதான்.

ஏறக்குறைய அதே விநாடி -

ரயிலின் கடைசி கம்பார்ட்மென்ட்களில் குரல்கள்.

"கல்லே... கல்லே... வேர்க்கல்லே..."

"என்னாச்சு தம்பி? ஏன் ரயில் நின்னுருச்சு?"

"ஆக்சிடென்ட்டு! ஒரு பையன் ரயில்ல அடிபட்டுச் செத்துட்டான். கல்லே... கல்லே... வேர்க்கல்லே...!"

"படத்துக்கு நாங்க வச்ச பேரான 'டுடோரியல் காலேஜ்' என்கிறதை மாத்திட்டோம்!"

"இப்ப என்ன பேர் வச்சிருக்கீங்க?"

"ஆத்தா...! நான் ஃபெயிலாயிட்டேன்!"

ஆர். ரகோத்தமன்



பதிவு எண்: 26383 போன்: 583241

கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)

பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு,
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்

காலம்	46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
வருட வட்டி விதம்	14%	15%	16%	17.5%	18.5%	19%	19.5%	20% *




மகளிர் ஆண்டு திட்டம்

1994 சர்வதேச மகளிர் ஆண்டை முன்னிட்டு பெண்கள் பெயரில் செலுத்தப்படும் பிக்சட் டிபாசிட்டுகளுக்கு 1% அதிக வட்டி வழங்கப்படும்.
குறைந்த அளவு டிபாசிட் ரூ. 5000/- காலம் 1 ஆண்டு




சௌபாக்யலட்சுமி வெகுமதி டிபாசிட்

அ) ஒரே ஒருமுறை ரூ.570/- செலுத்தி 252 மாதங்களுக்குப் பிறகு ரூ.40000/- பெறுவீர்!
ஆ) ஒரே ஒருமுறை ரூ.285/- செலுத்தி 252 மாதங்களுக்குப் பிறகு ரூ.20000/- பெறுவீர்!



கல்பதரு மணிபேக் திட்டம்


அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தொகை	காலம்	வட்டிவீதம்
ரூ. 10,000	12 மாதங்கள்	**20%**
ரூ. 10,000 கீழ்		**19%**

சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்



கடன்

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும்
சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்

வட்டி விகிதம் ரூ.1.95

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00 முதல் 6.00 வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை

பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்



ஒப்பனைக் கலையை ஓரங்கட்டாதீர்கள்!

தாய்க்குலத்துக்கு சுந்தரமூர்த்தி தரும் டிப்ஸ் :

சின்ன கண்களா?

கட்டாயம் ஐ லைனர் அல்லது மை இட்டுக் கொள்ளுங்கள்.

முப்பத்தைந்தைக் கடந்தவரா...?

பிரவுன் கலரில் மை உபயோகித்தால் (கிடைக்கிறது!) கண்ணின் கீழ் ஏற்பட்டுள்ள கருமை தெரியாது.

நீள வாக்கில் மீன் விழியா?

கண்ணுக்கு வெளியே கடையோரத்தில் மையில் மெல்லிய குருவி வால் இழுத்துக் கொள்ளவும்.

அகல நெற்றியா?

சென்டரில் பெரிய பொட்டு வைத்து அழகைக் கூட்டலாம்.

குறுகலான நெற்றி....?

திலகம் ந வடிவத்தில் பொட்டு நல்லது

அகல மூக்கு...?

மூக்குத்தி ப்ளீஸ்!

தாத்தா, அப்பாவைத் தொடர்ந்து மூன்றாம் தலைமுறை மேக்-அப் மேன் சுந்தர மூர்த்தி. ரஜினிகாந்த், அரவிந்தசாமி, சரிதா, சுகன்யா, நெப்போலியன், மதுபாலா ஆகிய அனைவருக்கும் முதன் முதலில் ஸ்கிரீன் டெஸ்டுக்காக மேக்கப் போட்ட கையும் இவருடைய ராசியான கைதான்!


"சாதுமிரண்டால் - படத்தில் பிணமாக நடித்த ஒ.ஏ.கே. தேவருக்குத் தாடி வைக்க வேண்டும். அப்பா ரொம்ப அனுபவசாலி என் பதால் டக்கென்று வெட்டி ஒட்டிவிடுவார். அவர் ஒட்டுவதைக் கூட இருந்து பார்த்து மாலைக்குள் நானே தாடி ஒட்டிப் பழகி




புன்னகை அரசியின் முத்துப் பல் இரகசியம்!

நடிக - நடிகையரின் பல் வரிசை மட்டும் ஓர் அசாதாரண ஒளியுடன் பளிச்சிடுகின்றதே? அதன் ரகசியம் என்ன? - இந்தக் கேள்வியை அன்றைய கே.ஆர். விஜயா முதல் இன்றைய சுகன்யா வரை பெரும்பான்மையான நட்சத்திரங்களின் பல் பராமரிப்பைக் கவனித்து வரும் பேராசிரியர் டாக்டர் ஜானகிராமன், அவரது மகன்கள் டாக்டர் கணபதி, டாக்டர் ஹரிஹரன் ஆகிய பல் மருத்துவர்களிடம் கேட்டோம்.

"ப்யூமிஸ்' என்ற டூத்-பாலிஷ்தான் காரணம். எல்லா நட்சத்திரங்களுமே தங்கள் உடலழகுக்கு மட்டுமல்ல; பளிச்சென்று கண்ணில் படும் பல் அழகுக்காகவும் ரொம்பவும் அக்கறை எடுத்துக் கொள்வார்கள். நட்சத்திரங்களுக்குப் பல்வலி, ஈறு [illegible] கன்னம் வீங்கி, முகம் விகா[illegible] மாகி விடுவதோடு, ஷூட்டி[illegible] கான்சலாகும். அதனால் அவ[illegible] கள் மருத்துவ அட்டவணை[illegible] படி, எங்களிடம் வந்து த[illegible] றாமல் டெண்டல் செக்-அ[illegible]



• ஜானகிராமன்



விட்டேன். அன்றைக்குத் தாடியில் ஆரம்பித்தது, தொழில் தொடர்ந்து கொண்டிருக்கிறது..." என்கிறார்.

"பரம்பரைத் தொழிலானாலும் உழைத்து தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். சித்திரமும் கைப்பழக்கம் என்பார்கள் மேக்கப்பும் ஒரு வகை சித்திரம்தான். பழகப் பழகத்தான் புரிபடும். கைப் பழக்கத்தோடு, கற்பனையும் இருக்க வேண்டும். 'காரக்டர் ஸ்டடி' செய்வது மிக அவசியமான ஒன்று. மனிதர்களைக் கண்களால் ஃபோட்டோ எடுத்து மனக் கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொள்ள வேண்டும். உதாரணம் சொல்ல வேண்டுமானால், எங்கள் வீட்டிற்கு பிச்சை எடுக்க வரும் ஒரு பைத்தியக்காரனை நான் 'ஸ்டடி' செய்து வைத்திருந்தேன்.

' "ஜாதிமல்லி" - படத்தில் டெல்லி கணேஷுக்குப் பைத்தியக்காரன் மேக்கப் போடும் போது, இந்த ஸ்டடிதான் உதவியது..."

சுந்தர மூர்த்தி, ஜெமினியின் பர்சனல் மேக்-அப் மேனாகப் பணியாற்றியிருக்கிறார். அச்சமயம் முதன் முதலாக வண்ணப் படத்தில் (சாந்தி நிலையம்) பணியாற்றும் வாய்ப்பு வர, வெளிநாட்டிலிருந்து மேக்-அப் கலை பற்றிய புத்தகங்களை வரவழைத்துத் தந்து உதவியிருக்கிறார் ஜெமினி.

பின்னர் கே. பாலசந்தரின் படங்களுக்கு (கவிதாலயா) மேக்-அப்-மேனாக இருந்திருக்கிறார் சுந்தர மூர்த்தி.

"முப்பது வருடங்களுக்கு முன், மேக்கப் மாஸ்டர் தங்கள் தொழில் விஷயங்களில் பலவற்றை உதவியாளர்களுக்குச் சொல்லித் தராமல் மறைத்து விடுவார்கள்.

"ஆனால் இப்போது அப்படியில்லை. குரு சிஷ்யர்களிடையே ஒரு தோழமை நிலவுகிறது. புது விஷயங்களை ஆர்வத்தோடு கற்றுத் தருகிறார்கள். வெளியே போய் வேலை செய்ய விரும்புபவர்களுக்குத் தாங்களே சிபாரிசும் செய்கிறார்கள். என்னிடம் உதவியாளர்களாக இருந்தவர்கள் இப்போது சத்யராஜ், நெப்போலியன், ரகுமான் போன்றவர்களிடம் பர்சனல் மேக்கப் மேனாக இருக்கிறார்கள்."

- இது சுந்தர மூர்த்தியின் சந்தோஷம்.

இவருக்கு ஒரு வருத்தமும் இருக்கிறது :

'சினிமா துறை கலைஞர்களுக்கு விருது வழங்கும் யாரும் மேக்-அப் கலைஞருக்குத் தனி அவார்ட் தருவதில்லை.' நியாயமான குறைதான்!

செய்து கொள்கிறார்கள். காறை, நிக்கோட்டின் கறை, அழுக்கு போன்றவற்றை அகற்றி, ப்யூமிஸ் பாலிஷ் போட்டுவிடுகிறோம்.

"இப்படி பாலிஷ் போடுவதில் இரண்டு வித நன்மை. 'பிளாக்' எனப்படும் கிருமிகளின் வெண்படலம் பற்கள் மீது சேருவதில்லை. படப்பிடிப்பின் போது பயன்படுத்தப்படும் ஒளியில் பற்களும் ஒளிர்ந்து, அவர்களுக்குப் புதுக் கவர்ச்சியைத் தருகிறது. இதுதான் நட்சத்திரங்களின் மின்னலடிக்கும் பல்வரிசையின் ரகசியம்!"

"நட்சத்திரங்கள் வேறென்ன பல் சிகிச்சைக்காக வருகிறார்கள்?"

"பற்களிடையே இருக்கும் சந்துகளை அடைக்க, வரிசை விட்டு விலகி நிற்கும் பல்லை அகற்ற, பல்லை ராவி எடுக்க, ஒட்டுப் பல், பொய்ப்பல்... பொருத்த... இப்படி நிறைய சொல்லலாம். 'ஜப்பானில் கல்யாணராமன்', 'பதவிப் பிரமாணம்' போன்ற படங்களில் உபயோகிப்படுத்த செயற்கை பற்களைக் கூட தயாரித்துக் கொடுத்திருக்கிறோம்."

"ஒரு நடிகை ஒரு சின்ன சாதனம் மூலம், வாய் கொப்பளிப்பதைப் பார்த்திருக்கிறோம். அது என்ன கருவி?"



• ஹரிஹரன்


"அதன் பெயர் 'வாட்டர்-பிக்' (Water-Pick). வெளிநாட்டுத் தயாரிப்பான இந்த சாதனத்தில், ஒரு சின்ன மோட்டாரும், மெல்லிய ஹோஸ்-பைப்பும் இணைக்கப்பட்டிருக்கும். வாட்டர் பிக்கின் குடுவைப் பகுதியில் தண்ணீரை நிரப்பிவிட்டு, மோட்டரை முடுக்கினால், ஹோஸ்-பைப் வழியே தண்ணீர் பீய்ச்சியடிக்கும். அந்த ஹோஸ்-பைப்பின் நுனியை வாய்க்குள் நுழைத்தால் கார்-வாஷ் செய்யப்படுவது போல, பற்களும் ஈறுகளும் அழுக்குகள் களைந்து சுத்தமாகும்." பல் ஈறு ஆரோக்கியம் காக்கப் பொதுவான சில யோசனைகளையும் கொடுத்தார்கள்.

● வாயிலிருந்து துர்நாற்றம் வீசாமல் இருக்க மவுத்-ஸ்பிரே உபயோகிப்பது, தற்காலிக பலன்தான் தரும். வாயைக் கொப்பளித்து சுத்தமாகப் பராமரித்தல் நல்லது.

● முடிந்தவரை இனிப்பைத் தவிர்க்கவும்.

● காரட்... பால், தக்காளி, கனிவகைகளை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.


● பச்சைக் காய்கறிகள், கரும்பு, மக்காச்சோளம் போன்ற பற்களுக்கு வேலை தரும் உணவுகளை மென்று தின்னப் பழகுங்கள்.



• கணபதி

டாக்டர்கள், மற்றும் சுந்தரமூர்த்தி சந்திப்பு :

ஹர்ஷராஜ்



ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டில் டைரக்ஷன் கோர்ஸ் படிப்பவர்கள் - கோர்ஸ் முடிவில் ஒரு பத்து நிமிஷப் படம் Project Work ஆக எடுத்துத் தர வேண்டுமென்பது ரூல்.

இன்றைய திரைப் பிரபலங்களான ஆபாவாணன், அரவிந்தராஜ் எல்லாம் இந்த பத்து நிமிஷப் படத்தில் சித்து வேலை காட்டியவர்கள் என்று மெச்சப்படுகிறார்கள்.

சமீபத்திய பத்து நிமிஷப் படங்களில் சிறந்ததாகச் சொல்லப்படும் மூன்று படங்களைப் (ஒன்று மட்டும் தங்கப் பதக்கம் பெற்றது. மற்ற இரண்டும் 'சும்மா' தேறியவை.) பார்த்தோம். அவற்றின் இயக்குநர்களையும்:

சூர்யா : தங்கப் பதக்கம் பெற்ற வி. செந்திலின் படம். 'ஒரு குழந்தை அனாதையாகக் கூடாது' என்ற கருத்தைச் சொல்ல எடுத்த படம். கமர்ஷியல் பீல்டில் வெற்றி பெற வேண்டும் என்பது தான் குறிக்கோள். அதற்குத் தேவையான காதல், குழந்தை சென்டிமென்ட், சஸ்பென்ஸ் போன்ற புராண வஸ்துக்களை யெல்லாம் இந்தப் பத்து நிமிடப் படத்திலேயே பார்க்கலாம்.

செந்திலுக்கு 'மௌன யுத்தம்' என்ற படத்தை இயக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. இன்னும் சரியான ஹீரோ கிடைக்கவில்லையாம். ஹீரோவுக்கான தேடலோடு பத்துக்குப் பத்து அறையில், கண்ணில் எதிர்காலம் மின்ன, இப்போது வளர்த்துக் கொண்டிருக்கும் தாடியைத் தடவியபடி காத்திருக்கிறார் இந்தத் திருச்சிக்காரர்.

10 நிமிஷ சாகசம்!

மின்மினிகள் : டைரக்டர் ராஜீவ் பிரசாத். எடிட்டிங் குறையிருந்தாலும் 'மின்மினிகள்' அழகான படம். குழந்தை நட்சத்திரம் படும் கஷ்டம்தான் கதை. அந்தக் கஷ்டத்திலிருந்து தப்பித்து, நடிகையான சிறு பெண் ஒரு குடிசைக்கு வந்து சேர்ந்து விடுகிறது. அங்கிருக்கும் கேதரின் என்ற இன்னொரு சிறு பெண்ணோடு இணைந்து, சந்தோஷம் என்பதை உணருகிறது. ஒரு காட்சியும் வீணில்லை.

"கமர்ஷியலா சக்ஸஸ் ஆவதோடு, நல்ல ஒரு மெஸேஜும் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். இன்று இன்ஸ்டிடியூட் மாணவர்களால் நல்ல படம் தர முடியும் என்ற நம்பிக்கை உருவாகியிருக்கிறது. அதனால், என்னால் அந்த வழியில் முன்னேற முடியும் என்ற எண்ணமுண்டு. நாயகன் போல் பனிச் சென்று ஒரு படம் எடுக்க வேண்டும்" என்று கூறும் ராஜீவ், இப்போது சுரேஷ் கிருஷ்ணாவின் அஸிஸ்டென்ட். 'வீரா'வில் வேலை செய்திருப்பதோடு, அடுத்து ரஜினியின் 'பாட்சா'விலும் பணியாற்றுகிறார்.

ஆத்மா : டைரக்டர். வி. சி. ரவி. இப்போதே வெகு பிஸி மனிதர். எங்கேயிருக்கிறார் என்பதே பிரம்ம ரகசியமாய் இருக்கிறது. ஞாயிறு செ. தொ. காவில் வரும் 'கதிர்வேல்' தொடரைத் தயாரிப்பதில் உதவுகிறார் என்று கேள்விப்பட்டு D.D.யில் விசாரித்த போது கையை விரித்தார்கள்.

'ஆத்மா' ஒரு மன நோயாளி பற்றிய படம். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது கேமராவும், இசையும், கலையும். விசித்ராதான் ஹீரோயின். இன்றைய அரை நிஜார் ஆட்டத்துக்கு எல்லாம் முன்பு, வெறும் பேண்ட் சட்டை விசித்ரா.

அனைவருமே பத்து நிமிடத்திற்குள் தம் திறமைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இனிய வாழ்த்துக்கள்!

— துளசி



• 'சூர்யா'

சக்கரவர்த்தித்

88. கும்பகர்ணன் எழுந்தான்

கும்பகர்ணனுடைய சாப நித்திரை எந்த சத்தமும் கேட்கவில்லை. தூங்கினவன் தூங்கிக் கொண்டேயிருந்தான். பல ராக்ஷசர்கள் கூடித் தூக்கத்தில் கிடந்தவனை மிக உபத்திரவப்படுத்தினார்கள். அவன் மேல் யானைகளை நடக்கச் செய்தார்கள். கம்புகள் எடுத்து அடித்தார்கள். இப்படி உபத்திரவம் செய்த பின், கும்பகர்ணன் கண்ணைத் திறந்து தூக்கத்திலிருந்தவன் கொசுக்கடிக்காகக் கையால் தட்டுவது போல் அனைவரையும் தட்டித் துரத்தி விட்டுக் கொட்டாவி விட்டான்.

பிறகு என்ன காரணம் தன் தூக்கத்தை இவ்வாறு கெடுத்தது என்று பெருங்கோபங் கொண்டான். விஷயம் தெரியாமலேயே தாங்காத பசிமேலிட்டு மலைக் குவியல்களாகக் கிடந்த மாமிசமும் மற்ற ஆகாரப் பண்டங்களையும் எடுத்து விழுங்கி, பானைகளில் வைக்கப் பட்டிருந்த ரத்தத்தையும் மது வகைகளையும் குடித்துத் தாகம் தீர்த்துக் கொண்டான். அதன்மேல் அவன் கோபம் கொஞ்சம் தணிந்ததென்று அரக்கர்கள் அவனையண்டி விஷயத்தைச் சொன்னார்கள்.

இராவணனுடைய மந்திரி யூபாக்ஷன் பேசினான்: "சுவாமி, யுத்தத்தில் அடிபட்டு நாம் அபாயத்திலிருக்கிறோம். சீதையின் காரணம் வந்த யுத்தம். வானரர்களும் ரகு குமாரர்களும் இதுவரையில் நாம் கண்டிராத முறையில் நம்முடைய சேனையையும் வீரர்களையும் மாய்த்து வருகிறார்கள். லங்கா நகரத்தைச் சுற்றிக் கடல் போன்ற வானரக் கூட்டம் நிற்கிறது. ராவணேசுவரரே, யுத்தத்தில் அடிபட்டு, கிரீடம் உடைந்து, அவமானப்பட்டுத் திரும்பி விட்டார். அவர் உயிருடன் தப்பியதே நம்முடைய அதிர்ஷ்டம்" என்றான்.

இதைக் கேட்டதும் கும்பகர்ணன் அடக்க முடியாத கோபாவேசமானான். "இந்தக் கணம் எதிரிகளை நிர்மூலம் செய்வேன். வானர சேனையைக் கொன்று ராம லக்ஷ்மணர்களுடைய ரத்தத்தைக் குடிக்கப் போகிறேன். காரியத்தை முடித்து விட்டு ராவணனைப் போய்ப் பார்ப்பேன்."

இவ்வாறு ரோஷத்தோடு பேசியதைக் கேட்ட மந்திரிகள் மகிழ்ச்சியடைந்து, "முதலில் அரசனைக் கண்டு ஆலோசித்து அதற்கு மேல் தக்கது செய்யுங்கள்" என்று கும்பகர்ணனிடம் விண்ணப்பம் செய்தார்கள்.

கும்பகர்ணன் "சரி, அப்படியே" என்று சொல்லி, முகம் கழுவிக் கொண்டு, தன் பலத்தை விருத்தி செய்து கொண்டு, யமனைப் போல் பூமி அதிர லங்கேசன் அமர்ந்திருக்கும் மண்டபத்துக்குச் சென்றான். கும்பகர்ணன் போகும் பொழுது ராஜமார்க்கத்தில் நின்று கொண்டிருந்த அரக்கர்கள் தைரியமும் மகிழ்ச்சியும் அடைந்து கைகூப்பி வணங்கினார்கள்.

அரண்மனைக்குள் பிரவேசித்து ராவணன் சந்நிதி



திருமகன்

ராஜாஜி

யில் நின்றான். ராவணனும் தன்னுடைய நிகரற்ற தம்பி எழுந்து வந்து விட்டான் என்று அடங்காத மகிழ்ச்சியுடன் எழுந்து ஆசனத்திலிருந்து இறங்கி, அவனைத் தழுவி வரவேற்றான்.

''என்ன செய்ய வேண்டியது, அண்ணா?'' என்றான் கும்பகர்ணன். ''ஏன் என்னை எழுப்பச் சொன்னீர்? உமக்கு என்ன பயம் ஏற்பட்டிருக்கிறது? யார் பிரேதமாய் விழுந்து போகக் காத்திருக்கி றார்கள், சொல்லுவீர்!'' என்றான்.

''தம்பி! உனக்குத் தெரியவில்லை. நீ உன்னுடைய தூக்கத்தில் ஆழ்ந்து கிடந் தாய். எனக்கு ராமனால் ஏற்பட்டிருக்கும் பயம் பெரிதாகி விட்டது. கடலைப் போல் வானர சேனை லங்கையைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. நம்முடைய வீரர்கள் அவர்களை எதிர்த்துத் தோல்வி யடைந்து மடிந்து விட்டார்கள். பெருஞ்சேனையுடன் ராமன் சமுத்திரத்தில் சேது ஒன்று கட்டி நம்முடைய குலத்தை வேரோடு அழிக்க வந்திருக்கிறான். என் செல் வம், என் சேனை எல்லாம் தீர்ந்து போயிற்று. நீதான் நம்முடைய குலத்தைக் காப்பாற்ற வேண்டும். உன்னை நம்பியிருக்கிறேன். நீ தேவர்களை எல்லாம் யுத்தத்தில் சிதற அடித்திருக்கிறாய். என்னி டம் உனக்கு உள்ள பிரியத்தை நான் அறிவேன். யுத்தத்தில் உனக்கு உள்ள பிரியமும் உன் வீரமும் அறிவேன். உடனே சென்று இந்தச் சத்துருக்களை வதம் செய்து என்னையும் லங்கையையும் காப்பாற்றுவாய்'' என்றான் ராவணன்.

இதைக் கேட்ட கும்பகர் ணன் சிரித்தான். ராவணன் கவலைப்பட்டும், துக்கப்பட்டும் பிரலாபித்துப் பேசியதைக்




கேட்டதும் முதலில் தனக்கு இயற்கை பாசத்தால் உண்டான கோபத்தின் வேகம் மறைந்து போய், விஷயங்கள் நினைவுக்கு வந்து விவேகம் மேலிட்டு அண்ணன் செய்த தவறுகளை எண்ணிச் சிரித்து விட்டுப் பேசலானான்:

"மன்னிக்க வேண்டும், அண்ணா! முன் நீர் மந்திராலோசனை செய்த சமயத்தில் நாங்கள் என்ன எச்சரித்தோமோ அது இப்போது நடந்திருக்கிறது. நாங்கள் உம்முடைய நன்மைக்கென்று சொன்னதை அப்போது நீர் உதறித் தள்ளினீர். சீதையை அபகரித்த பாப காரியத்தின் பயனை இப்போது அனுபவிக்கிறீர். ஆசையால் தூண்டப்பட்டுக் காரியத்திலுள்ள தோஷத்தை ஆராயாமல் ஒருவன் புகுந்தால் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதுதானே! முந்தி யோசனை செய்து பிறகு காரியத்தில் பிரவேசிப்பதற்குப் பதிலாக, காரியத்தில் பிரவேசித்து விட்டு, பிறகு யோசிப்பது அறிவீனம். ராஜ நீதிக்கு விரோதம். இதை நான் எடுத்துக் காட்டினேன். சீதையை அபகரிக்கப் பிரியப்பட்டாலும் விரோதிகளான ராமலக்ஷ்மணரை வதம் செய்துவிட்டுப் பிறகு அல்லவோ சீதையை அபகரித்திருக்க வேண்டும்! தலைகீழாக வேலையைச் செய்துவிட்டீர். நன்மை தீமைகளை யோசித்துச் சொல்லக் கூடிய மந்திரிகள், மித்திரர்கள், பந்துக்கள் இவர்களோடு கலந்து ஆராயாமல் அல்லது அவர்கள் சொன்னதைப் புறக்கணித்து விட்டு, செய்யப்படும் காரியங்கள் அபாயத்திலும் நஷ்டத்திலும் கொண்டு போய் விடும். இது நீர் அறிந்திருக்க வில்லையா? யார் சரியான யோசனை சொல்லுகிறவர்கள், யார் அல்ல என்பதை அரசன் அறிந்து கொள்ள வேண்டும்."

இவ்வாறு கும்பகர்ணன் செய்த தர்மோபதேசமும் நீதி சாஸ்திர விளக்கமும் ராவணனுக்குப் பிடிக்கவில்லை. ராவணனுடைய முகத்தில் கோபக் குறிகள் உண்டாயின. ஆயினும் அபாய நிலையிலிருந்தபடியினால் கோபத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு ராவணன் பேசினான்: "தம்பி! இப்போது இந்த ஆராய்ச்சியில் ஒரு பிரயோஜனமும் இல்லை, காலம் தாண்டி விட்டது. இப்போது நான் கோருவது உன்னுடைய பராக்கிரமத்தின் வேகத்தை. நியாயமாகவோ, அநியாயமாகவோ, விவேகத்தாலோ, அறிவீனத்தாலோ ஒரு காரியம் நடந்து விட்டால், அதைப் பற்றிக் காலம் கடந்த பின் யோசித்துக் கொண்டோ பேசிக் கொண்டோ இருப்பதில் பயன் என்ன? நடந்தது நடந்து விட்டது. இப்போது இந்தச் சங்கடத்தில் என்ன செய்வது என்பதுதான் கேள்வி. நடந்து போன தவறுகளால் நேர்ந்திருக்கும் கெடுநியை உன் வீரத்தாலும் சாமர்த்தியத்தாலும் தீர்ப்பது உன் கடமை. தவறுகள் செய்து விட்டபடியால் அபாயத்திலும் கஷ்டத்திலும் சிக்கினவனுக்கு உதவி செய்கிறவனே மித்திரன். அவனே பந்து. என் பேரில் உனக்குப் பிரியம் இருப்பது உண்மையாயின் இப்போது எனக்கு நீ உதவுவாய். உன் சாமர்த்தியமும் பலமும் தெரிந்துதான் இப்படிப் பேசுகிறேன். கவலைப் பட்டுக் கொண்டிருக்கும் எனக்குத் தைரியம் சொல்லி என்னைக் கைவிடாமல் சூரனாக நடந்து கொள்வாய்" என்றான்.

கும்பகர்ணன் சொன்னான்: "நீர் கவலைப் பட்டது போதும். உமக்கு பயம் உண்டாக்கியிருக்கும் சத்துருக்களை இப்போதே வதம் செய்வேன். நான் உம்முடைய தம்பி. ஒரு போதும் உம்மைக் கைவிடமாட்டேன். ராமலக்ஷ்மணர்கள் மாண்டார்கள் என்று நிச்சயமாக இருப்பீராக. இந்த வானர சேனையைச் சின்னாபின்னமாக அடித்து வதம் செய்வேன். சந்தேகப்பட வேண்டாம். ராமனுடைய தலையை உமக்கு எதிரில் கொண்டுவந்து போடப் போகிறேன். பயப்படாதீர். சுக்ரீவனுடைய



"ஏண்டா இப்போதெல்லாம் படிக்கட்டில் நின்னு பயணம் செய்யறதில்லே?"

"சே! அமைச்சர் வர்றாருன்னு பொண்ணுங்க கிண்டல் செய்யறாங்கடா!"

- வி.மனோஹரன்



மல்லிகைப் பூ

காலம் இது

மல்லிகைப் பூ புனிதத் தனமை தந்து சமநிலையும் அளிக்கும் நறுமணத்தை முகர்வது அவசியம். இதனால் பூமியில் மறைந்து உள்ள அதன் சாரம் இரகசிய உண்மை நாம் கிரகித்துக் கொள்ள முடிகிறது.

—சிவமஹா புராணம்

மல்லிகைப் பூவினால் அர்ச்சனை செய்தால் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடுவான்.

மலர்களை மாலைகளாக தொடுத்து பகவானுக்கு அர்ப்பணம் செய்வது மலர்களால் அர்ச்சிப்பதைவிட எண்ணற்ற மடங்கு பலன் தரும். ஒருவன் தன் சொந்த தோட்டத்திலிருந்து மலர்களை வந்து பகவானுக்கு அர்ப்பணித்தால் அடையும் பலன்களைவிட காட்டிலிருந்து சேகரித்த பூக்களால் அர்ச்சிப்பது மும்மடங்கு பலனைக் காட்டும்.

அக்னிப் புராணம்

அத்துடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி
நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.



திருமண வைபவங்களுக்கு : சீர் முறுக்கு, சீர்முள்ளுத் தேன்குழல், தேன்குழல், சீர் அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத்தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்னாக்ஸ்

24, 2.வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு
சென்னை-20
போன் : 412557.

நிலை

தெருவில் ஒரு பிச்சைக்காரன் சாப்பாட்டுக்கு இரண்டு ரூபாய் கேட்டான். ஒருவர் அவனை விசாரித்தார்–

"ஏம்பா... நீ குடிப்பாயா..."

"அந்தப் பழக்கமெல்லாம் கிடையாது சார்..."

"சிகரெட் பிடிப்பாயா..."

"தொடமாட்டேன் சார்..."

"ரேஸுக்கு போவியா..."

"அதெல்லாம் தெரியாது சார்..."


"சூதாட்டம்..."

"கிடையாது சார்..."

"பெண் சிநேகம்..."

"சத்தியமா இல்லை சார்..."

"உனக்கு இருபது ரூபா தருகிறேன். என் வீட்டுக்கு வா... என் மனைவியிடம் உன்னைக் காட்ட வேண்டும்... 'எந்தப் பழக்கமும் இல்லாத மனிதனின் நிலைமையைப் பார்த்தாயா...' ...என்று..."



— ஏ.வி.கிரி.

ரத்தம் அருவி போல் பாய்வதைக் காண்பீர். என்னைக் கொன்றுவிட்டுப் பிறகு அல்லவா யாமன் உம்மிடம் வரவேண்டும். என்னை யாரும் வென்று கொல்ல முடியாது என்பது உமக்குத் தெரியும்."

இப்படிப் பேச ஆரம்பித்ததும் கும்பகர்ணனுடைய அகம்பாவம் பொங்கிக் கிளம்பிற்று. "எந்தச் சத்துருவாயினும் அழிப்பேன். யமனே வரட்டும். சூரியனே வந்து எதிர்க்கட்டும். அக்கினியே யாயினும் சரி, வரட்டும். அனைவரையும் கடித்துத் தின்று விழுங்கி விடுவேன்" என்று பலவாறாகப் பேசி அண்ணனுக்குத் தைரியம் உண்டாக்கிப் போர்க்களத்துக்கு போகக் கிளம்பி விட்டான்.

முதலில் பெருந் தூக்கத்தினின்று எழுந்ததும் இயற்கை வேகத்தில் பேசினான். பிறகு பசி ஓரளவு தீர்ந்ததும் சுபாவத்தில் நீதி உணர்ச்சி கொண்டவனானபடியால் ராவணனிடம் விஷயங்களை ஆராய்ந்து ஹிதத்தை எடுத்து உரைத்தான். அதன் பின் ராவணனுடைய தற்கால கஷ்ட நிலையைக் கண்டு உருகி, அன்பு மேலிட்டு மற்றதையெல்லாம் மறந்தொழிந்தான்.

"உன்னைப் போன்ற வீரன், உன்னைப் போன்ற தம்பி, ஆபத்தில் உதவும் மித்திரன் வேறு யார். கும்பகர்ண!" என்று ராவணன் மகிழ்ச்சி பரவசமாகப் பேசித் தம்பியை யுத்தத்துக்கு அனுப்பினான். தம்பி கட்டாயமாக ஜெயிப்பான் என்று ராவணன் எண்ணினான். செத்துப் பிழைத்த மாதிரி மகிழ்ச்சி அடைந்தான்.

கும்பகர்ணன் சூலத்தை எடுத்துக் கொண்டு ஒருவனாகவே போகப் புறப்பட்டான். அப்போது ராவணன் அவனைத் தடுத்து, "இப்படிச் செய்யலாகாது. சேனையைக் கூட்டிக் கொண்டு போ" என்று சொல்லி, தம்பியின் பெரிய தேகத்துக்கு ஆபரணங்கள் புனைந்தும் மாலை போட்டும் அலங்கரித்து, ஆசீர்வதித்து, "போ, வீரனே! சத்ருக்களை நிர்மூலம் செய்து விட்டு ஜெயகோஷத்துடன் திரும்பி வா" என்றான்.

கும்பகர்ணனும் திவ்ய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு திரிவிக்கிரமனைப் போலவே ஜொலித்தான்.

அண்ணனை வலம் செய்து வணங்கி நீண்ட சூலத்தை எடுத்துக் கொண்டு சென்றான். பெருஞ் சேனை அவனைப் பின் தொடர்ந்து சென்றது. கும்பகர்ணன் நடந்து சென்ற போது லங்கையில் உள்ள ராக்ஷசர்கள் அவன் மேல் மலர்கள் தூவினார்கள். எரிமலையைப் போல் ஜொலித்துக் கொண்டு சென்றான்.

அவன் மதில் சுவர்களைக் காலாலே தாண்டி காலாந்தக யமனைப் போல் வந்ததைக் கண்ட வானரர்கள் பலர் பயந்து இங்குமங்கும் ஓட ஆரம்பித்தார்கள். வானரத் தலைவர்கள் படைக்குத் தைரியம் சொல்லி மிகக் கஷ்டப்பட்டுச் சேனையைக் காத்து வந்தார்கள்.

(தொடரும்)

இன்டோர் :

பிரம்மாண்ட தயாரிப்பில் பிரயோஜனம் உண்டா?

"மை லார்ட்! குற்றம் சாட்டப்பட்டிருக்கும் எனது கட்சிக்காரர்...." வசனமா? கோர்ட் தயார்.

"இந்தாய்யா பைவ் நாட் டு..." - இதற்கு போலீஸ் ஸ்டேஷன் ரெடி.

"ஆவாரம்பூவு இப்போ தாவாரம் வந்துடுச்சி" - டூயட் பாட வேண்டுமா? ஜப்பானிய மாடலில் ஒன்று, முகலாய பாணியில் ஒன்று, இத்தாலிய அமைப்பில் ஒன்று என்று மூன்று ஸ்பெஷல் தோட்டங்கள்.

"மகளே, என்னோட கடைசி ஆசை..." - வயதான அம்மா லொக் லொக்கென இருமிக் கொண்டு உயிர் விட ஆஸ்பத்திரியும் தயார்!





கோவில், மசூதி, சர்ச் இவையும் உண்டு.

கிராமத்துக் கதையா? வீடுகள், ஊர்ப் பஞ்சாயத்து கூட பொது இடம். மஞ்சள் உடுத்தி, வேப்பிலை அடித்து ஆட அம்மன் கோவில். கிளைமாக்ஸில் வில்லன் தானாகவே குத்துப்பட்டுச் சாக சௌகரியமாய் சூலம் சகிதம் ஐயனார்கோவில்!

ஒரு சினிமா எடுக்க என்னென்ன கதைக் களங்கள் தேவையோ அனைத்தும் ஒருசேர அமைக்கப்பட்ட இடம்தான் சென்னை, தரமணியிலுள்ள திரைப்பட நகரம். மொத்தம் 86 ஏக்கர் நிலப் பரப்பில் அட்டை, மரம் சமாசாரமில்லாமல், நிஜ கட்டடங்கள், தோட்டங்கள்.

பெரும்பாலான வேலைகள் முடிந்து விட்ட போதிலும், திரைப்பட நகரம் முழுமையாய் உருவாக இன்னும் சில காலமாகும் என்கிறார்கள்.

1991ல் ஜெயலலிதா அறிவித்த திட்டம் இது. போன வருடம் வேலை முடிந்திருக்க வேண்டும்; இன்னும் முடியவில்லை என்பது ஒரு புறம்.

மறுபுறம் திரையுலகத்தினரைப் பொறுத்த வரை, திரைப்பட நகரம் உருவாக்குவதற்காக யாரும் ஜெ..யைப் பாராட்டுவதாய்த் தெரியவில்லை. இன்னும் சொல்லப் போனால் அவர்கள் மனம் நொந்து போயிருக்கிறார்கள் எனலாம். ஏற்கெனவே சாடலைட் டீ.வி., வீடியோ, கேபிள் என்று பல முனைத் தாக்குதலுக்குள்ளாகியிருக்கும் திரையுலகினைத் தன்பாட்டுக்கு சம்மட்டி அடி கொடுத்திருக்கிறார் முதலமைச்சர்.

சென்ற ஆண்டு இறுதியில் அரசாங்கம் பிறப்பித்த ஆணையின்படி, ஒரு நாளைக்குப் பொது இடங்களுக்கான படப்பிடிப்புக் கட்டணம் சுமார் முந்நூறு ரூபாய் என்று இருந்தது. ஐயாயிரம் ரூபாயாக உயர்த்தப் பட்டு விட்டது. "தெருவில் சினிமா ஷூட்டிங் நடத்துவதற்குக் கூட அநியாயமாய்க் கட்டணம் வாங்கும் அரசு, பல கோடி ரூபாய் செலவு செய்து நிர்மாணிக்கும் சினிமா நகரத்தில் மட்டும் கட்டணத்தைக் குறைவாய் நிர்ணயிக்கும் என்று எப்படி எதிர்பார்க்கலாம்?" என்கிறார் ஒரு தயாரிப்பாளர்.



"அன்று ஒரே செட்டில் எடுத்த படம் என்று வியந்து வரவேற்கப்பட்டது, 'நெஞ்சில் ஓர் ஆலயம்'. எம்.ஜி.ஆரின் பல படங்களில் லட்சக்கணக்கில் செலவு செய்து செட் போட்டு, படம் பிடிக்கப்பட்ட பாடல் காட்சிகள் இடம்பெற்றன. ஆனால் இன்றைய நிலைமையே வேறு! பங்களா, மத்தியதரக் குடும்பத்து வீடு, குடிசை - எதுவானாலும்



நேரே ஸ்பாட்டுக்குப் போய் விடுகிறார்கள், கேமராவைத் தூக்கிக் கொண்டு. இல்லையெனில் வெளியூர்களில் அவுட்டோர் லொக்கேஷன்களை நாடுகிறார்கள்.


"அன்று பதின்மூன்று தளங்கள் கொண்ட மிகப் பெரிய ஸ்டூடியோவாய் விளங்கிய விஜயா - வாகினியில் இன்று எட்டு ஃப்ளோர்கள் கல்யாண மண்டபம், ஆஸ்பத்திரியாய் உருமாறி விட, படப்பிடிப்பு நடப்பது ஐந்து தளங்களில் மட்டும்தான். பிரசாத் ஸ்டூடியோவில் மூன்று தளங்கள். மீதி உள்ள ஸ்டூடியோக்களிலும் ஓரிரு தளங்கள் மட்டுமே படப்பிடிப்புக்கு உள்ளன. இப்படி இருக்கும் போது தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ள திரைப்பட நகரத்தை எத்தனை பேர் பயன்படுத்த முன்வருவார்கள்?" என்று கேட்கிறார் ஒரு அனுபவம் மிகுந்த திரைப்படத் தயாரிப்பாளர்.

திரைப்பட நகர திட்டத்தை பாஸிடிவ் ஆகப் பார்க்கிறவர்களும் உண்டு. "தமிழ்ப் படத்துக்குத் தேவையானவை அனைத்தும் இங்கு இருக்கின்றன. மேலும் இன்று தொலைக்காட்சி, சன் டீ.வி., ஜெயின் டீ.வி., ஜீ டீ.வி. என்று பலவற்றுக்கும் தொடர்கள் தேவைப்படுகின்றன. அவற்றைத் தயாரிக்கிறவர்களும் திரைப்பட நகரத்தில் உள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாமல்லவா? ஹாலிவுட், பாலிவுட், கோலிவுட் போல, இந்த தரமணியை 'தாலிவுட்' என்று குறிப்பிடும் காலம் வரப் போகிறதா இல்லையா பாருங்களேன்!" என்கிறார் திரைப்பட நகரம் சம்பந்தப்பட்ட ஓர் அதிகாரி.

பார்ப்போம்!

— எஸ். சந்திரமௌலி

வண்ணப்படங்கள் : **யோகா**



ஒரு படம் ஆரம்பிக்க நினைத்துப் பிள்ளையார் சுழி போட்ட மறு கணத்திலிருந்து, படம் ரிலீஸ் ஆகி ரிஸல்ட் வருகிற வரை ஒரு வித யாகம் மாதிரி, படத்துக்கான பப்ளிஸிட்டியில் முழு மூச்சாக ஈடுபட்டு–அந்தப் படத்தின் வெற்றி–தோல்விக்கு முன்னுரை எழுதுபவர்கள் பி.ஆர்.ஓ. என்கிற பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீஸர் என்கிற மக்கள் தொடர்பு அதிகாரிகள்தான். அதே சமயத்தில் லட்சக் கணக்கில், கோடிக் கணக்கில் பணம் புழங்கும் இத்துறையில், வெறும் ஆயிரம், ரெண்டாயிரத்துக்குச் சிங்கியடிப்பதும் இவர்கள்தான்.

"ஒரு லைட்–மேனுக்குக் கிடைக்கிற மரியாதை கூட பி.ஆர்.ஓக்களுக்குக் கிடைப்பதில்லை" என்று அழாக் குறையாகச் சொல்கிறார் துளசி பழனிவேலு.

"ஒரு படத்தின் வெற்றி–தோல்வியில் ஐம்பது சதம் இயக்குநர், நடிக–நடிகையர், டெக்னீஷியன்களைச் சார்ந்ததென்றால், மீதி ஐம்பது சதம், அப்படத்துக்குச் செய்யப்படுகிற விளம்பரத்தினால் வருவது. பூஜை போட்ட அன்று தொடங்கி தினம் தினம் ஏதாவது ஒரு பத்திரிகையில் அப்படம் பற்றிய செய்தி வந்து கொண்டே இருக்கச் செய்வதும், மக்கள் அதுபற்றிப் பேச வைப்பதும் படம் முடிந்ததும் பத்திரிகையாளர்களை அழைத்து "பிரிவியூ" போட்டுக் காட்டி, விமர்சனங்களைத் தொகுத்து தயாரிப்பாளர்களுக்குத் தருவதும்.... இப்படியாக பி.ஆர்.ஓக்களின் பணிக்கு முடிவே கிடையாது. ஆனால் எங்களை ஒரு 'டெக்னீஷிய'னாக வேண்டாம்; குறைந்த பட்சம் ஒரு மனிதனாகக் கூட மதித்து நடத்துவதில்லை திரை உலகம்" என்கிறார் மௌனம் ரவி. குறுகிய காலத்தில் மிக அதிக படங்களுக்கு பி.ஆர்.ஓவாகப் பணியாற்றிய பெருமை கொண்ட இளைஞர்.

சுமார் 100 படங்களுக்கு மேல் (முதல் படம் எம்.ஜி.ஆரின் 'நான் ஆணையிட்டால்') பணியாற்றியிருக்கும் இன்றைய முன்னணி பி.ஆர்.ஓக்களுள் ஒருவரான கிளாமர் கிருஷ்ணமூர்த்தி. "அரசு வழங்கும் 'மானிய'த் தொகை மாதிரிதான் எங்கள் சம்பளம். வருவது கொஞ்சம் தானெனினும் அதுவும் வந்தால்தான் உண்டு என்ற நிலைதான் சோகம்" என்கிறார்.

மதுரை செல்வமும் இதே ரீதியில்தான் பேசுகிறார்:

"சொல்வதற்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. பி.ஆர்.ஓ.வேலை பார்த்து, ஆயுசு முழுக்க மூன்று வேளை வயிறாரச் சாப்பிடுவது ரொம்பக் கஷ்டம். இதோ, இந்த மாதம் எனக்குக் கல்யாணம் ஆகப் போகிறது. என்னை நம்பி வரும் பெண்ணை இந்தத் தொழிலில் இருந்து கொண்டு–காப்பாற்ற முடியுமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. பேசாமல் Production side போய்விடலாமா என்று யோசிக்கிறேன். மேலும் "மரியாதை என்பதே இத்துறையில் கிடையாது. நாய் மாதிரி விசுவாசம் காட்டினாலும் பலன் என்னவோ பூஜ்ஜியம்தான். பத்திரிகைத் தொடர்பு – மக்கள் தொடர்பு என்ற இப்பணியை –இதன் சிரமம் புரியாமல் – 'இதெல்லாம் ஒரு கஷ்டமா' என்றுதான் கேட்கிறார்கள்."

இப்படியெல்லாம் குமுறும் அளவுக்கு அப்படியென்ன சிரமம் இவர்களுக்கு?

விசாரித்ததில் சம்பளம் மட்டுமல்ல காரணம் என்கிற விவரம் தெரிய வந்தது. இவர்களது பணியைத் திரை உலகம் அங்கீகரித்து, உரிய மரியாதை தராததே பி.ஆர். ஓக்களின் முதல் குமுறல்.

"பம்பாய்ப் பட உலகில் ஒரு

பிழைப்பது சினிமா, கிடைப்பது கெட்டபேர்!

பி.ஆர்.ஓ.வுக்கு 40 முதல் 60 ஆயிரம் ரூபாய் சம்பளம் தருகிறார்கள். ஒரு படத்தின் கதை முடிவானதும் உடனே பி.ஆர்.ஓ.வைத்தான் முடிவு செய்வார்கள். அவர்களைக் கேட்டுத்தான் டைரக்டர் நடிக நடிகையர் போன்றோரையே அணுகுவார்கள். பூஜைக்கு நாள் பார்ப்பது முதல் ரிலீஸ் நாளைத் தேர்ந்தெடுப்பது வரை அங்கே பி.ஆர்.ஓ.க்கள்தான்'' என்கிறார் துளசி பழனிவேலு.

"ஆனால், ஒரு கம்பெனி எனக்குத் தரவேண்டிய பணத்தைக் கேட்க, தயாரிப்பாளர் குடியிருக்கும் ஃபிளாட்டுக்கு குறைந்தது நூறு தடவையாவது நடந்திருப்பேன். கடைசியில் அந்த தயாரிப்பாளர் என்ன சொன்னார் தெரியுமா? 'நீ ஒரு முறை என்னைப் பார்க்க லிஃப்ட் ஏறிவந்தால் நான் மூன்று ரூபாய் பில்லில் கூடக் கட்ட வேண்டியிருக்கிறது. நூறு முறை வந்திருக்கிறாய். உன் சம்பளத்தில் 300 ரூபாய் கட்!' எப்படி இருக்கிறது பார்த்தீர்களா?'' என்கிறார் மௌனம் ரவி.

வெளிப்புறப் படப் பிடிப்புகளுக்குப் பத்திரிகையாளர்களைக் கூட்டிப் போவது இவர்களின் பணிகளில் பிரதானமான ஒன்று. போக வர செலவு, அங்கே தங்க ஹோட்டல் செலவு இதர செலவுகளையெல்லாம் நியாயமாகக் கம்பெனி தான் ஏற்க வேண்டும்.

"ஆனால் ஒருதரம் இப்படி வெளிப் புறக் காட்சிக்குப் பத்திரிகையாளர்களைக் கூட்டிப் போன போது நான் திரும்பிவர டிக்கெட் செலவு கூடத் தராமல், ஒரு வாய் சோற்றுக்குக் கூட வழியில்லாமல் அலைய விட்டது ஒரு கம்பெனி'' என்று தழுதழுக்கிறார் பழனிவேலு.


"தயாரிப்பாளர்கள் எங்களை ஏமாற்றுகிறார்கள் என்பது ஒரு பக்கம் இருக்க, சக பி.ஆர்.ஓ.க்களுக்கிடையே ஒற்றுமையில்லாத நிலை இங்கே நிலவுவதும் இவர்களின் அவலத்துக்கு ஒரு காரணம்'' என்கிறார் தமிழ் சினிமாவின் முதல் பி.ஆர்.ஓ. என்ற பெருமை பெற்ற பிலிம் நியூஸ் ஆனந்தன்.

"ஒரு பி.ஆர்.ஓ.5000 ரூபாய்க்கு ஒரு கம்பெனியில் பணியாற்ற ஒப்பந்தம் செய்து கொண்டாரென்றால், வேறொருவர் அதே கம்பெனிக்குப் போய் 'எனக்கு 3000 கொடுத்தால் போதும், நான் செய்து தருகிறேன்' என்று அடுத்தவரின் வாய்ப்பைப் பிடுங்கிக் கொண்டு விடுகிறார்கள். இப்படி இவர்களுக்குக்குள்ளேயே மோதல் ஏற்படுவதால், ஒருமித்த குரலில் தயாரிப்பாளர்களிடம் தம் கோரிக்கைகளை முன் வைப்பதென்ற பேச்சுக்கே இடமில்லாமல் போகிறது - இது கிளாமர் கிருஷ்ணமூர்த்தி.

சினிமாவில் எதெதற்கோ யூனியன் இருக்கிறது. பி.ஆர்.ஓ.க்களுக்கு ஒரு யூனியன் கிடையாதா என்றால் நேற்று வரை கிடையாது. மிக சமீபத்தில் பிலிம் நியூஸ் ஆனந்தன் தலைமையில் ஒரு யூனியன் ஆரம்பித்திருக்கிறார்கள்.

விசேஷம் என்னவென்றால் ஒருத்தரும் இதில் பெரிய சந்தோஷம் ஏதும் படவில்லை என்பதுதான்!

"அதெல்லாம் பிரயோஜனமில்லை சார்! வர்ற காசு கைக்கும் வாய்க்குமே சரியா இருக்குது. இதுல யூனியன் மெம்பர்ஷிப், மீட்டிங், சந்தான்னு அப்பப்ப கொடுத்துக்கிட்டே இருக்கணும். தவிர உருப்படியா ஒண்ணும் பண்ணவும் முடியாது. காரணம், சினிமாவில் எல்லா டெக்னீஷியன்களுக்கும் படம் ஆரம்பிக்குமுன் 'அக்ரிமெண்ட்' போடுவார்கள். எங்களுக்கு அது கூடக் கிடையாது.



நாம் ஏதாவது கோரிக்கைன்னு கேட்கப் போய் 'உன் சங்காத்தமே வேண்டாம்'னு தூக்கிட்டாங்கன்னா என்ன செய்யறது?" என்கிறார் பெயர் சொல்ல விரும்பாத ஒரு பி.ஆர்.ஓ.

இப்படியான சிக்கல்களிலெல்லாம் சிக்கிக் கொள்ளாமல் இத்துறையில் இருந்து கொண்டு வாழ்க்கை நடத்துவதற்கு ஒரு மாற்று உபாயம் சொல்கிறார்கள். அது, நடிக நடிகையரின் தனிப்பட்ட பி.ஆர்.ஓவாக இருப்பது.

அதாகப்பட்டது, அந்தந்த நடிக - நடிகையரின் தனிப்பட்ட பப்ளிசிட்டிக்காக உழைத்து, அவர்களிடம் மாதச் சம்பளம் வாங்கிக் கொள்வது. படங்களுக்குப் பணி புரியும் பி.ஆர்.ஓ.க்களே நடிக-நடிகையருக்கும் பி.ஆர்.ஓ.வாகவும் இருப்பதுண்டு.

இதிலும் சிக்கல் இல்லாமல் இல்லை.

"நடிக - நடிகையருக்குப் பி.ஆர்.ஓ.வாகப் பணியாற்றுவது அத்தனை சுலபமில்லை. அவர்களைப் பற்றி ஏதாவது தவறான தகவல்கள், கிசுகிசு வந்து விட்டால் முதல் பாதிப்பு பி.ஆர்.ஓ.க்களுக்குத்தான்" என்கிறார் பழனி வேலு.

இதிலும் நடிகர்களை விட நடிகைகளிடம் பணியாற்றுவது ரொம்பக் கஷ்டம் என்கிறார்கள். "நாலு படம் நடித்து விட்டால் என்னமோ தலையில் கொம்பு முளைத்து விட்டது போலக் குதிப்பார்கள். வயது வித்தியாசமெல்லாம் பார்க்காமல் பெயரைச் சொல்லி- சமயத்தில் 'டா' போட்டே அழைப்பார்கள். சம்பளம் கொடுப்பதால் எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்கிற எண்ணம், இங்குள்ள பல நடிகைகளுக்கு உண்டு. ஷூட்டிங்கில் பல பேர் முன்னால் ஒரு பி.ஆர்.ஓவை செருப்பால் அடித்த நடிகை இன்று இங்கே முன்னணிக் கதாநாயகி!" என்கிறார் ஒருவர்.

"பி.ஆர்.ஓ.க்களின் பணி என்ன, தகுதி என்ன என்பது தெரியாமல் சில நடிக-- நடிகையர் அவர்களைத் தவறான வேலைகளில் ஈடுபடத் சொல்லி கட்டாயப்படுத்துவதால் இன்று இத்தொழிலிலுள்ள பல நல்ல நபர்களுக்கும் சேர்த்தே கெட்ட பெயர் கிடைத்திருக்கிறது"- இது நெல்லை சுந்தர்ராஜன்.


நெல்லை சுந்தர்ராஜன் மேலும் ஒரு தகவல் சொன்னார். ஒரு காலத்தில் பிரபலமான ஜோடியாகத் தமிழ் சினிமாவில் வலம் வந்த நாயக-நாயகிக்குக் காதல் திருமணத்தை முன்னின்று நடத்தியவர் இவர். ஆனால் அந்தத் திருமணத்தன்று கைக்காசு செலவு பண்ணி இவர் எடுத்த புகைப்படங்களுக்குக் கடைசி வரை பேமென்ட்டே தரவில்லையாம்.

ஆனால், "பிரச்னை தரும் தயாரிப்பாளர், நடிக-நடிகையர் யாரென்றுதான் எல்லாருக்குமே தெரியுமே? அவர்கள் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்காமல் நல்ல கம்பெனிகளைத் தேடிக் கொள்ளலாமே" என்கிறார் ஜான்சன். இரண்டே வருடத்தில் 40க்கும் மேற்பட்ட படங்களுக்குப் பணியாற்றியவர் இவர்.

"பஞ்சு அருணாசலம், பாலு மகேந்திரா, டி.ஆர். போன்றவர்களிடம் நான் பணியாற்றுகிறேன். இன்று வரை ஒரு பிரச்னை வந்தது இல்லை. ரொம்ப கௌரவமாக நடத்துகிறார்கள். சம்பளப் பிரச்னை இதுவரை எனக்கு வந்ததே இல்லை" என்கிறார். ஆனால் எல்லாருக்கும் இதே போன்ற தயாரிப்பாளர்கள் கிடைப்பது கஷ்டம் என்பதையும் ஒப்புக் கொள்கிறார்.

"பிரச்னை இல்லாத இடமே இல்லை. சினிமா, அதிகமாகப் பணம் புழங்கும் இடம். எனவே சந்தேகமும் அவநம்பிக்கையும் எப்போதும் இருக்கத்தான் செய்யும். நம் வரையில் நாம் நேர்மையாக, ஒழுக்கமாக இருந்து விட்டால் போதும். தொல்லை இருக்காது" என்னும் இவர், சமீபத்தில் கார்த்திக்கின் Personal PRO வாக ஆகியிருக்கிறார்.

- ஆர். பி. ஆர்.



"நீங்க ஏன் எல்லாக் கேள்விக்கும் மழுப்பலாவே பதில் சொல்றீங்கன்னு கேட்டு மதுரை நேயர் ஒருத்தர் எழுதியிருக்கார்?"

"ஓஹ்... ஓஹ்... நல்ல அருமையான கேள்விதான் இது! இந்தக் கேள்விக்கு அரை மணி நேரமாவது கொடுத்தால்தான் விளக்கமா பதில் சொல்ல முடியும்... அதனால அடுத்த கடிதத்தைப் படிங்க!"

- சீர்காழி வி. ரேவதி

லாங் ஷாட் - 2

தெலுங்குப் படவுலகம் என்றதும் சங்கரா பரணம், சீதாராமய்யகாரி மனவராலு ஆகிய படங்களின் நினைவுதான் பலருக்கும் வரும். ஆனால் இன்றைய நிலையே வேறு. சங்கரா பரணம் கே. விஸ்வநாத் இன்றைய நிலையில் நாக்குப்பிடிக்க முடியாமல் தடுமாறுகிறார். அவ்வளவு ஏன்? கமர்ஷியல் கதாநாயகியான விஜயசாந்தியின் சமீபத்திய நான்கு படங்களும் சூப்பர் ஃபிளாப். (எல்லாமே வன்முறை, அரசியல்வாதி, போலீஸ் வில்லன்கள் தொடர்பான கதைகள்).

என்ன படங்கள் ஓடுகின்றன? டப்பிங் படங்களில் நல்ல கலெக்ஷன். மற்றபடி ஒரே மாதிரியான நடனங்கள், சண்டைக் காட்சிகள், காதைக் கிழிக்கும் இசை, எந்தப் படத்துக்கு வேண்டுமானாலும் பொருந்துகிற கனவுக் காட்சிகள், எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடுகிற செக்ஸ் மற்றும் வன்முறைக் காட்சிகள், விரசமான நகைச்சுவை. இதுதான் இன்றைய தெலுங்குப் படவுலகம் என்றாகி விட்டது.

இதனால், ஒரு காலத்தில் ஜெயப்ரதா, ரேகா, பானுபிரியா, ஸ்ரீதேவி போன்ற கதாநாயகிகளைத் தேசியத் திரையுலகத்துக்குக் கொடுத்த திரையுலகம், இன்று நக்மா, ரவீனா டன்டன், பூஜாபட் போன்ற பம்பாய்க் கதாநாயகிகளையும் மாலாஸ்ரீ (கன்னடம்), ரம்யாகிருஷ்ணன் போன்றவர்களையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்கு வந்து விட்டது. இவர்கள், கவர்ச்சி நடிகைகளே ஆச்சரியப்படுமளவுக்குக் கவர்ச்சி காட்டத் தயங்காததால் தெலுங்குப் படங்களில் கவர்ச்சிக்குப் பஞ்சமே இல்லை என்ற துரதிருஷ்ட நிலை உருவாகி விட்டது. திறமை காட்டி நடிக்கக்கூடிய மீனா, ஷோபனா போன்றோர் முன்னணியில் இடம் பிடிக்க முடியாமல் தவிக்கிறார்கள்.

அடுத்தது, தயாரிப்புச் செலவு. ஒரு சாதாரண படத்தின் பட்ஜெட்டே ஒரு கோடியைத் தாண்டி விடுகிறது. பெரிய நட்சத்திரங்கள் என்றால் சுமார் ஐந்து கோடி வரை செலவாகிறது. இப்படி பிரும்மாண்டமாகச் செலவு செய்யப்பட்டு எடுத்த - சிரஞ்சீவி - ஸ்ரீதேவி ஜோடியில் வெளிவந்த - எஸ். பி. பரசுராம் படமும் வெற்றி பெறவில்லை!

இதன் காரணமாகவே, மயூரி படத்தையும் சில நகைச்சுவைப் படங்களையும் எடுத்துத்



• விஜயசாந்தி : வீழ்ச்சிப் பாதை?

ஹீரோயின்கள் இறக்குமதி!

தனிமுத்திரை பதித்த தயாரிப்பாளரான ராமோஜிராவ் இப்போது படவுலகிலிருந்தே ஒதுங்கியிருக்கிறார். "தயாரிப்புச் செலவு வானளாவ உயர்ந்து விட்டது; மக்களின் ரசனையும் மாறி விட்டது. இது எனக்கு ஒத்து வராது!" என்கிறார் அவர்.

"முன்பெல்லாம் நாங்கள் டூயட்டுகளின் போது கண்களின் மூலம் காதலைத் தெரிவித்தோம். இன்றைய டூயட்டுகளிலோ அங்க அசைவுகளுக்குத்தான் முக்கியத்துவம். நாயகனும் நாயகியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வதே அரிதாக இருக்கிறது!" என்று வருத்தத்தோடு சொல்கிறார், தெலுங்குப் படவுலகின் தனி நாயகனான நாகேஸ்வரராவ்.

இத்தனையையும் மீறி, தெலுங்குப் படவுலகம் ஓர் உன்னத நிலைக்கு வர வேண்டுமானால் ஓர் அற்புதம் நிகழ வேண்டும் என்றுதான் தோன்றுகிறது.

ஹைதராபாத்திலிருந்து : ஜி. யு. நாதன்

வாழ்வை பாதித்த வரிகள்!

முதல் பரிசு ரூ. 250/-

எனக்கு ஒரு வரன் வந்தது. அழகில் சுமார் ரகம்தான். என் தாய், தந்தைக்கும் அரை மனதுதான். 'வேண்டாம்' என்று சொல்லிவிட நாங்கள் நினைத்துக் கொண்டிருந்தபோது அவருடைய தங்கை என்னிடம் வந்தாள். "என் அண்ணனுக்கு உன்னைத் திருமணம் செய்து கொள்ளப் பூரண சம்மதம். உன் பதில் என்ன?" என்று என்னைக் கேட்டாள். உடனே எனக்கு, 'நாம் ஒருவரை விருப்பப்பட்டுத் திருமணம் செய்து கொள்வதைவிட, நம்மை விரும்பியவருக்கு வாழ்க்கைப்பட்டால் சந்தோஷமாக வாழலாம்' என்கிற 'குங்குமச்சிமிழ்' படத்தில் வரும் வரிகள் நினைவுக்கு வரவே, சம்மதம் சொல்லிவிட்டேன். மனதால் அழகிய அவருக்கு நான் better half. இரு குழந்தைகளின் தந்தையான அவருக்கு நான்தான் முதல் குழந்தை!





- திருமதி பிருந்தா பத்ரிநாத், சேலம் - 5.


ஆறுதல் பரிசுகள் :

என் மாமன் மகள் மேல் எனக்குக் காதல். ஆயினும் அதை வெளியிடத் தயக்கம். ஒரு முறை, ஓர் உறவினர் வீட்டில் நான் தங்கியிருந்த போது, தற்செயலாக அவளும் தன் தோழியுடன் அங்கு வந்தாள். போகும் போது, பாதகாணிக்கை படத்தில் வரும் 'அத்தை மகனே போய் வரவா' என்ற பாடலைப் பாட ஆரம்பித்து, 'மல்லிகை மலர் சூடிக் காத்து நிற்கவா?' என்ற வரியைப் பாடும் போது, தன் தலையிலிருக்கும் பூவை எடுத்து நான் பார்க்கும்படி சூடிக் கொண்டாள். இத்தனையையும் தன் தோழிக்குப் பாடுவது போலவே இயல்பாகச் செய்தாள். அப்புறமென்ன? திருமணம்தான்! இப்போது அவள் விதியின் பசிக்கு இரையாகிப் போனாலும் அந்தப் பாடலைக் கேட்கும் போதெல்லாம் பழைய நினைவுகள் தோன்றி விழிகள் திரை போட்டுக் கொள்ளும்.




- ச. முரளிதரன், சென்னை - 64.

தொடர்ந்து கல்லூரியில் படிக்க முடியாத நிலை. திருமணம்; குடும்ப பாரம். இடையில் இரண்டு வருடம் கணவரின் வேலையில் தாற்காலிகக் குழப்பம். நிம்மதி எங்கிருந்து வரும்? இந்த நிலையில்தான் 'மனதில் உறுதி வேண்டும்; வாக்கினிலே இனிமை வேண்டும்!' என்னும் பாரதியார் பாடலை சிந்துபைரவி கேசட்டில் கேட்டேன். ஓர் உறுதி பிறக்க, மகளிர் சிறுதொழில் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் பெற்று, பத்து தையல் மெஷின்களை வாங்கி, ஆடைகள் ஏற்றுமதி நிறுவனமொன்றுக்கு ஆடைகள் தைத்து சப்ளை செய்ய ஆரம்பித்தேன். வருமானம் வந்து குடும்ப பாரம் குறைந்தது. நிம்மதி வந்தது. பாரதியின் பாடலால் என் கனவு மெய்ப்பட்டது!



திருமதி கமலம், பெங்களூர் - 54.

எங்கள் காதலுக்கு இரு வீட்டிலும் கடும் எதிர்ப்பு. எங்கள் முயற்சிகளெல்லாம் தோல்வியடைய, மனம் வெறுத்திருந்தேன். அப்போது வந்த என் தோழி, 'ராஜ பார்வை' படத்துக்கு வரும்படி அழைத்தாள். என் தாயாரும் எங்களுடன் வந்தார். படத்தில் 'இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக' என்று சாருஹாசன் கூறிய வசனம், என் தாயின் பிடிவாதத்தை மாற்றியதோடு, எங்கள் காதலையும் திருமணத்தில் முடித்து வைத்தது.



- ஆர். காஞ்சனா, நெய்வேலி - 3.

கிராமத்திலுள்ள என் நண்பர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அப்போது நண்பர் வீட்டு ஜன்னல் திரைகளை வெளுத்துக் கொண்டு வந்திருந்தார் சலவைத் தொழிலாளி. அவர் சட்டையணியாமல் இருந்தார். அவருடன் வந்திருந்த அவரது சிறு பையன் துணி ஏதும் அணியாமல் ஒட்டிய வயிறுடன் வறுமையைப் பறைசாற்றினான். அதைப் பார்த்ததும், "பாடும் வானம்பாடி' படத்தில் வரும், 'அட மாடி வீட்டு ஜன்னல் கூட சட்டை போட்டிருக்கு; அட, சேரிக்குள்ள சின்னப்புள்ள அம்மணமாயிருக்கு!' என்ற பாடல் வரிகள்தான் நினைவுக்கு வந்தன.

- ஏ.கே. ஆனந்தப்ரியா, இராமநாதபுரம்.

லாங் ஷாட் - 3

அளவுக்கு மீறிய மொழிப்பற்று

"இன்றைய கன்னடப்பட உலகம் முழுக்க முழுக்க ஒரு ரீமேக் இன்டஸ்ட்ரியாக மட்டுமே போய் விட்டிருக்கிறது" - என்று வருத்தப்பட்டார் ஒரு டைரக்டர். அவர் சொன்னார். "ரவிச்சந்திரன் என்றில்லை. மற்ற எல்லாரும் கூட அதே பாணியைத்தான் பின்பற்றுகிறார்கள். தொண்ணூற்று ஐந்து சதம் படங்கள் வெறும் மொழி மாற்றப் படங்கள்தாம். தமிழ்ப் படங்கள் அல்லது தெலுங்குப் படங்கள். ஒரிஜினல் ஸ்கிரிப்ட் என்பதே மிக மிக அபூர்வம்!" என்றார் அவர்.

ஏன் இந்த நிலைமை? "பொதுவாகவே கன்னடப் படங்கள் எல்லையைத் தாண்டி எங்கேயும் ஓடுவதில்லை. அதனால் யாரும் ரிஸ்க் எடுக்க விரும்புவதில்லை. நேரடியாக மொழிமாற்றப் படங்களை எடுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். மற்ற படங்களை விட பாடல் காட்சிகளில் ஆபாசம் கொஞ்சம் தூக்கலாக இருக்கிறது என்பதற்கும் இதுதான் காரணம்!" என்றார் அவர்.

இத்தனைக்கும் கன்னடத் திரையுலகிற்கு இது வைரவிழா ஆண்டு. இந்த அறுபது ஆண்டுகளில் அது கண்ட வளர்ச்சிதான் என்ன?

அறுபதுகளில் 'மிஸ் லீலாவதி', 'கப்பு பிளுப்பு' போன்ற குடும்பக் கதைப் படங்கள்; லக்ஷ்மிநாராயணன், புட்டண்ணா கனகால் போன்றோரின் ரியலிஸ சினிமாக்கள்; அயல்நாட்டு அறிஞர்களாலும் பாராட்டப் பெற்ற சமஸ்காரா, காடு, சோமனதுடி போன்ற படங்கள் என்று கன்னட சினிமா வளரத்தான் செய்தது. வசூலும் கணிசமாக இருந்தது.

ஆனால், எல்லாமே சில நாட்கள்தாம். எண்பதுகளில் இவையெல்லாம் காணாமலே போய் விட்டன. செக்ஸ், வன்முறை, இரட்டை அர்த்த வசனங்கள், ஆபாசக் கேலிக் கூத்துக்கள் இவையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் ஆக்கிரமிக்கத் துவங்கின.

அம்பரிஷ், காசிநாத் ஆகியோரின் படங்களில் இவை அதிகமாய்க் கையாளப்பட்டு, அவற்றில் ஓரிரு படங்கள் வசூலிலும் வெற்றி பெற்று வைக்கப் போக, கன்னடப் படங்களில் ஃபார்முலாவே இதுதான் என்றாகி விட்டது!



இந்தக் காலகட்டத்தில் ஓரிரு வருடங்கள் சரியான ஹீரோவோ சரியான டைரக்டரோ இல்லாமல் கொஞ்சம் தடுமாற்றமாய் இருந்த சமயத்தில் ராஜ்குமாரின் மகன்கள் திரையுலகில் நுழைந்தனர். சிவராஜ்குமார், ராகவேந்திர ராஜ்குமார் இருவருக்குமே வரவேற்பு பெரிய அளவிலேயே இருந்தது. ராகவேந்திர ராஜ்குமாரின் மூலம் அறிமுகமான மாலாஸ்ரீக்கு அடித்தது ஒரு யோகம். அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகள் மாலாஸ்ரீயின் ஆண்டுகள்தாம்!

எண்பதுகளின் இறுதியில் தமது பராக்கி ங்களுடன் கன்னடப்

படவுலகில் பிரவேசித்தவர் ரவிச்சந்திரன். ரவிச்சந்திரனின் தந்தை மிகப் பெரும் விநியோகஸ்தராகவும் பெரிய தயாரிப்பாளராகவும் இருந்ததால் ஆடம்பர அட்டகாசங்களுடன் திரையில் நுழைவது ரவிச்சந்திரனுக்கு சுலபமாக இருந்தது. கண்களைப் பறிக்கும் ஜிகினா உடைகள். பிரம்மாண்ட செட்டுகள், அரைகுறை ஆடை அணிந்த ஏராளப் பெண்கள் என்று வசூல் படங்களுக்கேயுரிய ஃபார்முலாக்களும், கூடவே நவீன டெக்னாலஜி யுக்திகளும் இன்னமும் அவருக்கு வெற்றியைத் தந்து கொண்டிருக்கின்றன.


ரவிச்சந்திரன், கதையைப் பற்றியெல்லாம் கவலையேபடுவதில்லை. தமிழில் வந்து பெரிய வெற்றிகளைப் பெறும் அவ்வளவு படங்களையும் உடனடியாக வாங்கி கன்னட சாயம் பூச ஆரம்பித்து விடுகிறார்.

"இப்போதும் ராஜ்குமார் நடித்த குடும்பப் படங்கள் நன்றாகத்தான் ஓடுகின்றன" என்றார் நம்மிடம் பேசிய டைரக்டர்.

"ஆனால் பொதுவாக மற்ற படங்களின் ஓட்டம் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. இதற்கு இன்னுமொரு காரணமும் இருக்கிறது. சமீபத்திய கன்னடப் படங்களில் மொழி உணர்வு ரொம்பவும் அதிகமாக இருக்கிறது. வில்லன் தமிழ் பேசுகிறவனாக இருப்பான்; அல்லது ஆங்கிலம் பேசுவான். சீன் எப்படி அமைக்கிறார்கள் தெரியுமா? 'கஸ்தூரி கன்னடத்தை விட்டு விட்டு வேறு பாஷையாடா பேசறே?' - என்று ஹீரோ சொல்லிச் சொல்லி உதைக்கிற மாதிரி வைக்கிறார்கள். பாடல்கள், வசனங்கள் எல்லாமே மொழி வெறியைத்தான் சொல்கின்றன. இன்றைய டிரெண்ட் அப்படி ஆகிவிட்டது. இத்தனை வருடங்கள் கழித்து ராஜ்குமாரே அவரது லேட்டஸ்ட் படத்தில் கையில் கன்னடக் கொடியைப் பிடித்துக் கொண்டு 'ஹுட்டிதரே கன்னட மண்ணல்லி ஹுட்டு பேக்கு' (பிறந்தால் கன்னட மண்ணில்தான் பிறக்க வேண்டும்) என்று பாட்டுப் பாடுகிற நிலைமை! இப்படி அளவுக்கு மீறிய மொழித் திணிப்பு இருப்பதால் இந்தப் படங்கள் வெறும் கன்னடக்காரர்களுக்கு மட்டும் தானோ என்ற நினைப்பு மற்றவர்களுக்கு ஏற்படுவதும் இயற்கைதானே...

"இதெல்லாம் மாற வேண்டும். ஒய்.ஆர். சுவாமி, சித்தலிங்கய்யா, புட்டண்ணா, கிரிஷ்கர்னாட் போன்றவர்கள் இன்னும் புதிய முயற்சிகள் செய்ய வேண்டும். அப்போதுதான் மறுபடி ஒரு மாறுதல் ஏற்படும் என்று தோன்றுகிறது" என்றார் அந்த டைரக்டர்!

- வசந்த்



டீ.வி. சிரிப்பு: பரிசு ரூ.250/-

ஜோக், புது அல்லது பரபுக் கவிதை, சம்பவத்துணுக்கு என்று எதையும் எழுதலாம். மூன்றே நிபந்தனைகள்: டீவி தொடர்பானதாக இருக்க வேண்டும்; சிரிப்பு வர வழைக்க வேண்டும்; கட்டத்துக்குள் அடங்க வேண்டும். உள்ளதற்குள் மிகச் சிறந்த ஐந்து சூபர் சிரிப்புகளுக்குப் பரிசு ரூ.250/- பகிர்ந்து அளிக்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. உறை மீது "டீ.வி.சிரிப்பு"

முடிவு தேதி: **13.8.94**

பெய... ....

விலாசம்: ....

....

- **ச. ஜான். ரவி, கோவில்பட்டி.**

? காந்தி குல்லாய் அணிந்த தலையோடு பிரதமரின் காலில் விழுந்து மத்திய மந்திரி சீதாராம் கேசரி வணங்கினாராமே?

! அடக் கடவுளே! கட்அவுட் கலாசாரம் போதாதென்று காலில் விழும் கலாசாரத்தையும் தமிழகத்திலிருந்து தில்லி சுவீகரித்துக் கொண்டதா! இரகசாரம்!

- **அசோக்ராஜா, அரவக்குறிச்சிபட்டி.**

? சுப்பிரமணியசுவாமியின் மௌனம் எதைக் காட்டுகிறது?

! சு. சுவாமியாவது மௌனம் சாதிப்பதாவது? அப்படியெல்லாம் நல்லதுக்கு ஆசைப் படாதீங்க! கடைசியா, ஆர்.வியை ஒரு புடி புடிச்சு, அதுல காஞ்சி மடத்தையும் இழுத்து, பரபரப்பு உண்டாக்கி, பதிலுக்குப் பதிலளித்து சுறுசுறுப்பாகத்தான் செயல்பட்டுக்கிட்டிருக்கார்.

- **அ. சண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.**

? 'எகிப்திய பிரமிடுகளும் இமயத்தின் பனி சிகரங்களும் பாத பூஜை செய்து வணங்கும் பவித்திரமானவர் புரட்சித் தலைவி' என்கிறாரே அமைச்சர் தென்னவன்? புரியலையே!

! புரியாதுங்க. ஏன்னா நீங்களும் நானும் அம்மையாரை மனுஷியா பார்க்கறோம். அவங்க அவரை தெய்வமா நினைச்சுக் கும்பிடறாங்க. ஆதிபராசக்தி என்னும் போது இமயம் என்ன அண்டசராசரமே அடிபணிய வேண்டியதுதானே!

- **வைத்தியா, திருவெண்ணெய்நல்லூர்.**

? சென்லார் போர்டின் புதிய வழிமுறைகள் அநியாயமானதா? நியாயமானதா?

! 'அப்படி ஒண்ணும் புதிய விதிமுறைகள் கிடையாது; ஏற்கெனவே உள்ள விதிமுறைகளை கரெக்டா அனுசரித்துப் படமெடுக்கணும்னுதான் கேட்கிறோம்; கண்டிஷனா அமுல்படுத்துவோம்னுதான் சொல்றோம்' என்று அமைச்சர் விளக்கியிருக்கிறாரே! ஆக, குறை விதிமுறைகளில் இல்லை; அதன் இரண்டு பக்கத்திலும்தான் இருக்கிறது!

- **கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.**

? திரைப்படக் கலைஞர்கள் ஊர்வலத்தில் "துரோகி விசு ஒழிக" கோஷம் கேட்டதா?

! "எட்டப்பன் சிந்தாமணி முருகேசன் ஒழிக" என்று ஒரு கோஷமும் காதில் விழுந்தது. போதாக்குறைக்கு, "என்னய்யா பெரிசா வெட்டிப்புடுவான்? துட்டு தள்ளினா எல்லாம் சரியாயிடும்" என்ற பேச்சும் அடிபட்டது!

- **மு. முருகேசன், இராமேசுவரம்.**

? அகில இந்திய அளவில் ஒரு டி. என். சேஷனும் மகாராஷ்டிராவுக்கு ஒரு கைர்னாரும் கிடைத்திருப்பது போல் தமிழகத்துக்கு ஒரு ஹீரோ கிடைப்பாரா?

! உச்சநீதிமன்றம் கண்டித்த பிறகு சேஷன் அடக்கி வாசிக்கிறார். வாபஸ் பெறப்பட்ட மசோதா மறுபடி தாக்கலாகலாம் என்ற அச்சமும் அவருக்கு உள்ளது. கைர்னாரோ, பிரஸ் கிளப்பில் நிருபர்கள் கேள்விகளைத் தாக்குப்பிடிக்க முடியாமல் அசடு வழிந்திருக்கிறார். நமக்கு இப்படிப்பட்ட திடீர் ஹீரோக்கள் வேண்டாம். அரசியல் ஆதாயம் தேடாத, 'ஸ்லோ பட் ஸ்டெடி' ஹீரோ உருவாகட்டும்.

- **எஸ். என். ராகவன், பெல்லாரி.**

? 'கூட்டணி ஆட்சி தவிர்க்க முடியாதது' என்று ஆர். வி. கூறியுள்ளாரே?

! எங்கே, மெஜாரிட்டி கட்சி ஆட்சியிலேயே உட்கட்சிப்பூசல்; குடுமிப்பிடி சண்டை. கூட்டணி ஆட்சியா இங்கே உருப்படப் போகிறது? அதான் பார்த்தோமே. ஜனதா ஆண்ட லட்சணத்தை. ஒருவரை ஒருவர் காலைவாரி விட... எனக்கு நம்பிக்கை இல்லை சுவாமி. அதற்கெல்லாம் ரொம்பப் பரந்த மனப்பான்மை வேண்டும். நம்மிடம் இல்லாதது அது! ஆர்.வி.யின் ஜோஸியம் பலிக்காமலே போகட்டும்.

• வம்பிலே சிக்கி...

ஆர்.வி.சுயசரிதையில்
ராஜீவைக் குறைகூறியுள்ளாரே?



● அன்பு கதிரேசன், கீழ்கட்டளை.

? 'ராஜீவ் காந்தியை டிஸ்மிஸ் செய்து விட்டு என்னைப் பிரதமராக்க முயற்சி நடந்தது' என்கிறாரே வேங்கடராமன்?

! அதற்கு இடம் தராமல் முளையிலேயே கிள்ளி விட்டதாகவும் தெரிவித்துள்ளார். 'முயற்சி எடுத்தது யார்' என்று அவர் கூறா விட்டாலும் சுக்லாவும் சென்னும்தான் என்பது எல்லோரும் அறிந்த ரகசியம் ஆகி விட்டது.

● பாலசுப்பிரமணியன், செங்குன்றம்.

? ஆர். வி. தமது சுயசரிதையில் ராஜீவைக் குறைகூறியுள்ளாராமே?

! குறை, நிறை இரண்டையும் கூறியுள்ளார். குறைகூறியதை விட நிறைகளையே அதிகம் சொல்லியிருக்கிறார். ஆனால் ராஜீவ் கொடுமையான முறையில் இறந்ததில் அனுதாப அலை பொங்கி அவரை ஒரு சூப்பர் மேனாக வும் தியாகச் சிகரமாகவும் ஆக்கியுள்ளது. அவர் பெயரைச் சொல்லி வோட்டு அறுவடை செய்பவர்கள் ஒரு சிறிய அழுக்கும் அவர் இமேஜ் மீது படுவதை விரும்ப மாட்டார்கள்.

● எம். ரேவதி, மன்னார்குடி.

? முன்னாள் பிரதமர்களான ராஜீவ் காந்தி, வி. பி. சிங், சந்திரசேகர் ஆகியோரை ஆர். வி. விமர்சித்திருப்பது பற்றி?

! ராஜீவுக்கு ரெண்டு குட்டு வைத்து, வி.பி. சிங்கையும், சந்திரசேகரையும் உயர்த்தப் போகத்தான் வம்பிலே சிக்கிக் கொண்டவ ராகிறார். அதிலும் சந்திரசேகர் ஆட்சியில் தான் கருணாநிதி டிஸ்மிஸ் ஆனார் என்ப தால் முகவுக்கு மூக்குக்கு மேல் கோபம்! என்ன தான் ஆர்.வி. சமாதானம் சொன்னா லும் அந்த இடம் உதைக்கத்தான் செய்கிறது. இப் போது 'டிஸ்மிஸ் செய்யும் அதிகாரம் போன்ற விஷயங்களில் நீதிமன்றம்தான் பரிகாரம் காண வேண்டும்' என்ற அவர் யோசனையோ போகாத ஊருக்கு வழி சொல்வதாக உள்ளது.


● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? ஆர். விக்கு இது தேவையா?

! அவருக்குத் தேவையோ இல்லையோ, எதிர் காலத்துக்குத் தேவை என்று எண்ணுகிறார். "வழிகாட்டும்" என்கிறார். வழிகாட்டுமா சர்ச்சை வளர்க்குமா என்பது கேள்விக்குறி. ராஜாஜியிடம் 'நீங்கள் ஏன் சுயசரிதை எழுதக் கூடாது?" என்று கேட்ட போது, அவர் சிரித்துக் கொண்டே சொன்னது நன்றாக நினைவு இருக்கிறது. "மூன்று காரணங்கள் : முதலாவது பல சுயசரிதைகள் கற்பனைக் கதைகளாகவே விளங்குவதைப் பார்க்கிறேன். இரண்டு, சுயசரிதை எழுதும் போது நம் செயல்களை நாமே நியாயப்படுத்த முயற்சி செய்வதைத் தவிர்க்க முடியாது. மூன்று, நம்முடன் பணியாற்றிய சகாக்களின் மனம் நோகும்படி எழுத நேரிடும்."



• துரோகியா?



• அடக்கி வாசிக்கிறார்



• அழு வடிக்கிறார்

● எச். மோகன், மன்னார்குடி. □

? தினகரன் பத்திரிகை திருபருக்கு அளிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து நீதி மன்றம் தீர்ப்பு அளித்துள்ளது பற்றி?

! அற்புதமான தீர்ப்பு. முதலாவது, 'நீதிமன்றமும் சட்ட மன்றமும் ஒன்றையொன்று எதிர்த்துக் கொள்ளாமல் ஒன்றை ஒன்று அனுசரித்துப் போக வேண்டும்' என்று கூறியுள்ளது பெருந்தன்மையானது. இரண்டு, 'திருபருக்கு ரத்து செய்யப்பட்ட தண்டனையை மறுபடி தருவது என்பது செல்லாது; மன்னிக்கப்பட்ட குற்றத் துக்காக மறுபடி தண்டனை தருவது கூடாது' என்ற தீர்ப்பு ரொம்ப நியாயமானது. அதே நேரத்தில் 'தினகரன் பத்திரிகையில் எழுதப் பட்ட விஷயமும் அது எழுதப்பட்ட முறை யும் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. அப்படி செயல்படுவது பத்திரிகை தர்மம் ஆகாது' என்றும் எடுத்துக் காட்டி எச்சரித்தது அதி நேர்மையானது.

• சுறுசுறுப்பு





• பாத பூஜை

□ ரூ 25 பரிசு பெறுபவர் :
எச். மோகன்,
தேசிய மேல்நிலைப் பள்ளி,
காந்தி ரோடு,
மன்னார்குடி - 614 001.

♦ 'ஆதிக்க மனப்பான்மையும் அடிமை புத்தியும்' தலையங்கம் படித்தேன். பெண்மைக்கு 'சக்தி' என்ற உருவம் தந்து, தெய்வமாக வழிபட்ட போதிலும் பெண்களுக்கு இழைக்கப் படும் கொடுமைகள் சொல்லி முடியாது என்ற அளவுக்கு நிகழ்ந்திருக்கிற கொடூரம், எண்ணிப் பார்க்கவே நெஞ்சம் குமுறுகிறது. வரன்பேடிக்குப் பரிசு கிடைத்துப் பயனில்லை; கடுமையான சட்டத்தின் மூலம் தான் பெண்களுக்கு எதிரான கொடுமைகளை ஒழிக்க முடியும் என்பதை உணர வேண்டும்.

சென்னை-54,

க. நடராசன்.

♦ பாரதத்தில் பெண்கள் படும் இன்னல்களையும், அவைகளுக்குக் காரணம் ஆண்களின் ஆதிக்க புத்திதான் என்பதைத் தலையங்கம் வெகு தெளிவாக அதே சமயம் 'நறுக்' கென்று கூறி விட்டது. கிரன்பேடிகள் லட்சக் கணக்கில் தோன்றினால் தான் இந்நாட்டுப் பெண்கள் ஆணுக்குச் சமமாய் வீறுநடை போட முடியும் என்பது நிச்சயம்!

கருமத்தம்பட்டி,

அ. இராஜப்பன்.

♦ 53-வது ஆண்டு மலருக்கு வரவேற்பும் வாழ்த்துக்களும் கூறுகின்றேன். கல்கியில் புதுமைக்குப் பஞ்சம் இல்லை என்றாலும் தொடக்க காலத்திலிருந்து தரத்துடன் வெளியிட்டு வருவது வியப்பானது. திறமை, உண்மை வாழும் என்ற முறையில் வளர்ச்சி கண்டு வரும் 'கல்கி' வாழ்க.

பெரியகுளம்,

விஜயசூரியா.

♦ பாடநூல் நிறுவனத் தலைவர் பதவியிலிருந்து சுலோசனா சம்பத் நீக்கப் பட்டது குறித்து நீங்கள் போட்டிருந்த கார்ட்டூன் நன்றாயிருந்தது. ஆனால் சீக்கிரமே சுலோசனா சம்பத்துக்குச் சிறுதொழில்கள் வளர்ச்சிக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் பதவி தரப்பட்டு விட்டதே!

கருப்பம்புலம்,

கப்பு வேதையா சித்திரவேலு.

♦ தேவராஜுலு பிளேடை 'சுவைக்கவில்லை' ஸார், மல்லாக்காகப் படுத்துக் கொண்டு பற்களால் கடித்தபடி 'டைடார்' வாசித்திருக்கிறார். அப்பத்தான் நழுவி உள்ளே போய் விட்டது!

பரமக்குடி, எஸ். ஹரிஹரன்.

♦ பக்கம் நாலில் உள்ள ஜோக்கில் சிறு குழப்பம். நேத்து ராத்திரி என ஆரம்பிக்க வேண்டும். அப்பத்தான் சரியாகும்.

குடந்தை, பிரசன்னகுமார்.

♦ இன்றைய தமிழக அரசியலை அழகாக விமர்சித்துள்ளார் சந்திரலேகா. இரு மாவட்டங்களில் கலெக்டராகப் பணியாற்றி கண்டிப்பான நிர்வாகத்திற்குப் பெயர் பெற்றவர். ஊரக வளர்ச்சி இயக்குனர் மற்றும் அரசு ஊரக வளர்ச்சி செயலராகப் பணியாற்றி ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதல் ஆணையர் பதவி ஏற்படுத்தி, ஒரு பணி விதி அமுல்படுத்தி சாதனை படைத்தவர். இவர் எதிர்பார்ப்பு அரசியல் உலகத்தில் நிறைவேறுமா என பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

திருவாரூர், அ. சம்பத்.

♦ அரசியல்வாதி ஆக வேண்டும் என்ற ஆசையின் பேரில் 'ஜெ' அதனைச் செய்தார் இதனைச் செய்தார் அதனால்தான் துன்பம் எனக் கூறுகிறார் சந்திரலேகா. காக்கைகள் கரைவதால் கோபுரங்கள் சரிவதில்லை. காக்கை காக்கைதான், கோபுரம் என்றும் கோபுரமே!

தேவிப்பட்டினம், பி. சிவராமன்.

♦ கே. ரவிசங்கரின் 'நியூஜெர்ஸி மாமியும் அத்வைதமும்' அது கதை அல்ல; ஒரு சிறிய காவியம். கதைக்காக இந்த வார கல்கியை பத்திரப்படுத்தி விட்டேன். கடைசியாக 'எந்தப் பொருளும் நமக்கு அன்னியமாக என்று ஆரம்பித்து முடியும் பாராவை டயரியில் எழுதி வைத்து விட்டேன்.

கும்பகோணம்,

டி. எஸ். சீதாராமன்.

♦ முதல் பாடம் சிறுகதை கருத்துள்ள கதை. பள்ளியில் சேர்ப்பதற்குப் பணம் கொடுத்த நிகழ்ச்சி அந்தப் பிஞ்சு மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து அதன் இயல்பையே மாற்றிய கொடுமையை அனைவரும் உணர வேண்டும்.

கோயமுத்தூர்,

கோ. கல்யாணசுந்தரம்.

♦ நடுப்பக்க வண்ண சினிமா ஸ்டில்ஸ்களுக்கான கமெண்ட்ஸைப் படித்துப் படித்து எங்கள் வயிறெல்லாம் வலிக்க ஆரம்பித்து விட்டது.

மதுரை - 10, பி. ராஜசேகரன்.

♦ மாக்ஸஸாய் விருது பெறும், பெண்களின் மணிமகுடமான கிரன்பேடி பற்றிய 'மூனைச் சலவையை முறியடித்தார்' என்னும் இலகவதி ஐ.பி.எஸ். அவர்களின் சிறிய கட்டுரை, அரிய கருத்துக்கள் கொண்ட அருமையான ஒன்று.

தச்சன்வயல்,

தமிழ்ச்சக்ரவர்த்தி.

பிரபலமானவர்களின் விலாசங்கள்
பதினாறாம் பதிப்பு
பரபரப்பாக விற்பனையாகிறது!






நெப்போலியன், அரவிந்த்சாமி, சுகன்யா, ரோஜா போன்ற இளைய தலைமுறை நட்சத்திரங்கள் உட்பட அனைத்துக் கலையுலகத்தினர்; அரசியல்வாதிகள்; இலக்கிய கர்த்தாக்கள் என 4300 விலாசங்கள் பெரும்பாலும் தொலைபேசி எண்களுடன் அகர வரிசைப்படி தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இந்தப் பதிப்பு விற்றுத் தீருமுன் உங்களுக்கென ஒரு பிரதியை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ.50/-

விற்பனையாகும் இதர நூல்கள்!

பேனா நண்பர்கள் சங்கம்-நோக்கங்களும், முகவரிகளும் 37.00; திரையுலகில் நுழைபவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் 26.00; நடிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் 12.00; நீங்கள் நடிகராக, நடிகையாகச் சில யோசனைகள் 18.00; தமிழ் சினிமா வளர்ந்த வரலாறு பாகம்-1 14.00; தமிழ் சினிமா வினா விடை 16.00; சினிமா மற்றும் வீடியோ பற்றிய சட்டங்கள் 7.00; நாடகங்களுக்கும், திரைப்படங்களுக்கும் எழுதுவது எப்படி?23.00;சரித்திர நாயகர் எம்.ஜி.ஆரின் சாதனைகள் 16.00; புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். 20.00; புரட்சிச் செல்வி ஜெய லலிதா 34.00; கலைஞர் மு. கருணாநிதி 31.00; நடிகர் திலகம் சிவாஜி கணேசன் 13.50; ஸ்டைல் மன்னன் ரஜினிகாந்த் 23.00; சகலகலாவல்லவன் கமலஹாசன் 25.00; தென் பாண்டிச் சிங்கம் விஜய் காந்த் 20.00; மக்கள் நாயகன் ராமராஜன் 14.00; இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் 19.00; புரட்சி இயக்குநர் பாரதிராஜா 22.00; ஜனரஞ்சக டைரக்டர் பாக்கியராஜ் 18.00; அஷ்டாவ தானி டி.ராஜேந்தர் 13.00; உலகப் புகழ்பெற்ற ஆங்கிலப் படங்கள் 11.50; பிரபல ஹாலிவுட் நடிகர்கள்-நடிகைகள் 12.00; உலகைச் சிரிக்க வைத்த சார்லி சாப்ளின் 24.00; நகைச்சுவை மன்னர்கள் லாரல்-ஹார்டி 7.00; இசைஞானி இளையராஜா 18.00; சங்கீத சாகரம் யேசுதாஸ் 15.00; பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாட்டுத்திறன் 16.00; உடுமலை நாராயணகவி-தஞ்சை ராமையாதாஸ் பாட்டுத் திறன் 12.50; மருதகாசி-கு.மா.பா. பாட்டுத்திறன் 10.50; கண்ணதாசனும் தத்துவப் பாடல்களும் 17.00; கண்ணதாசனும் சோகப்பாடல்களும் 11.50; கண்ணதாசனும் காதல் ரசமும் 15.00; திரைப் பாடல்களில் வாலியின் திறன் 8.75.

மேற்கண்ட புத்தகங்களுள் தேவையானவற்றை வி.பி.பி.யில் பெறக் கடிதம் எழுதுங்கள். பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறோம். தபால்காரர் புத்தகங்களை உங்களிடம் தரும்போது பணம் செலுத்தினால் போதும் (தபால் செலவு தனி). சென்னையில் இருப்பவர்கள் நேரில் வந்து வாங்கிக் கொள்வது சிக்கனம். ஷோரூம் விற்பனை நேரம்: காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை. ஞாயிறு விடுமுறை. ... எழுதவேண்டிய முகவரி:-

மணிமேகலைப் பிரசுரம்,

தபால் பெட்டி எண்: 1447, 4 தணிகாசலம் சாலை,
தியாகராயநகர், சென்னை- 600 017.
தொலைபேசி: 4342926 தொலை நகல்: 044-4346082

'செம்மீன்' (1965) படம் ஜனாதிபதியின் தங்கப் பதக்கத்தைப் பெற்ற போது, இந்திய சினிமா உலகமே மலையாளப் படவுலகைப் பார்த்து மூக்கின் மேல் விரலை வைத்து அதிசயப்பட்டது. அதன் பிறகு ஏறத்தாழ எல்லா ஆண்டுகளிலுமே இரண்டு மூன்று மலையாளப் படங்களாவது தேசிய விருதுகளைப் பெறுவதும் பாரத், ஊர்வசிப் பட்டங்களை நடிக - நடிகையர் பெறுவதும் சகஜமான ஒன்றாகி விட்டது.

மலையாளப் படவுலகம் இப்படித் தலை நிமிர்ந்து நிற்பதற்கு என்ன காரணம்? இங்குள்ள சூப்பர் ஸ்டார்களா?

இல்லவே இல்லை. இங்கு கதைக்குத் தரப்படும் முக்கியத்துவம்தான் காரணம். மலையாளப் படங்களுக்கான கதைகள் ஒரு போதும் இங்குள்ள சூப்பர் ஸ்டார்களை மனத்தில் வைத்துக் கொண்டு உருவாக்கப்படுவதில்லை. கதை கதைக்காகவே உருவாக்கப்படுகிறது. இல்லையென்றால் மலையாள ரசிகர்கள் அந்தப் படத்தைத் தூக்கியெறிந்து விடுவார்கள். உதாரணத்திற்கு மூட்டை தூக்கும் தொழிலாளி பற்றிய படம் என்றால், அந்தப் பாத்திரத்தில் எத்தனை பெரிய மெகா ஸ்டார் நடித்தாலும் சரி, அவர் தமிழ்ப் பட மூட்டை தூக்கும் ஹீரோ மாதிரி, பேண்ட், சட்டை, கூலிங்கிளாஸ் சகிதம் மூட்டை தூக்க மாட்டார். ஓர் உண்மையான மூட்டை தூக்கும் தொழிலாளி எப்படி இருப்பாரோ அதுபோல்தான் மேக்கப் செய்து கொள்வார். அவர் வசிக்கும் இடமும் அப்படித்தான் இருக்கும்.

இதே போல் கதையின் முடிவுகளையும் இங்குள்ள சூப்பர் ஸ்டார்களின் இமேஜ் பாதிக்கப்படுமே என்று மாற்ற மாட்டார்கள். முடிவு எப்போதும் இங்கு இயற்கையாகவே இருக்கும். இதற்கும் ஓர் உதாரணம் சொல்லலாம்.

'கவுரவர்' என்று ஒரு படம். மம்முட்டி கதாநாயகன். அவர் ஒருவித வெறியோடு மூன்று இளம் பெண்களைக் கொல்ல முயல்வார். அப்போது, "அந்த மூவரில் ஒருத்திதான் உனது சொந்த மகள்!" என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் கூற, "அவள் யார்?" என்று மம்முட்டி கேட்பார். இன்ஸ்பெக்டர் கூறாமலேயே போய் விடுவார்.

பிறகு மம்முட்டி, அந்த மூன்று பெண்களிடமும் - இவள்தான் தம் மகளோ, இவள்தான் தம் மகளோ என்று ஒவ்வொருத்தியிடமும் - பாசத்துடன் பழக ஆரம்பித்து அந்த மூவர் மீதும் உயிரையே வைத்து விடுவார். படம் முடியும் போது - கிளைமாக்ஸில் - அந்த இன்ஸ்பெக்டர் வந்து, "இதில் யார் உன் மகள் என்பதைக் கூறட்டுமா?" என்று மம்முட்டியிடம் கேட்பார். அதற்கு மம்முட்டி, "வேண்டாம் சார், வேண்டாம். இந்த மூவரின் மேலும் நான் பாசம் பொழிகிறேன். இப்போது வந்து நீங்கள் இவள்தான் என் மகள் என்று ஒருத்தியை மட்டும் அடையாளம் காட்டினால், மற்ற இருவரையும் நான் பழைய பாசத்தோடு பார்க்க முடியாமல் போய் விடும். அதனால் சொல்லாதீர்கள். இனி இவர்கள் மூவருமே என் பெண்கள்தான்!" என்று கூறுவார். ஆக, சஸ்பென்ஸ் உடையாமலேயே கிளைமாக்ஸ் காட்சி!



கதைகளே சூப்பர் ஸ்டார்கள்!

இப்படிப்பட்ட எளிமையான யதார்த்தமான முடிவுகளையே மலையாள ரசிகர்கள் விரும்புகிறார்கள். நடிகர்களும் தங்களைச் சுற்றி இமேஜ் என்கிற ஒரு செயற்கையான வட்டத்தைப் போட்டுக் கொள்ளாமல் எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று யதார்த்த மாக நடிக்கிறார்கள். இதுதான் மலையாளப் படவுலகின் அனைத்திந்திய வெற்றிக்குக் காரணம்.

மோசமான படங்களே மலையாளத்தில் எடுக்கப்படுவதில்லையா என்று நீங்கள் கேட்கலாம். எடுக்கப்படத்தான் செய்கின்றன. ஆனால், அவை நிச்சயமாக மலையாள ரசிகர்களை நம்பி எடுக்கப்படுவதில்லை என்பதை மட்டும் உறுதியாகச் சொல்லலாம்!

திருவனந்தபுரத்திலிருந்து :
எஸ்.எஸ். மணி

வசதி, பாதுகாப்பு, நம்பிக்கை ஆகியவை வாழ்வில் இடம் பெற... வழிகாட்டுகிறது எல்டிசி.



பென்ஷனர் பெனிஃபிட் திட்டம்

பாதுகாப்புப் பெறுவது உங்கள் பணம் மட்டுமல்ல. உங்களுடைய மன அமைதியும் கூட.

வயது 60 கடந்தால் என்ன? அதன் பின்னரும் நீங்கள் மன நிறைவோடு வாழ முடியும். அதற்கு உதவியாக இதோ ஒரு சிறப்பு டெபாசிட் திட்டம் — முதியவர்களுக்கு மட்டும். இத்திட்டத்தின் மூலம் ஒரு டெபாசிட்தாரர் என்கிற முறையில் நீங்கள் மாதாமாதம் ஒரு நிலையான உயர் வருமானத்தைப் பெறுகிறீர்கள். இதற்கான வட்டி வாரண்டுகள் பின் தேதியிடப் பட்டு முன்னதாகவே உங்களுக்கு அளிக்கப்பட்டு விடுகின்றன.

எனவே, கவலைகளிலிருந்து விடுபட்டு நீங்கள் மன நிறைவையும் அமைதியையும் நிச்சயமாகப் பெற முடிகிறது.

உங்கள் வளமைக்கு வழிகாட்டும் ஐந்து வெவ்வேறு டெபாசிட் திட்டங்களை லக்ஷ்மி டிரேட் கிரெடிட்ஸ் லிமிடெட் உங்களுக்கு அளிக்கிறது: ஃபிக்சட் டெபாசிட், குமுலேடிவ் டெபாசிட், ரொக்க சர்ட்டிஃபிகேட், ரெக்கரிங் டெபாசிட், பென்ஷனர் பெனிஃபிட் திட்டம்... ஒவ்வொரு டெபாசிட்தாரரும் இத்திட்டங்களின் மூலம் பெறுவது: சிறப்பான பலன்கள், தனிப்பட்ட சேவை.

எல்டிசியின் டெபாசிட் தொகைகள் 1993-94ல், ஒரே ஆண்டில் **100%** வளர்ச்சி கண்டுள்ளதற்கு இவைதான் காரணம். இந்த வெற்றியினால் ஊக்குவிக்கப்பட்டு எல்டிசி மற்றுமொரு லட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது: 31 மார்ச் 1995 அன்று அடைய நிர்ணயித்துள்ள டெபாசிட் தொகை இலக்கு ரூ.25 கோடி.

பி.ஜி. சரவணன்
சேர்மன்

டெபாசிட்டுகள் ஏற்கப்படுகின்றன!

லக்ஷ்மி டிரேட் கிரெடிட்ஸ் லிமிடெட்

கார்ப்பொரேட் அலுவலகம்:
37/1, கதீட்ரல் சாலை,
ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி எதிரில்
சென்னை 600 086.
தொ.பே.: 8281826/8281930

கிளைகள்: சென்னை • அம்பத்தூர், போன்: 681860 • அண்ணா நகர், போன்: 6212047 • குரோம்பேட்டை, போன்: 401267 • கே.கே. நகர், போன்: 4833917 • மடிப்பாக்கம், போன்: 2346586 • நங்கநல்லூர், போன்: 2348593 & 2346066 • விருகம்பாக்கம், போன்: 4830846 • மேற்கு மாம்பலம், போன்: 4830150 • திருச்சி, போன்: 25323 • மதுரை, போன்: 30626 • கோயம்புத்தூர், போன்: 43576 • திருநெல்வேலி, போன்: 322073 • காரைக்குடி, போன்: 2023 • வேலூர், போன்: 21902 • பாண்டிச்சேரி, போன்: 31859 • பெங்களூர், போன்: 366433.

எல்டிசி: உங்கள் வாழ்வின் வளமைக்குப் பொன்னான பாதை.

10.3.94 தேதியிட்ட ஹிந்து நாளிதழில் வெளியான 25.10.93 தேதியிட்ட சட்ட பூர்வமான விளம்பரத்தின் தொடர்ச்சி.

ADWAVE/LTC/4729 TAM A

வாங்க ஷாட்! — 5

உதை அம்சமே கதை அம்சம்!

இந்தி சினிமாவில் இன்று, இரண்டு 'வி' (V)க்களின் ஆதிக்கம்தான். ஒன்று விரசம் (vulgarity) மற்றொன்று வன்முறை (violence).

மாறி வரும் மக்களின் ரசனையே இதற்கெல்லாம் காரணமாகக் காட்டப்படுகிறது. "ஏற்கெனவே ஸ்டார், எம்.டி.வி., கேபிள் முதலியவற்றின் ஆதிக்கத்தால் இண்டஸ்ட்ரி படுத்துக் கிடக்கிறது. எனவே அவற்றின் வழியாக ரசிகர்களுக்குக் கிட்டும் கவர்ச்சி அம்சங்களைத் தோற்கடிக்கும் விதத்தில் திரைப்படங்கள் இருந்தால்தானே, தியேட்டருக்கு மக்கள் வருவர்? சீதை, நளாயினிகளைக் காசு கொடுத்து பார்க்க யார் விரும்புகிறார்கள்? அதுதான் அவரவர் இல்லங்களில் மனைவியைப் பார்த்துக் கொள்ள முடிகிறதே" என்கிறார் ஓர் இளம் தயாரிப்பாளர் - இயக்குனர்.

வன்முறையை எடுத்துக் கொண்டால், இப்போதெல்லாம் 'கதை'யம்சமே 'உதை'யம்சமாகி விட்ட விந்தை, அதிரவைக்கிறது. ஸ்டண்ட் மாஸ்டர்களே கதை வசனத்தைப் பார்த்துக் கொள்கிறார்களோ என்ற சந்தேகம் தலைதூக்குகிறது. மேலும், ஹீரோ, வில்லன் என்று தனித்தனியாக இல்லாமல், இப்போதெல்லாம் ஹீரோவே வில்லன் ரோலையும் சேர்த்துச் செய்வதால் 'நெகடிவ் ஹீரோக்கள்' பாத்திரத்துக்கேற்பவே சண்டை அடிதடி மிகுந்த கதையம்சங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். 'மோஹ்ரா' படத்தில் காட்சிக்குக் காட்சி உடைக்கப்பட்டிருக்கும் ஃபர்னிச்சர்களைக்

• சல்மான் - மாதுரி : இந்த ரம்மியம் அரிதானது!



கணக்கில் எடுத்துக் கொண்டால், ஒரு ஃபர்னிச்சர் கடையே வைத்து விடலாம்!

ஹீரோ மட்டுமின்றி, இப்போதெல்லாம் ஹீரோயின்களும் உக்கிர நாயகிகளாகவே தோன்றுகின்றனர். விஜயசாந்தி பாணியில், காவல் துறை உடையில் வந்து அடிதடியில் ஈடுபடுவது ஒருபுறமிருக்க, அடிபட்டுச் சீறும் பெண்புலி பாத்திரங்கள் வேறு இப்போது பாப்புலராகி வருகின்றனர். 'அஞ்சாமில்', மாதுரி தீக்ஷித், ஷன்னு ஆனந்தின் கையைக் கடித்துத் துப்புகிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! வக்கிரத்தின் உச்சகட்டமாக, 'பாஸிகரில்' ஷாருக்கான் தன் காதலியையே பல மாடிக் கட்டட உச்சியிலிருந்து உருட்டித் தள்ளிக் கொலை செய்கிறார்!

இந்த வயலன்ஸுக்கு, முன்னணி இயக்குநர்கள் ஒட்டுமொத்தமாக அளிக்கும் பதில் :

"நாங்கள் என்ன இல்லாததையும் பொல்லாததையுமா காட்டி விட்டோம்? தினமும் நியூஸ் பேப்பர்களில் வருபவைதானே! அண்மையில் ராஜஸ்தானில் ஒரு கீழ்சாதிப் பெண்மணியை கோயிலிலேயே கட்டி வைத்து, நிர்வாணமாக்கிச் சித்திரவதை செய்து கொன்ற சம்பவத்தை விலாவாரியாகப் படித்திருப்பீர்களே? நாங்களென்ன அவ்வளவு மோசமாகவா படமெடுக்கிறோம்? தினம் தினம் கேள்விப்படும் குழந்தைகளுக்கெதிரான கொடுமைகள், பீஹார், உ.பி. போன்ற மாநிலங்களில் நடக்கும் கற்பழிப்புகள், இனவெறிக் கலவரங்கள், ஏன் உங்கள் தமிழ்நாட்டிலேயே நடக்கும் பெண் சிசுவதை, இவற்றை எல்லாம் விடவா கொடூரத்தை நீங்கள் சினிமாவில் பார்க்கிறீர்கள்?" என ஆக்ரோஷமாகச் சண்டைக்கு வருகிறார்கள்.

"ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் அவதாரமாக ஹீரோக்களையும், சதி சாவித்ரிகளாக ஹீரோயின்களையும் காட்டிக் கொண்டு, கற்பனை உலகில் மக்களை சஞ்சரிக்க வைப்பது சமூகத்துக்கிழைக்கப்படும் பெரும் துரோகம். குறையும் குற்றமுமிருந்த மனிதப் பண்புகளை அப்படியே சித்திரிக்க வேண்டும். அதை விட்டு விட்டு புத்தி புகட்டுவதற்கும் போதனை செய்வதற்கும் நாங்கள் என்ன மதகுருக்களா? கொடூரங்களையும் குரூரங்களையும் திரையில் பார்த்து விட்டு, மக்கள் அலுத்துச் சலித்து, திருந்தி மனம் மாறட்டுமே? அந்தக் கோணத்தில் பாருங்களேன்" என்கிறார், மிருச் மசாலா, ஹோலி போன்ற அர்த்தமுள்ள படங்களை வழங்கிய டைரக்டர் கேதன் மேத்தா.

இவர்களின் இந்தப் போக்கு காரணமாகத்தான் குழந்தைகளின் எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற பயத்தில், அண்மையில் பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர் ஒருங்கிணைந்து 'தரக்குறைவான படங்கள் புறக்கணிப்புக் குழு' என்கிற ஒரு குழுவை ஆரம்பித்து, அவ்வப்போது போராட்டம், பேரணி, கூட்டம் என்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆராய்ந்து பார்த்தால், இந்த சீர்கேடுகளுக்கெல்லாம் அடிப்படை, இன்று படத்துறையை கபளீகரம் செய்து கொண்டிருக்கும் கறுப்புப் பணம் என்பது விளங்கும். கறுப்புச் சந்தையில் சம்பாதித்ததை பல 'அண்டர் வோர்ட் டான்'கள் சினிமாவில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுவதால், இப்போதெல்லாம் பெரிய பட்ஜெட் ஃபிலிம்களுக்குத்தான் முக்கியத்துவம்.

உதாரணத்திற்கு, சல்மான்கான் இரட்டை வேடமேற்று நடிக்கும் 'ஸிங்கர்' என்றொரு படத்திற்கு, 700 துணை நடிக நடிகையருடன் லண்டனில் ஒரு வாரம் எடுக்கப்பட்ட ஒரு பாடல் காட்சிக்குச் செலவிடப்பட்ட பணம் - 35 இலட்சம்! இந்தப் பணமுதலைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல், ரிஷிகேஷ் முகர்ஜி போன்ற தரமான, ஜனரஞ்சகமான படங்களை வழங்கும் டைரக்டர்கள் முடங்கிக் கிடக்கிறார்கள்!

பம்பாயிலிருந்து : **ஜெயஸ்ரீராஜ்**

அடுத்த இதழில்...


- **டாக்டருடன் பேசலாம்!**

  - புதிய பகுதி

- **சுதந்திர தின சிரிப்புப் பக்கங்கள்!**
- **மதுரை தி.மு.க. மாநாடு :**

  - உங்கள் கண்ணில் படாத காட்சிகள்

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த லிப்கோவின் புதிய பக்தி நூல்கள்!




ஸ்ரீமத் பாகவத ரஸாம்ருதம்

ஸ்ரீ M.K. *வெங்கடராமன் எழுதிய தமிழ் வசனம்*
400 பக்கங்கள் • *விலை ரூ.* 30 • *தபாலில் ரூ.* 38

GITA GOVINDAM (Ashtapadi)

கீத கோவிந்தம் (அஷ்டபதி)



ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் மூலம்,
தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புடன்
விலை ரூ. 20 • *தபாலில் ரூ.* 27
இரு நூல்களும் வேண்டுவோர்
ரூ. 60 *மணியார்டர் செய்க.*
லிப்கோவின் இலவச முழு
விலைப் பட்டியலுக்கு எழுதுக :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

தியாகராயநகர், சென்னை- 600 017

போன்: 4341538

66-ஆம் ஆண்டு பொன்னான சேவை!

நட்சத்திரங்களின் நாட்டிய குரு!



கல்லூரி நாட்களில் அந்த இளைஞர் நடிகை ரேவதியின் விசிறி. பிறகு அந்த இளைஞருக்கு ரேவதி ஒரு நாட்டிய மாணவி! அந்த இளைஞர்தான் ஜாகீர் ஹுஸைன். அவரைச் சந்தித்த போது...

"இஸ்லாமிய இளைஞனான எனக்கு எப்படிப் பரத நாட்டியத்தில் ஆர்வம் வந்தது? இதுதான் பலரும் கேட்கும் கேள்வி. எனது நெருங்கிய உறவினர் ஒருவர் செல்வி என்கிற இந்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டிருந்தார். அவர் பரத நாட்டியமாடுவதைப் பார்க்கும் வாய்ப்பு எனது சிறு வயதிலேயே கிட்டியதால் அப்போதே பரதத்தின் மீது எனக்கு ஆர்வம் வந்து விட்டது!" என்கிறார்.

கல்லூரி நாட்களிலேயே நடிப்பு, நாட்டியம் ஆகியவற்றுக்காக ஏராளமான பரிசுகள் வாங்கியிருக்கும் இவரது ஸ்பெஷாலிடி : 'தாயே யசோதா...' நடனம். திருமதி எம்.எஸ்ஸின் காசட்டைக் கேட்டுக் கேட்டே விஷ்ணு சகஸ்ரநாமத்தை மனப்பாடம் செய்து விட்டார். குரான், பைபிள் படித்ததோடு வேதத்தையும் படிக்க ஆசைப்பட்ட போது, வீட்டில் கடுமையான எதிர்ப்பு!

"இந்த நிலையில் நான் சேலத்திலுள்ள என் வீட்டிலேயே தங்கியிருந்தால் வேதமும் பரதமும் எனது கனவுகளாகவே போய் விடும் என்பதால், சென்னைக்குப் புறப்பட்டு வந்து விட்டேன். ஒருமுறை எனது கல்லூரி விழாவுக்கு வந்திருந்த திருமதி சித்ராவிஸ்வேஸ்வரன் அவர்களின் அறிமுகத்தை வைத்துக் கொண்டு, அவரிடம் நாட்டிய மாணவனாகச் சேர்ந்தேன். ரஜினிகாந்த், என்ஃபீல்டு விஸ்வநாதன், சத்யராஜ் ஆகியோர் செய்த பண உதவியால் எனது நடன வகுப்புகள் தொடர்ந்தன!" என்கிறார் ஜாகீர் ஹுஸைன். தற்போது மத்திய அரசின் ஸ்காலர்ஷிப்பும் கிடைத்திருக்கிறது.

இவருடைய வீட்டில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் குழந்தைகள், இளைஞர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் வந்து இவரிடம் அர்த்தத்துடன் சுலோகங்கள் கற்றுக் கொள்கிறார்கள்; நடன வகுப்புகளும் நடக்கின்றன. இவருடைய நடன மாணவர்களில் குறிப்பிடத்தகுந்த பிரபலங்கள் : பிரசாந்த், அர்ச்சனா, ரோகிணி ஆகியோர். ஒருசில மாதங்கள் நடிகை ரேவதியும் இவரிடம் வந்து பரதம் பற்றிய 'தியரி' பயின்றிருக்கிறார்.

அன்னமாச்சாரியார் கிருதிகளை நாட்டிய நாடகமாக்கித் திருப்பதியில் அரங்கேற்ற வேண்டும்; சங்கரர் வாழ்க்கைச் சரிதத்தைத் தமிழில் எழுதி, சங்கரமடத்தில் அதை நாட்டியமாட வேண்டும் என்று பல ஆசைகளைச் சுமந்து கொண்டிருக்கும் இந்த இளைஞரின் இன்னொரு ஆசை, நன்கு பரதநாட்டியமாடத் தெரிந்த ஒரு இந்துப் பெண்ணைத் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது!

- கலாமூர்த்தி

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka